டிசம்பர் 2003 ரூ. 5.00

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



## டான்சி தீர்ப்பு:

# சட்டப்பூர்வ கொள்ளைக்கு ஜே!

www.padippakam.com

# ''ஏகாதிபத்தியங்கள் காகிதப் புலிகளே!''

## — நவம்பர் தின விழாவில் புரட்சிகர அமைப்புகள் அறைகூவல்

''செஞ்சூரியனாக உதித்த நவம்பர் புரட்சியின் ஒளியில் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகக் கோடானுகோடி உழைக்கும் மக்கள் உலகமெங்கும் போராடுகிறார்கள். 'துப்பாக்கி குழாயிலிருந்துதான் அதிகாரம் பிறக்கும்' என்றார் மாவோ! ஆனால், துப்பாக்கி இல்லையே என்று சோர்ந்துவிடவில்லை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகள்! ஒரு அறுவெறுப்புப் பார்வை, கிழிந்த செருப்பு, கவண்டிக்கல் இவற்றையே ஆயுதங்களாக ஏந்தி, ஏகாதிபத்திய நாய்கள் ஓலமிட்டு ஓடும்படி விரட்டுகிறார்கள்.

பள்ளிச் சிறார்கள், தாய்மார்கள், தள்ளாடும் வயோதிகர்கள் எவரும் ஏகாதிபத்தியங்களின் முன் மண்டியிடவில்லை! உயிர்ப்பிச்சைக் கேட்டு கெஞ்சவில்லை. பீரங்கி, விமானங்களைக் கண்டு அஞ்சி நடுங்கவில்லை! எதிரிகளின் குகைக்குள்ளே, மனித வெடி குண்டாக நுழைகிறார்கள்! உயிர் எமக்கு வெல்லமல்ல என்று நிரூபிக்கிறார்கள். ஏகாதிபத்தியங்களைக் காகிதப்புலி என்று கிழித்துக் காட்டுகிறார்கள்.

இப்போராட்ட உணர்வை நெஞ்சிலேந்தி, தமிழகத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள், நவம்பர் புரட்சி தினத்தை வர்க்கத் தணலாக, கனல் பறக்கும் பிரச்சாரமாக மக்களிடம் எடுத்துச் சென்றன.

★ சென்னையில் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. சார்பில் நவம்பர் புரட்சிநாள் புதிய பண்பாட்டு நாளாக மக்களிடம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்து மதவெறி பாசிச எதிர்ப்பு, மறுகாலனிய எதிர்ப்பு என்ற தமது போராட்ட திசைவழியைப் பிரச்சாரமாக்கி கதை, கவிதை, நாடகம், கருத்துரை என எழுச்சியுடன் விழா நடந்தது. 'மலத்தின் கதை', 'தற்குறி', 'கோமளவல்லி' ஆகிய நையாண்டி நாடகங்கள், கதை சொல்லல் என்று பல்வேறு நிகழ்ச்சிகளும் அனைவரின் பாராட்டையும் பெற்றன.

ம.க.இ.க மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன், பு.ஜ.தொ.மு. மாநிலப் பொருளாளர் தோழர் விஜயகுமார் இருவரும் நவம்பர் புரட்சி பற்றியும் அதன்வழி உதித்த நக்சல்பாரி அரசியல் பற்றியும் எழுச்சியுடன் உரையாற்றினர். தோழர்கள் அனைவரும் குடும்பத்துடன் நிகழ்ச்சியில் பங்கேற்றது சிறப்பாக அமைந்தது.

★ நவம்பர் 7 அன்று காலை தஞ்சையில் பு.மா.இ.மு. அலுவலகத்தில் தோழர் இராவணன் தலைமையில் செங்கொடி ஏற்றப்பட்டது. தஞ்சை - பர்மா காலனி 'சைலஜா' அரங்கத்தில் தோழர் முகிலன் தலைமையில் நவம்பர் தின சிறப்பு நிகழ்ச்சிகள், குழந்தைகள் பங்கேற்புடன் உற்சாகமாகத் துவங்கியது. தோழர் காளியப்பன் சிறப்புரையோடு நிகழ்ச்சி நிறைவுற்றது.

மாலை, தஞ்சை கீழவாசலில் தோழர் அருள் தலைமையில் ம.க.இ.க. கொடியேற்றமும் சிற்றுரையுமாக நவம்பர் தின தெருமுனைக் கூட்டம் நடத்தப்பட்டது. நகரின் முக்கிய இடங்களில் தட்டிகள் மற்றும் சுவரொட்டிகள் ஒட்டி வீச்சாகப் பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது.

★ திருவாரூர் மாவட்டம், அம்மையப்பன் கிளை பு.மா.இ.மு. சார்பில் நவம்பர் தினத்தன்று முழக்கங்களுடன், மார்க்சிய ஆசான்களின் படங்கள், தட்டிகள் ஏந்தி சைக்கிள் ஊர்வலம் நடந்தது. அம்பேத்கர் நகரில் தோழர் முரளி தலைமையில் தோழர் ஆசாத் கொடியேற்றி நவம்பர் தின முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். அதைத் தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம் ஆலத்தம்பாடியில் தொழுதூர் கடைத் தெருவில், நவம்பர் தின விளக்க தெருமுனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

★ தர்மபுரி - பென்னாகரம் வட்டம், பூனைகுண்டு காட்டுக் கொட்டாய் ஊரில் ''பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி மலர்ந்த நவம்பர் 7-ஐ உழைக்கும் மக்களின் திருநாளாக்குவோம்!'' ''மறுகாலனியாதிக்கத்தை மரணக்குழியில் மூட மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்!'' என்ற முழக்கங்களுடன் கொடியேற்ற நிகழ்ச்சிகள் சுற்றுவட்டார 8 கிராம வி.வி.மு. கிளைகளிலும் நடந்தது.

இவை தவிர வேதாரண்யம் வட்டம் ஆயக்காரன் புலம், கரூர், ஜெயங்கொண்டம், கோவை, திருச்சி, மதுரை முதலான பகுதிகளில் நவம்பர் புரட்சி நாள் விழா எழுச்சியுடன் நடந்தது. இந்நிகழ்ச்சியைக் கண்ட இடது, வலது போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் அணிகள் தங்கள் கட்சிக்குள்ளே இது போன்ற நிகழ்ச்சிகளை ஏன் நடத்துவதில்லை என கேள்வி எழுப்பத் தொடங்கி உள்ளனர்.




ஜெயா - சங்கராச்சாரி கூட்டணியை நையாண்டி செய்து சென்னையில் சிறுவர்கள் நடத்திய ''கோமளவல்லி'' நாடகத்தில் ஒரு காட்சி.

தஞ்சையில் கள்ளச்சாராய கும்பலுக்கு எதிரான போராட்டத்தில் போலீசாரால் பொய்வழக்கு சோடிக்கப்பட்டு குண்டர் சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்டுள்ள ம.க.இ.க. தோழர் தமிழ் பாண்டி தலைமையில் நவம்பர் புரட்சிநாள் கூட்டம் 7.11.03 அன்று காலை 9 மணிக்குத் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி தொடங்கியது.

தோழர் ஸ்டாலின், தோழர் தமிழ்பாண்டி ஆகியோர் நாட்டை கவ்விக் கொண்டிருக்கும் பார்ப்பன பயங்கரவாதம் பற்றியும் மக்களைப் பாதுகாக்கும் புதிய ஜனநாயகப் புரட்சியின் தேவை பற்றியும் எழுச்சி உரையாற்றினர்.

''ஏழைகளின் மகிழ்ச்சி,'' ''அணிவகுப்போம்'', மற்றும் ''கம்யூனிசப்பூதம்'' என்ற தலைப்புகளில், கவிஞர் பைம்பொழில் மீரான், கவிஞர் துரை மற்றும் தமிழ்பாண்டி ஆகியோர் கவிதை வாசித்தனர்.

தோழர்கள் ஸ்டாலினும், தமிழ்பாண்டியும் கூட்டத்திற்கு இடையே பாடிய புரட்சிகரப் பாடல்கள், இனிப்பை விட சுவையாக இருந்ததாக, குழுமியிருந்த சிறை வாசிகள் பாராட்டினார்கள். தோழர் ஸ்டாலின் நன்றியுரையாற்ற பாட்டாளி வர்க்க சர்வதேசிய கீதம் முழங்கி, கூட்டம் நிறைவடைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 19

**இதழ் 2**

டிசம்பர் 2003

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

அட்டை ஓவியம்:
முகிலன்

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

## டான்சி தீர்ப்பு:

# சட்டபூர்வக் கொள்ளைக்கு ஜே!

''யானையைப் பிடித்துப் பானைக்குள் அடைக்கும் முயற்சி''யில், முட்டாள் அல்லது கோமாளிகள்தாம் ஈடுபடுவார்கள். இவர்கள் என்னதான் முயன்றாலும் யானை பானைக்குள் அடங்காது. பானைதான் உடைந்து போகும். அதைப் போலவே கிரிமினல் குற்றங்கள் பல புரிந்துள்ள ஜெயலலிதாவைச் சட்டத்துக்குள் அடைத்துத் தண்டிக்கும் வீண் முயற்சியில் அவரது எதிர்த்தரப்பினர் மீண்டும் மீண்டும் ஈடுபடுகின்றனர். யானை தினவெடுத்த மிருக பலம் கொண்டது என்பது மட்டுமல்ல; பானையும் எளிதில் உடைந்துவிடக் கூடிய ஒரு பலவீனமான மண்பாண்டமாக இருக்கிறது. அதாவது ஜெயலலிதாவோ, பணபலத்தால் எதையும் சாதித்துவிட முடியும், யாரையும் விலைக்கு வாங்கிவிட முடியும் என்பதில் உறுதியாக விளங்குபவர். ஆனால், சட்டமோ, செல்வாக்குமிக்க குற்றவாளிகள் எளிதில் தப்பிடக்கூடிய சந்துபொந்துகள் நிறைந்ததாக உள்ளது.

1991-96-இல் முதல்வராக இருந்த ஜெயலலிதா, தான் பங்காளியாக இருந்த ஜெயா பதிப்பகம் மற்றும் சசி தொழிலகம் ஆகியவற்றுக்காக தமிழக அரசின் ''டான்சி'' நிறுவன நிலங்களை அதிகார முறைகேடுகள் செய்து அரசுக்கு மூன்றரைக் கோடி ரூபாய் நட்டமேற்படுத்தி தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். இதற்காக அரசு அதிகாரிகளுடன் சேர்ந்து சதி செய்திருக்கிறார். ஊழல் தடுப்புச் சட்டத்தையும், அரசு ஊழியர், அரசுச் சொத்தை வாங்கக் கூடாது என்ற சட்டம் மற்றும் நடத்தை நெறிமுறைகளை மீறியிருக்கிறார். அரசு சொத்துக்களுக்குக் காவலராக இருக்க வேண்டிய முதலமைச்சர் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டார். சசிகலாவும் மற்றும் சிலரும் இந்தக் குற்றங்களுக்குத் தூண்டுகோலாகவும் உடந்தையாகவும் இருந்தனர். இரு வழக்குகளாக இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு சென்னை தனிநீதி மன்றத்தில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயா-சசி கும்பல் மேல்முறையீடு செய்தபோது, அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிராகரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். தி.மு.க. சார்பாக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. கட்டுச் சோற்று மூட்டைக்குள் ஒளிந்து கொண்ட பெருச்சாளியைப் போல இந்த வழக்கில் சுப்பிரமணிய சாமியும் புகுந்து கொண்டார்.

ராஜேந்திரா பாபு மற்றும் வெங்கடராம ரெட்டி ஆகிய இருவரைக் கொண்ட உச்ச நீதிமன்ற ஆயம் வழக்கை விசாரித்து, கடந்த ஆண்டு செப்டம்பரில் தீர்ப்பை நிறுத்தி வைத்து விட்டு, வெளிநாட்டுப் பயணம் மற்றும் வேறு வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டது. ஓராண்டு இரண்டு மாதங்களாகத் தீர்ப்புக் கூறாமல் இழுத்தடித்து விட்டு இறுதியில் ஜெயா-சசி கும்பல் குற்றமற்றது என்று விடுதலை செய்தது. இவ்வளவு காலம் இழுத்தடிப்பதற்கான சட்ட நுணுக்கங்கள், சட்ட ஆய்வுகள் எதையும் டான்சி நீதிமன்றத் தீர்ப்பில் காண முடியவில்லை. ''நீதி வழங்கப்படுவதை விட, நீதி வழங்கப்பட்டதான ஒரு தோற்றம் தரப்பட்டிருக்கிறது'' என்று கருதவே இடமிருக்கிறது. இப்படிக் கருதுமளவுக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தாமதமாகவும், முரண்பாடுகளைக் கொண்டதாகவும் உள்ளது. அதாவது, தமது தீர்ப்புக்கு வலிந்து நியாயம் கற்பிக்கும் முயற்சியில் நீதிபதிகள் இறங்கி, அந்த முயற்சியில் தோற்றுப் போயும் உள்ளனர். நீதியை நிலை நாட்டுவது என்பதற்குப் பதிலாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாகச் சட்டத்திலுள்ள சந்து பொந்துகளைத் தேடி வாதங்கள் புனையப்பட்டிருக்கின்றன.

இந்தியக் குற்றவியல் தண்டனை சட்டம் 169-இன் கீழ், சில அரசு சொத்துக்களைப் பொது ஊழியர்கள் வாங்க முயற்சிப்பதோ, வாங்குவதோ தண்டனைக்குரியதாகும். ஆனால், எந்தெந்தச் சொத்துக்களை வாங்குவதோ, வாங்க முயற்சிப்பதோ தண்டனைக்குரியது என்று வரையறுக்கப்படவில்லை. வரையறுக்கப்படாத விவகாரங்களில், அவை தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தித் தீர்ப்புகள் வழங்கப்பட்ட சான்றுகள் உண்டு. அப்படி வரையறுக்கப்படாத விவகாரத்தில் எது நீதியோ அதன்படி தீர்ப்புக் கூறுவதுதான் சரியானதும் ஆகும்.

இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டம் 169-இல் தெளிவான வரையறை இல்லாவிட்டாலும், அரசின் 1968-ஆம் ஆண்டு அரசு ஊழியர் நடத்தை நெறிமுறை ஆணையின்படி, அரசு சொத்து எதுவானாலும் அரசு ஊழியர் வாங்குவதற்குத் தடை செய்யப்படுகிறது. இது ஒன்றும் ''தார்மீக ஒழுங்கை அறிவுறுத்தவோ, வழி

காட்டவோ வகுக்கப்பட்டதல்ல; அரசியல் சட்டம் மாநில அரசுக்கு அளித்துள்ள நிர்வாக அதிகாரத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்கள் நடத்தை நெறி, அரசு ஊழியரின் செயலைக் கட்டுப்படுத்துவதாகும். அரசு சொத்தை வாங்கியதன் மூலம் அந்த விதியை ஜெயலலிதா மீறி விட்டார்'' என்பது குற்றஞ்சாட்டுவோரின் வாதம்.



டான்சி வழக்கில் விடுதலையான ஜெயா கடவுளுக்கு நன்றி மட்டும் சொன்னார். அவரது தொண்டரோ, கட்டை விரலைக் காணிக்கையாகக் கொடுத்தார்.

இந்த வாதத்தை நிராகரித்த உச்சநீதிமன்றம், அரசு ஊழியர் நடத்தை நெறிமுறை ஒரு குற்றவியல் தண்டனை நீதிமன்றத்தின் அதிகாரம் பெற்ற சட்டபூர்வமானது அல்ல; வழிகாட்டும் நிர்வாக நெறிமுறை மட்டும்தான் என்று கூறி, ஜெயலலிதாவை விடுதலை செய்துள்ளது. அரசு ஊழியர் - ஆசிரியர் வேலை நிறுத்த வழக்கில் இதே நடத்தை நெறிமுறையை மீறியது தவறானது, இதனால் அவர்களின் வேலை நிறுத்தம் சட்டவிரோதமானது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. குற்றவாளி ஜெயலலிதாவுக்கு சாதகமாயும் நியாய உரிமைக்குப் போராடிய அரசு ஊழியர்களுக்கு எதிராகவும் ஒரே நடத்தை நெறிமுறைக்கு உச்ச நீதிமன்றம் வெவ்வேறு வியாக்கியானங்களைச் செய்துள்ளது.

ஊழல் தடுப்புச் சட்டம் 13 (ஐ) (d) பிரிவின் கீழ் ''ஒரு அரசு ஊழியர் அதிகார முறைகேடு மூலமாகவோ, ஊழல் செய்தோ, சட்டவிரோத வழிகளிலோ அல்லது பொதுநலனைப் புறக்கணித்தோ மதிப்புடைய பொருளையோ, நிதி ஆதாயத்தையோ தானோ பிற நபர்களுக்காகவோ பெறக் கூடாது''. என்று கூறுகிறது. இந்த வகையிலான குற்றத்தை ஜெயலலிதாவும், தொழில் அமைச்சராக இருந்த முகமது ஆசிப், டான்சி தலைவராக இருந்த சீனிவாசன், துணை ஆட்சியாளர் நாகராஜன், ஜெயலலிதாவின் சிறப்புச் செயலாளர் கற்பூர சுந்தரபாண்டியன் ஆகியோர் செய்ததாகவும் ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் குற்றச்சாட்டுகளைத் தகுந்த விளக்கமின்றி, அதற்குப் பதிலாக தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டு வளைந்து நெளிந்து நியாயம் கற்பித்து, உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது: 'டான்சி நிலங்களை விற்பது என்று 1985 முதல் பல்வேறு தீர்மானங்களை அரசு எடுத்துள்ளது. டான்சி சொத்துகளைப் பொது நலன்களுக்காக விற்கப்பட்டது என்கிற போது, அதை சந்தை மதிப்புக்கு குறையாது வாங்குவது என்பது குற்றமாகாது. மேலும், ஒரு அரசு ஊழியர் என்கிற முறையில் டான்சி சொத்துக்களை வாங்குவதற்கு அதிகார முறைகேடு எதையும் ஜெயலலிதா செய்யவில்லை. மோசடியாகவும், நேர்மையற்ற முறையிலும் வாங்கப்படவில்லை.'

மேலும் 'குற்றவியல் சட்டம் 120 (பி) இன் கீழ் சதிச் செயல் எதுவும் செய்யவில்லை. வெவ்வேறு நிலைகளில் ஒரே எண்ணத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எப்படி வந்திருக்க முடியும்? என்ன பொது சதி நோக்கம் என்பது தெளிவாக்கப்படவில்லை.' என்று உச்சநீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

டான்சி நிலத்தை விற்பனை செய்வது என்று அரசு முடிவு செய்தது என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்புச் சொல்கிறது. இந்த முடிவை கடைசியாக எடுத்தவர் ஜெயலலிதா. இதற்கு முன்பு வழிகாட்டும் மதிப்புக்கு குறைவாகவே மற்றவர்கள் டெண்டர் கோரப்பட்டு நிராகரிக்கப்பட்டது. ஜெயலலிதா வாங்குவது என்று முடிவு செய்தபோது சந்தை விலையை விடக் குறைவான வழிகாட்டும் மதிப்பு தீர்மானிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரி எதிர்ப்புத் தெரிவித்த பின்னும் அவரை மீறி, ஜெயலலிதாவின் சிறப்புச் செயலாளர் கற்பூர சுந்தரபாண்டியன் கோப்புகளை எடுத்துக் கொண்டு போய் அதிகாரிகளை மிரட்டி ஒப்புக் கொள்ளச் செய்து வேக வேகமாகக் காரியமாற்றியுள்ளார். இந்த முடிவை ஜெயலலிதா பார்வைக்கு முறைப்படி அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும் என்று துறை அதிகாரி வற்புறுத்தியுள்ளார். அப்படிச் செய்தால், டான்சி நிலத்தை விற்பது என்று தானே முடிவு செய்து ஜெயலலிதா தனக்கு விற்றுக் கொள்வது அம்பலப்பட்டுவிடும் என்பதால், அவருக்கு கோப்பை அனுப்பாமல், விதிகளை மீறி, அப்போதைய தொழில் அமைச்சர் முகமது ஆசிப், தான் மட்டுமே கையொப்பமிட்டு விற்பனையை முடித்துள்ளார்.

முந்தைய டெண்டர் விலையைக் காட்டிலும் ஜெயலலிதா கும்பல் செலுத்திய தொகை அதிகம் என்பதை காரணங்காட்டி அவருக்கும் இலாபமில்லாமல், டான்சிக்கும் நட்டமில்லாமல் விற்பனை நடந்து முடிந்ததாக வாதிடுகிறார்கள். ஆனால், ஒரு தில்லு முல்லு நடந்துள்ளது. முந்தைய டெண்டர் விலையை விடச் சிறிது கூடுதலாகவும் சந்தையை விட மிகக் குறைவாகவும் வழிகாட்டும் விலை நிர்ணயம் செய்ததாலும், ஜெயா கும்பல் குறைவான முத்திரைத் தாள் கட்டணம் செலுத்தியதாலும் 3.5 கோடி ரூபாய் இக்கும்பலுக்கு இலாபமும், அரசுக்கு நட்டமும் ஏற்பட்டுள்ளது.

சதிக் குற்றச்சாட்டை நிராகரிக்கும் நீதிபதிகள் மறுகணமே மறைமுகமாக அதை ஒப்புக் கொள்ளுகின்றனர். 'ஒரு வாதத்திற்காகக் கூறுகிறோம்: ஒரு சில அதிகாரிகள் ஆர்வமிகுதியால் ஜெயலலிதா டான்சி சொத்தை வாங்குவதில் ஆர்வமாக உள்ளார் என்று எண்ணி அதற்கு ஆதரவாகச் செயல்பட்டு இருந்திருக்கலாம். என்றாலும் வெவ்வேறு நபர்களிடையே ஒரு சதிகார எண்ணம் இருந்தது என்று கூற முடியாது. அதோடு, முதலமைச்சர் நேரடி மேற்பார்வையில் இல்லாத ஒரு சொத்தை வாங்கினார் என்பதற்காக நம்பிக்கை துரோகம் செய்து விட்டார் என்றும் கூறமுடியாது.'

இவ்வாறு, சட்டத்தின் சந்து பொந்துகளைப் பயன்படுத்தி, நீதியை

www.padippakam.com

வளைத்து ஜெயா-சசி கும்பலை உச்ச நீதி மன்றம் விடுவித்த போதும், அது தனது தீர்ப்புக்கே முரணாக சில கருத்துக்களை தெரிவித்திருக்கிறது. முதலாவதாக, 'டான்சி சொத்து விற்பனை ஆவணங்களில் தான் கையொப்பம் இடவேயில்லை என்று ஜெயா விசாரணை நீதிமன்றத்தில் பொய் சாட்சியும் கூறியிருக்கிறார் என்பதை ஏராளமான ஆதாரங்கள் காட்டுகின்றன.'

'சாதாரண அதிகாரிகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள சொத்துக்களை சட்டப்படி தாங்களே வாங்கிக் கொள்ள முடியாது. ஜெயலலிதாவால் தலைமை தாங்கும் அரசாங்கம் டான்சி சொத்துக்களை விற்பதற்கு அவசியமான அனுமதியை வழங்கியிருக்கிறது, அவரே அதை விலைக்கு வாங்கியும் இருக்கிறார் என்கிற போது இந்த நலன்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுகின்றன. டான்சி சொத்தை வாங்குவதில் ஜெயலலிதா ஆர்வமாக இருக்கிறார் என்பதை அறிந்த அதிகார வர்க்கத்தினர் அவர் விருப்பப்படியே குறைந்த விலைக்கு பிரச்சினை ஏதும் இன்றி அதைச் செய்து முடிப்பதில் கூடுதலான ஆர்வம் காட்டுவார்கள். ஆனால், ஒரு கிரிமினல் குற்றத்தில் தண்டிக்கப்படுவதற்கு பருண்மையான ஆதாரங்கள் தேவை.'

'அரசு ஊழியர் நடத்தை நெறி முறை சாரத்தை - நுட்ப ரீதியில் இல்லை என்றாலும் அது உணர்த்தும் பொருளிலிருந்து ஜெயலலிதா மீறியிருக்கிறார். ஒரு சட்டம் அரசாங்கத்தின் கீழ்நிலை அதிகாரிகளுக்கு ஒரு மாதிரியாகவும் முதலமைச்சருக்கு வேறுமாதியாகவும் இருக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. நடத்தை நெறி முறை என்பது அருங்காட்சியகத்தில் வைத்திருக்கும் ஒரு அலங்கார பழம் பொருள் அல்ல; செயல்படுத்துவதற்கானதுதான். இந்த அம்சங்கள் எங்களுடைய மனசாட்சியை உறுத்துகின்றன.'

''பொது வாழ்வில் இருக்கும் நபர்கள் கிரிமினல் வழக்குகளில் எழக்கூடிய சட்டநுட்ப வாதங்களில் ஒளிந்து கொள்ளக் கூடாது. நல்ல அரசாங்க நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டாக அதிகாரத்தில் இருப்பவர்கள் நல்ல தார்மீக ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். முதல் குற்றவாளியான ஜெயலலிதா குற்றமிழைத்திருக்கிறாரா இல்லையா என்கிற உண்மைக்கு அப்பாற்பட்டு அவர் தமது மனசாட்சிக்குப் பதிலளிக்கும் வகையில் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். எவ்வித நிபந்தனையும் இன்றி டான்சி சொத்தை திருப்பி கொடுப்பதே பரிகாரமாக அமையும். ஒரு பொதுச் சொத்தை சொந்த ஆதாயத்துக்காகக் கைப்பற்றிக் கொள்வதற்கு விதிமுறைகளை வளைப்பதும் நடத்தை நெறி முறையை அதன் உண்மையான பொருளில் இருந்து, சாரத்தை மீறுவதும் சரிதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.''

மனசாட்சி என்று எதுவுமே இல்லாத ஜெயலலிதா, பரிகாரம் தேடிக் கொள்வது ஒருபுறம் இருக்கட்டும். முதல் நோக்கிலேயே குற்றவாளிகள் என்று அறியப்படும் நபர்கள் மீதான வழக்கை வெறும் சட்ட நுணுக்க வாதங்களை அடுக்கித் தள்ளுபடி செய்து விட்டு, தமது மனசாட்சிக்கு கவலை அளிப்பதாக கூறிக்கொள்ளும் நீதிபதிகள்தாம் தகுந்த பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். ஏனென்றால், இனி அரசு சொத்துக்களை அரசு ஊழியர்கள் வாங்கிக் கொள்வதற்குத் தடையில்லை என்கிற முன்மாதிரியை இத்தீர்ப்பின் மூலம் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இனி சட்டம் வெவ்வெறு நபர்களுக்கு வெவ்வெறு மாதிரி வியாக்கியானம் செய்யப்பட்டு நிரபராதிகள் தண்டிக்கப்படலாம், குற்றவாளிகள் விடுவிக்கப்படலாம். சட்டத்தின் உட்கிடக்கையை மீறுபவர்களுக்குத் தண்டனை கிடையாது; அறிவுரை மட்டும்தான் வழங்கப்படும். தெரிந்தே குற்றம் இழைப்பவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் பெரிய சம்பளம் பெறும், திறமையான வழக்கறிஞர்களை வைத்து சட்ட நுட்பங்களை மீறவில்லை என்று நிரூபித்தால் போதும்; தண்டனையில் இருந்து தப்பி விடலாம்.

இந்த உச்சநீதி மன்ற தீர்ப்பு வெளி வந்த பிறகு, நாட்டில் தார்மீக ஒழுக்க உபாசகர்கள் திடீரென்று அதிகரித்து விட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள், மூத்த குடிமகன்கள், அரசியல் திறனாய்வாளர்கள், நாட்டு நல விரும்பிகள் எல்லோரும் ஜெயலலிதாவின் மனசாட்சிக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். இனி ஜெயலலிதா தவறுக்கு தார்மீகப் பொறுப்பு ஏற்று பதவி விலக வேண்டும், ஜனநாயகத்தை - சட்டத்தை மதித்து நடக்க வேண்டும், பழிவாங்கும் போக்கைக் கைவிட வேண்டும், சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும், மாற்றுக் கருத்தை - விமர்சனங்களை மதிக்க வேண்டும் என்றெல்லாம் ஜெயலலிதாவின் மனசாட்சிக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஆனால், ஜெயலலிதாவோ, மன சாட்சியா, அது எங்கே கிடைக்கும் என்று விசாரிக்கும்படி உளவுத் துறையை ஏவிவிடக்கூடியவர். அது என்ன விலையானாலும் உருட்டி மிரட்டி பேரம் பேசி உடனடியாக வாங்கி வந்து விடும்படி டி.டி.வி. தினகரனுக்கு ஆணையிடக் கூடியவர். அவர் தெரிந்தே குற்றம் செய்யக் கூடியவர்; நீதியையும் சட்டத்தையும் வளைக்கக் கூடியவர் என்பதற்கு சமீபத்திய சொத்துக் குவிப்பு வழக்கு மாற்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்களே சான்றாகும்.

காவல் நிலைய கற்பழிப்பு வழக்குகள், வாச்சாத்தி - சின்னாம்பதி கும்பல் கற்பழிப்பு வழக்குகள் பற்றி 'நட்டஈடு பெறுவதற்காகவே கற்பழிப்பு குற்றசாட்டுகளை இந்த பெண்கள் கூறுகிறார்கள்' என்று ஜெயலலிதா கருத்துத் தெரிவித்தார். தன்னைக் கொலை செய்ய முயற்சிகள் நடப்பதாக கூறிய பொய்கள்; ராஜீவ் கொலைக்கு கருணாநிதி மீதும் மூப்பனார் மீதும் பழிபோட்ட பொய்கள்; எம்.ஜி.ஆர். சாவுக்கு அவர் குடும்பத்தினர் மீதே சுமத்திய குற்றச்சாட்டுகள் - இப்படி ஏராளமான சம்பவங்கள். தெரிந்தே புளுகிவரும் ஜெயலலிதாவிடம் மனசாட்சியைத் தேடி வேண்டுகோள் விடுப்பது பைத்தியக்காரத்தனம் இல்லையா?

சுய முரண்பாடுகளைக் கொண்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அப்படியே ஏற்றுக் கொண்டு ஜெயலலிதாவின் மனசாட்சிக்கு வேண்டுகொள் விடுக்கும் அளவுக்கு இவர்களெல்லாம் தாழ்ந்து போவது ஏன்? நாட்டின் அரசியல் அமைப்புகள் அனைத்தின் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்ட நிலையில் அவர்கள் தமது பிரச்சினைகளுக்கு இறுதியாக நம்பிக்கை வைக்கும்படி கூறிவந்தது, நீதி மன்றங்களைத்தான். அவற்றின் மீதும் மக்கள் நம்பிக்கை இழக்கும் பட்சத்தில் வேறு வகையான தீர்வுகளுக்கு, போராட்டங்களுக்கு போய் விடுவார்கள் என்று அச்சம் தான் இவர்கள் இவ்வாறு சுருங்கிக் கொள்வதற்கு முக்கிய காரணமாக உள்ளது. ஆனால், இந்த வழக்கில் மட்டுமல்ல; இன்னும் ஏராளமான வழக்குகளில் உச்ச நீதிமன்றம் உட்பட நாட்டின் எல்லா வழக்கு மன்றங்களுமே நம்பிக்கைக்குரியன அல்ல. குற்றவாளிகளைத் தண்டிக்கத் தவறுவது மட்டுமல்ல; தாமே குற்றம் புரிபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. ●


படிப்பகம்

www.padippakam.com

# பத்திரிகைகள் மீது தாக்குதல்:
# பாசிச ஜெயாவைத் திருத்த முடியுமா?

சகிப்புத் தன்மை இல்லாமை, விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவமின்மை, ஜனநாயம் உரிமைகளை மதிக்காத போக்கு... — ஜெயலலிதாவிடம் காணப்படும் இத்தகைய பண்புகள் -அணுகுமுறையின் காரணமாகத்தான் பத்திரிக்கைகள் மீது, குறிப்பாக ஆங்கில நாளேடான ''தி இந்து'' மீது அடக்குமுறையை ஏவியுள்ளார் என்று ஜெயலலிதாவின் எடுபிடிகள் தவிர, அனைவராலும் கூறப்படுகிறது. ஆனால், இது உண்மையின் ஒரு பகுதிதான்.

மூட்டைப் பூச்சி, கரப்பான் பூச்சி, பெருச்சாளி போன்ற ''ஜந்துக்கள்'' தங்கள் மீது வெளிச்சம்பட்டதும் சந்து பொந்துகளுக்குள் ஓடி ஒளிந்து கொள்ளும். அவை போன்ற பழக்கம் - பண்பு கொண்டதுதான் ஜெயலலிதா சசிகலா கும்பல்.

பொதுவாழ்வில் உள்ளவர், மாநில முதலமைச்சர் பதவியில் உள்ளவர் போயஸ் மாளிகையின் நெடிய மதில்களுக்குப் பின்னே, எங்கோ உள்ள திராட்சைத் தோட்டத்துக்கு மத்தியில் உள்ள பண்ணை வீட்டில் மர்மமான வாழ்க்கை நடத்துகிறார். இந்தக் கும்பலின் தொழில், வருமானம், சொத்துபத்துக்கள், செயல்பாடுகள் எதுவும் பகிரங்கமாக நடப்பதில்லை. மாந்திரீகம், யாகம் - வேள்வி, பூசை என்று வழிபாடுகள் கூட இரகசியங்கள் நிறைந்தவையாக இருக்கின்றன.

ஜெயலலிதா - சசிகலா கும்பலின் இன்னொரு சட்டத்திற்கு அப்பாற்பட்ட அதிகார மையமாகச் செயல்படும் நடராஜன் - சசிகலாவும் அவர்களுடைய உறவினர்களும் கூட நிழல் மனிதர்களாகவே வாழ்கிறார்கள். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இரகசிய உலகப் பேர்வழிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பலகோடி ரூபாய் சொத்துக் குவிப்பு, பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆடம்பரப் பொருட்கள், அந்நியச் செலாவணி மோசடி, இலண்டனில் ஓட்டல், மலேசிய சுசீலாவுடன் பண வரவு - செலவு என்று ஏதாவது கிரிமினல் வழக்குகளில் சிக்கினால்தான் இந்தக்கும்பலைப் பற்றிய சில செய்திகள் - உண்மைகள் வெளியே வருகின்றன.

ஜெயலலிதா - சசிகலா கும்பலின் சொந்த வாழ்க்கை, தனிப்பட்ட விவகாரங்கள் கூட சமூகத்தை, சட்ட முறைமைகளைப் பாதிக்காதவரை யாரும் கவனம் செலுத்தப் போவதில்லை. இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் என்கிற போதுதான் சமூக அக்கறைக்குரியதாக மாறுகின்றன. இவை ஒருபுறம் இருக்க...

ஜெயலலிதாவே எப்படி ஆட்சி நடத்துகிறார் என்பது மக்களின் அக்கறைக்குரியது அல்லவா? தனது கொத்தடிமைகளின் கட்சியை எப்படி வேண்டுமானால் அவர் நடத்தலாம். ஆனால், கட்சி நிர்வாகிகளில் யாரையும், எப்போதும் எதேச்சதிகாரமாக நியமனம் செய்வதும் கொலு பொம்மைகளை இடம்மாற்றி வைப்பது போல (தூக்கியடிப்பதும், பதவி கொடுப்பதும், பிடுங்கிக் கொள்வதும்) அமைச்சர்களையும் அதிகாரிகளையும் எந்தக் காரணமும் விளக்கமும் கொடுக்காமல் பந்தாடுவதும் வதந்திகளுக்கும் கிசுகிசுக்களுக்கும்தான் வழிவகுக்கிறது.

முதலமைச்சரின் அதிகாரத்துக்குட்பட்ட செயல்கள்தாம் என்கிற சட்ட உரிமைக்குள் புகுந்து கொண்டு அரசாங்க நிர்வாகத்தையே சதிச் செயல் செய்வதைப் போல நடத்துகிறார். அரசு நிர்வாகத்தையே திரைமறைவு நாடகமாக நடத்துவது அந்தக் கும்பலின் பல்வேறு அதிகாரமுறைகேடுகளுக்கு வசதியாக இருக்கிறது. மக்கள் மன்றத்திலோ, நீதிமன்றத்திலோ அரசு காரியங்களுக்கு விளக்கமளிப்பதைத் தவிர்ப்பது அக்கும்பலுக்கு அவசியமாகவும் உள்ளது. ஜெயலலிதாவின் நடவடிக்கைகளுக்கு எந்த ''கோஸ்ட்'' - கூலி எழுத்தாளர்களுக்கும் விளக்கமோ, நியாயமோ கற்பிக்கும் திறமை கிடையாது.

பல வழக்குகளில் நீதிமன்றங்களில் கேட்கப்படும் கேள்விகளுக்கு விளக்கமளிக்க முடியாமல் ஜெயலலிதாவின் போலீசும் வக்கீல்களும் திணறுவதைப் பார்க்கிறோம். ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் மற்றும் அவரது கூட்டாளிகள் மீது முன்பு போதைப் பொருள் வழக்குப் போடப்பட்டுச் சிறையிலடைக்கப் பட்டனர். இப்போது மதுரைப் பெண்கள் செரினா மற்றும் அவரது தாயார் மீது கஞ்சா வழக்குப் போட்டுத் துன்புறுத்துகிறார்கள். இந்த வழக்குகள் பற்றிய விவரங்கள் குறித்து போலீசுத் தரப்பில் கூறப்படும் செய்திகள் யாருமே நம்பக் கூடியதாக இல்லை. வதந்திகளாகவும், கிசுகிசுக்களாகவும் பத்திரிக்கைகளில் வரும் செய்திகள்தாம் நம்பக்கூடியனவாக உள்ளன. அரசும் போலீசும் தம்நிலையை பகிரங்கமாக முன்வைப்பதற்குப் பதில் எதையோ மூடிமறைப்பாக எண்ணுவதற்குத்தான் இடமுண்டு. சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள ஜெயலலிதா அரசு ரசிகரான நீதிபதியே இந்தக் கருத்தைத்தான் வெளிப்படுத்தினார். (பின்னர் அவர் 'பல்டி' அடித்துவிட்டார் என்பது வேறு விஷயம்).

ஆனால், சோரம்போய்விடக் கூடியவையாக, ஊசலாடிச் சமரசம் செய்து கொள்ளக் கூடியவையாக பத்திரிக்கை உலகம் உள்ளது என்றாலும் செய்திகளையும் அவற்றின் பின்னணிகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதுதான் பத்திரிக்கைத் தொழிலின் அடிப்படைப் பணியாக உள்ளது.

இருட்டில் ஒளிந்துகொள்ள விளக்கணைக்கும் கும்பல், இருட்டில் நடக்கும் விவகாரங்களை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதற்காக அலையும் பத்திரிக்கையாளர்கள் மீது ஆத்திரப்படுவதும், அதிகாரத்தில் இருக்கும் போதுபாய்ந்து குதறுவதும் அசாதரணமான தல்ல. இயல்பானதுதான்.

1991-96 ஆட்சிக் காலத்தில் பத்திரிக்கையாளர்கள் மீது பலவகையிலும் தாக்குதல் தொடுத்த ஜெயலலிதா, அவர்கள் மீதான வெறுப்பைப் பகிரங்கமாகவே உமிழ்ந்திருக்கிறார். டான்சி நில பேர ஊழல் வழக்கில் தண்டிக்கப் பட்டிருந்த அவர், அப்போதைய ஆளுநர் பாத்திமா பீவியோடு சதித்தனமாகச் சட்டவிரோதமாகக் கூட்டுச் சேர்ந்து 2001-இல் பதவியேறினார். பத்திரிக்கைகளுக்கு எதிரான அவரது அடாவடித்தனம் உடனடியாகவே தொடங்கிவிட்டது.

ஆளுநர் மாளிகையில் நடந்த


படிப்பகம்

www.padippakam.com

மந்திரிகளின் பதவியேற்பு நிகழ்ச்சிக்கு ஜெயா டி.வி மற்றும் விசுவாச ஏடுகளின் செய்தியாளர்கள் தவிர, மற்றவர்கள் ''கேட்''டுக்கு வெளியே நிறுத்தப்பட்டனர். சாலையில் அமர்ந்து மறியல் செய்த செய்தியாளர்கள் போலீசாரால் விரட்டப்பட்டனர். ஏதோ தவறான புரிதலால் நேர்ந்துவிட்டதென்று ஜெயலலிதா கூறியதை செய்தியாளர்கள் நம்பினர். அவர் திருந்தி விட்டார், பக்குவமடைந்து விட்டார் என்றெல்லாம் எழுதினர்.

அடுத்து, தி.மு.க. ஆட்சியில் விட்டுச் சென்ற கையிருப்பு அரிசியெல்லாம் புழுத்துப் போனவை என்று ஜெயலலிதா குற்றஞ்சாட்டினர். அது புழுத்துப் போகவில்லை; ஜெயலலிதாதான் புளுகுகிறார் என்று நிரூபிக்க விழுப்புரம் அரசு கிடங்குக்கு பொன்முடியுடன் போன சன் தொலைக்காட்சி நிருபர் மீதும் அத்துமீறி நுழைந்து அரசு ஊழியரைத் தாக்கியதாகப் பொய்வழக்குப் போடப்பட்டது. இதை மறுத்து அந்தச் செய்தியாளரை விடுவிக்கக் கோரி மனு கொடுக்க கோட்டைக்குப்போன செய்தியாளர்களைப் பார்க்க மறுத்ததோடு, சாலை மறியலில் ஈடுபட்டவர்களைத் தடியடி நடத்தி விரட்டியது, ஜெயா அரசு. இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த செய்தியாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

பிறகு ஒருமுறை, கருணாநிதியை நள்ளிரவில் வீடு புகுந்து சட்டவிரோதமாக இழுத்துக் கொண்டுபோனபோது, கைது செய்யப்பட்டவர்களைச் சந்தித்து செய்தி சேகரிக்க முயன்ற செய்தியாளர்கள் அடித்து விரட்டப்பட்டனர். கருணாநிதி மீதான அடக்குமுறையைக் கண்டித்து தி.மு.க நடத்திய பேரணி மீது அயோத்தி குப்பம் ''தாதா'' வீரமணி கும்பலை ஏவி சிலரை வெட்டிக்கொன்றது ஆளும் கும்பல். அதைப் படம் பிடித்து செய்தி சேகரித்த நிருபர்கள், புகைப்படக்காரர்களை ரௌடிகளும் போலீசும் கூட்டுச் சேர்ந்து கொண்டு, அடித்து நொறுக்கினர். போலீசின் மாநிலத் தலைமையகத்துக்குள் இழுத்துச் செல்லப்பட்ட நிருபர்களைத் தாக்கியதோடு, அவர்களின் ''வீடியோ'' புகைப்படக் கருவிகள் உடைத்து வீசப்பட்டன.

இதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்த பத்திரிக்கையாளர்கள் கைது செய்து சிறையிலடைக்கப்பட்டனர். பத்திரிக்கை கவுன்சிலிடம் செய்தியாளர்கள் கொடுத்த புகார் மீது கண் 'துடைப்பு விசாரணை நடத்தப்பட்டது.



ஜெயாவின் அரசியல் ஆலோசகர் துக்ளக் ''சோ''வைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, பத்திரிக்கை சுதந்திரம் பற்றி பேட்டி கொடுக்கும் ''இந்து'' ராம் (நடுவில்).

அதிலும் தாக்கிய போலீசும் தாக்குண்ட செய்தியாளர்களும் வரம்பு மீறி செயல்படக்கூடாது என்ற கண்டனமும் அறிவுரையும் கூறப்பட்டதோடு, ஜெயலலிதாவுடனான ''மோதலை''க் கைவிட்டுச் சமரசமாகவே பத்திரிக்கையாளர்கள் விரும்பினர்.

ஆனால், எப்போதும் போலவே பத்திரிக்கையாளர்களை எதிரிகளாகவே ஜெயலலிதா கும்பல் கருதியது. பத்திரிக்கைகள் மீது தனக்குள்ள ஆத்திரத்தை வெளிப்படுத்துவதற்கான உதாரணமாக ''நக்கீரன்'' ஏட்டின் மீது பாய்ந்து குதறியது. அந்த ஏட்டின் செய்தியாளர் சிவசுப்பிரமணியத்தை கர்நாடகப் போலீசுக்குப் பிடித்துக் கொடுத்து ஓராண்டுக்கு மேலாகச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்தனர். பல்வேறு பொய் கிரிமினல் வழக்குகள் போட்டனர். 'ரெய்டு' நடத்தி நிருபரின் குடும்பத்தினரை உருட்டி மிரட்டினர். பின்னர் அந்த ஏட்டின் கோவை நிருபர் மீது பொய்யான கொலை வழக்குப் போட்டு சிறையிலடைத்தனர். ''நக்கீரன்'' ஆசிரியர் கோபாலை எதாவது ஒரு கிரிமினல் வழக்குப் போட்டு சிறையில் தள்ள பலமுறை எத்தனித்தனர்.

கடைசியில், ஒரு கொலை வழக்கைப் புனைந்து, நக்கீரன் கோபாலை சம்பந்தப்படுத்தி, கைது செய்து, உரிமம் இல்லாத துப்பாக்கியும், தடை செய்யப்பட்ட அமைப்பின் துண்டுப் பிரசுரமும் வைத்திருப்பதாகப் புளுகி ''பொடா''வில் சிறையில் அடைத்தது ஜெயலலிதா அரசு. சிவசுப்பிரமணியனுக்கு ஆதரவாக உள்ளூரில் பல தீர்மானங்கள், கண்டனங்களுக்குப் பிறகு கர்நாடக முதல்வர், அத்வானி, வாஜ்பாய் வரை முறையீடு செய்தனர் பத்திரிக்கையாளர்கள். ஆனால், நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்டதற்கு இப்படி எதுவும் செய்யவில்லை. அந்த அளவுக்குப் ''பொடா'' அவர்களை மிரட்டி ஒடுக்கி வைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் நக்கீரனுக்கு அடுத்து தினகரன், தி இந்து ஆகிய இரு நாளேடுகள் மீது ஜெயலலிதா சசிகலா கும்பல் ஆத்திரமுற்றிருக்கிறது. இந்த இரு நாளேடுகள் மீது பல்வேறு அவதூறு வழக்குகள் தொடுத்துத் தொல்லை தருவதில் இருந்தே இதை உணர முடியும். தி.மு.க. - ம.தி.மு.க. ஆதரவு தினகரன் ஜெயலலிதாவைக் கடுமையாக எதிர்க்கும் நாளேடு.

2001 தேர்தல் முடிய ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்று அவருக்கு ஆதரவான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தது ''தி இந்து''. ஆனால், ''நான் ஒரு பாப்பாத்திதான். என்னை யாரும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது'' என்று சட்டப் பேரவையிலேயே அறிவித்தவர் ஜெயலலிதா. ஜெயாவைப் போல, அப்படி பகிரங்கமாக அறிவித்துக் கொள்ளவில்லை என்றாலும், அதே எண்ணத்தோடு நடத்தப்படுவதுதான் ''தி இந்து.''


படிப்பகம்

www.padippakam.com



**பத்திரிகையாளர்கள், தங்களின் கைகளை கயிறால் கட்டிக் கொண்டு, வாயைக் கருப்புத் துணியால் மூடிக் கொண்டு, கோயம்புத்தூரில் ஜெயாவை எதிர்த்து நடத்திய ''அறப்போராட்டம்'': குட்டக் குட்ட குனியலாமா?**

சட்டமன்ற உரிமை மீறல் குற்றஞ் சாட்டி ''தி இந்து'' நாளேட்டின் குடும்பத்தினர் சிலர் உட்பட ஐந்து பேருக்கு சிறைத் தண்டனை விதித்ததையும், அவர்களைக் கைது செய்யப் போலீசார் அத்துமீறி நடந்து கொண்டதையும் எதிர்த்து நாடு முழுவதும் உள்ள பத்திரிக்கையாளர்கள் உடனடியாகவே கொதித்துப் போனார்கள். ஊர்வலம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், ஜெயலலிதா கொடும்பாவி எரிப்பு என்று பல வகைகளிலும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். வாஜ்பாயி - சோனியா முதல் இங்கே திருமாவளவன் - கிருஷ்ணசாமிவரை எல்லா அரசியல் தலைவர்களும், அரசியல் விமர்சகர்களும், பொது வாழ்வில் அக்கறையுடைய பிரபலங்களும் ''இந்து''விற்கு ஆதரவும் ஜெயலலிதாவுக்குக் கண்டனமும் தெரிவித்தனர்.

பத்திரிக்கைகள் மீதான ஜெயலலிதா அரசின் ஒடுக்குமுறை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழக போலீசு தலைமையகத்துக்குள் இழுத்துக் கொண்டுபோய் செய்தியாளர்களை அடித்து நொறுக்குவது தொடர்கதையாக உள்ளபோது அதையெல்லாம் கண்டு கொள்ளாமல், ''தி இந்து'' நாளேட்டிற்கு மட்டும் இவ்வளவு பேர் வரிந்து கட்டிக்கொண்டு ஆதரவு தெரிவிப்பது ஏன்? இந்தக் கேள்விக்கான பதிலில்தான் ஜெயலலிதாவை விமர்சிக்கும் துணிவும், அவசியமும் இந்துவுக்கு எப்படி வந்தது என்பதற்கான பதில் இருக்கிறது.

பார்ப்பன நலன்களுக்காகத் துவங்கப்பட்டு, தற்போதும் முற்போக்கு - நடுநிலை வேடம் கட்டிக்கொண்டாலும், அப்பாதையில் இருந்து வழுவாத நாளேடு ''இந்து''. ஜெயலலிதா ஆட்சியில் சட்டப்பேரவையின் நடவடிக்கைகள் குறித்த மூன்று செய்திகளைத் தொகுத்து முதலில் ஒரு உரிமைப் பிரச்சனை எழுப்பப்பட்டது. அதற்குச் சட்ட நிபுணர்களை வைத்துக் கொண்டு மிகுந்த எச்சரிக்கையோடு எழுதப்பட்ட தலையங்கத்தின் மீது இரண்டாவது உரிமை மீறல் குற்றஞ் சாட்டி, ஆசிரியர், பதிப்பாளர், செய்தியாளர் மற்றும் முரசொலி ஆசிரியர் ஆகிய ஆறுபேருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

125 ஆண்டு பாரம்பரியம் கொண்ட ''இந்து'' மீது தண்டனை நடவடிக்கை எடுப்பதன் மூலம், மற்ற எல்லா பத்திரிக்கைகளுக்கும் மிரட்டல் விடுக்க வேண்டும் என்பது ஜெயலலிதாவின் நோக்கமாக இருந்தது. தனக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்களை, பத்திரிகைகளை அரசு செலவிலேயே அவதூறு வழக்குகள் போட்டு தொல்லைப்படுத்துவது ஜெயலலிதாவின் இன்னொரு உத்தியாக இருக்கிறது.

பாசிச ஜெயா அரசின் இத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு, எதிராகக் ''குட்டக் குட்டக் குனிவது, குனியக் குனியக் கொட்டுவது'' என்பது முறையே எதிர்க்கட்சிகள், பத்திரிக்கைகள் மற்றும் ஜெயா அரசின் அணுகுமுறையாக உள்ளது. பிற மாநிலங்களில் ஜெயலலிதா கொடும்பாவியைக் கொளுத்துவது என்கிற அளவு பத்திரிக்கைகள் ''இந்து''வுக்கு ஆதரவாகப் போராடினர். ஆனால், ஒடுக்குமுறை நிகழும் இங்கேயோ, கண்டன அறிக்கைகள், முழக்கமிடுதல்கள், உண்ணாவிரதம் என்று கீழே கீழே போனார்கள். எதிர்க்கட்சிகளோ ''மனித சங்கிலிப் போராட்டம்'' நடத்தினர். வாஜ்பாய் முதல் ஆளுநர் வரை மனுக் கொடுத்தனர்.

''இந்து'' ஏட்டின் முதன்மை ஆசிரியரோ கட்டுச் சோற்றுக்குள் பெருச்சாளியை வைத்துக் கட்டுவதுபோல ஜெயலலிதாவின் பாசிச குரு ''சோ''வோடு சேர்ந்து வீரசவடால் அடித்தார். குளு குளு மாளிகை, கார் என்று சொகுசாக வசதியாக வாழ்ந்து பழகிய ''இந்து'' குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிறைக்கு அஞ்சி நடுநடுங்கி தலைமறைவு நாடகமாடினர். ஜெயலலிதா கும்பலைத் தவிர அதிகாரத்திலிருக்கும் மேல்மட்டத் தொடர்புகளைப் பயன்படுத்தி, இந்த ஒடுக்குமுறையில் இருந்து தப்பித்துக் கொள்ளும் இரகசிய முயற்சிகளில் ஈடுபட்டனர். இதற்காக வாஜ்பாய் - அத்வானி கும்பலிடம் மனுப்போட்டு மன்றாடினர்.

கடைசியில், உச்ச நீதிமன்றத்துக்குப் போய் கைது நடவடிக்கைக்குத் தடை பெற்று, அதையே அரசியல் சட்ட உரிமைக்குக் கிடைத்த மகத்தான வெற்றியெனப் பீற்றிக் கொள்கிறார், ''இந்து''ராம். நீதிமன்றத் தடைக்குப் பின்னும் ஜெயாவின் போலீசு கண்காணிப்பு தொடரவே அத்வானியிடம் பாதுகாப்புக் கோரினார். அதன் பின் நீதிமன்ற உத்தரவை மதிப்பேன் என்று ஜெயலலிதா கூறியதை ஏற்று, மத்திய அரசு பாதுகாப்புத் தேவையில்லை என்று விளக்கிய ''இந்து'' ராம், மறைமுகமாக ஜெயாவுடன் சமரசம் செய்து கொண்டார். ஆனால், ஜெயலலிதா தனது அடக்குமுறைப் போக்கைத் தீவிரப்படுத்தி, மேலும் 23 அவதூறு வழக்குகளை இந்து உட்பட பல பத்திரிக்கைகள் மீது போட்டுள்ளார்.

உச்ச நீதிமன்றத்தில் உத்திரவு கிடைத்துவிட்டது என்பதை வைத்தே, அரசியல் இந்தியாவை விட அரசியல் நிர்ணய சட்ட இந்தியாவே வலிமையானது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது; அதாவது சட்டம் - நீதித்துறையுமே ஜெயலலிதா போன்ற பாசிஸ்டுகளிடமிருந்து ஜனநாயகத்தைக் காத்து விடும் என்று பிரமையூட்டும் வேலை செய்து வருகிறார் ''இந்து'' ராம். இந்த அடிப்படையில் ஜெயலலிதா கும்பலை டான்சி வழக்கில் உச்ச நீதிமன்றம் விடுதலை செய்ததைக் கூடச் சரியென்று தலையங்கம் தீட்டுகிறது ''தி இந்து''. பாசிச ஜெயாவை விட ''இந்து'' ராம்தான் உண்மையில் ஆபத்தான ஆசாமி என்பது இதிலிருந்தே தெரியவில்லையா? மக்களின் எதிரிகளை விட ''மக்கள்'' மத்தியில் ஒளிந்திருக்கும் துரோகிகள் ஆபத்தானவர்கள்!

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# "சங்கம் வைத்தால் வேலை கிடையாது!"

## — ருச்சி ஃபுட்ஸ் நிர்வாகத்தின் வெறியாட்டம்

ருச்சி ஹெல்த் ஃபுட் லிட்., சென்னை, பெரியபாளையம், கன்னிகைப் பேர் கிராமம், ஜெயபுரம் பகுதியில் அமைந்துள்ள உணவு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை. சுமார் 1000 தொழிலாளர்கள், 80 கோடி ரூபாய் மூலதனம், முகம் தெரியாத வடநாட்டு மார்வாடி முதலாளி - இதுதான் ஆலையின் ஜாதகம்.

ஜாதகத்தைக் கணிக்கும் புரோகிதக் கூட்டம் 'நானே மணமகன்' என்று மேடையில் உட்கார்ந்து கொண்டால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இருக்கிறது. இந்த ஆலையின் நிர்வாக கும்பல் செய்யும் சேட்டைகள்!

இங்குள்ள 1000 தொழிலாளர்களில் 400-க்கும் மேற்பட்டவர்கள் ஒப்பந்த கூலிகள், தினமும் 40 ரூபாய் மட்டுமே கூலி பெறும் அவர்கள் வேலையோ அடிமைகளைவிடக் கேவலம்.

திடீர் வேலை பறிப்பு, குறைந்த கூலி, பணியிடத்தில் அவமதிப்பு போன்ற நிர்வாகத்தின் கொத்தடிமைத்தனத்திற்கு எதிராக எழுந்ததுதான் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி! இத்தொழிற் சங்கம் தொடங்கப்பட்டு முழுமையாக 3 மாதம் ஆவதற்குள் அதன் தொழிற்சங்க நிர்வாகிகளை 2 முறை வேலை நீக்கம் செய்து, பின் மூக்கறுபட்டுப் பணியில் திரும்பவும் நியமித்தது, நிர்வாகம்.

சங்கத்தில் சேராத பெண் தொழிலாளியைச் சங்கத் தொழிலாளர்கள் சீண்டி, பாலியல் பலாத்காரம் செய்ததாக ஆலையினுள் போலீசை ஏவியது, நிர்வாகம். காரணம், சங்கம் நிலைத்துவிட்டால், தன் பகற்கொள்ளைக்கு வேட்டுவைத்து விடும் என்று மிரண்டு போனது, நிர்வாகம். வழக்கமாக, ஒப்பந்த தொழிலாளர்களுக்கு, சட்டப்படியான குறைந்தப் பட்ச கூலியைக் கூடக் கொடுக்காமல் ஏய்க்கிறது. வார விடுமுறை, பண்டிகை விடுமுறை, தொழிலாளர் காப்பீடு, உபரி வேலைக்கான கூடுதல் கூலி என்று எதையுமே கொடுக்காமல் சட்டத்தை ஏமாற்றுகிறது, நிர்வாகம். போதாக்குறைக்கு, சூப்பர்வைசர்கள் பெண் தொழிலாளர்களைச் சீண்டுவதை எதிர்த்து புகார் கொடுத்தாலும் கண்டு கொள்வதில்லை. இவ்வாறு இழிவான வழிகளில், சட்ட விரோதமான முறைகளில் தன்னுடைய கொள்ளையைத் தொடர்கிறது, நிர்வாகம். இதை எதிர்த்துக் கேட்டதால்15.11.03 அன்று தொழிற்சங்கத்தின் முதுகெலும்பான 24 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

தனியார்மயம் - தாராளமயத்தின் பின் இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களின் தரம், உலகத்தரமானதாக இருக்க வேண்டும் எனக் கூப்பாடு போடும் முதலாளிகள், அப்படி தரமான பொருட்களைத் தயாரிக்கும் தொழிலாளர்களை எப்படி நடத்துகிறார்கள்? அவனுக்கு வேலை உத்தரவாதம் கிடையாது; அவன் சங்கம் வைத்துக் கொள்ள முடியாது; பெண் தொழிலாளர்களைப் பாலியல் ரீதியாகச் சீண்டினால் கூட எதிர்த்துக் கேட்க முடியாது என நவீனக் கொத்தடிமைகளாக நடத்துகிறார்கள்.

இது, ஏதோ ருச்சி ஹெல்த் புட் லிட்., தொழிலாளர்களை மட்டும் பிடித்தாட்டும் சாபக்கேடு அல்ல; சமீபத்தில், தங்களின் ஓய்வூதிய சலுகைகள் பறிக்கப்படுவதை எதிர்த்துப் போராடிய தமிழக அரசு ஊழியர்களுக்கு நேர்ந்த கதியை எண்ணிப் பாருங்கள். கொத்தடிமைகளைப் போல உழைத்துக் காலத்தை ஓட்ட வேண்டும்; இல்லையென்றால், வேலை பறிக்கப் பட்டு, பட்டினி கிடந்து சாக வேண்டும் என்ற இழிவான நிலையைத்தான் தனியார் மயம் தொழிலாளர்கள் மீது திணிக்கிறது.

புரட்சிகரத் தொழிற்சங்கத்தைக் கட்டியமைக்காமல், தொடர்ச்சியாகப் போராடாமல் இந்த இழிவான நிலையை வெற்றி கொள்ள முடியாது. ருச்சி ஹெல்த் ஃபுட் தொழிலாளர்கள் இந்த நீண்ட நெடிய போராட்டத்தில் முதல் அடியை எடுத்து வைத்துள்ளனர். நிர்வாகத்தின் பழிவாங்கும் போக்கு அனைத்தும், முதலாளியின் வெற்றியைக் காட்டவில்லை; சங்கத்தைப் பார்த்து அவன் ப்யந்து போயிருப்பதையே காட்டுகிறது. அஞ்சி நடுங்கும் கோழைகள் வென்றதாக வரலாறு உண்டா?

— பு.ஜ.தொ.மு., சென்னை.

பெண் தொழிலாளியைச் சீண்டியதாக சங்க முன்னணித் தோழர்கள் மீது பொய்ப் புகார் கொடுத்த நிர்வாகத்தைக் கண்டித்து ஆலை முன் பு.ஜ.தொ.மு. நடத்திய வாயிற் கூட்டம்.



## மாணவர் விடுதியா? மாட்டுத் தொழுவமா?

*சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில் அரசினர் மேல்நிலைப் பள்ளியின், ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் 52 தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். இந்த விடுதியில் குளிப்பதற்கு தண்ணீரோ, கழிப்பிட வசதியோ எதுவும் இல்லை. 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் 'பம்பு செட்'டுக்குத்தான் ஓடவேண்டும். குடிநீர்கூட மாணவர்கள் தான் எடுத்து வர வேண்டும். மழை பெய்தால், விடுதியில் நனைந்து கொண்டுதான் இருக்க வேண்டும். எப்போது இடிந்து விடுமோ என்று பயம் வேறு சேர்ந்து கொள்ளும். மாணவர் விடுதியின் இந்த அவல நிலையை அம்பலப் படுத்தி பிரச்சாரம் நடத்தப்பட்டது.*

*இதையடுத்து, ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த, அந்த ஒதுக்கீட்டில் பதவி அனுபவிக்கும் தனி வட்டாச்சியர் லெட்சுமணன் மாணவர்களிடம் எகிறிகுதித்தார். "நீங்கள் எல்லாம் பெரிய பங்களாவில் இருந்தா வந்தீர்கள். கொடுப்பதை தின்னுபுட்டு இருக்கிற இடத்தில் தங்காம... சுகாதார வசதி வேண்டுமோ?" என்று நக்கலடித்தார்.*

*இந்த காம கிழத்தின் யோக்கியதை சீர்காழி முழுக்க நாறுகிறது! தனது செல்போன் மூலம் பெண்களிடம் பாலியல் சேட்டைகள் செய்து மாட்டிக் கொண்டவர், இவர். மாணவர்களிடம் அக்கறையாக இருந்த, ஆசிரியரும், விடுதிக் காப்பளருமான சண்முகத்தை, பொய்ப் புகார் மூலம் இடம் மாற்றம் செய்தவர். இவற்றையெல்லாம் சுவரொட்டி பிரச்சாரத்தின் மூலம் நாறடித்தது, பு.மா.இ.மு. தெளிவடைந்த மாணவர்களும் இப்போது தொடர் போராட்டத்திற்குத் தயாராகி வருகின்றனர்.*

*— பு.மா.இ.மு., சீர்காழி.*



படிப்பகம்

www.padippakam.com

## ரேசன் கடைக்கு மூடுவிழா சாராயக் கடைக்குத் திறப்பு விழா

# இதுதான் பார்ப்பன ஆட்சி!

இது, 'சாள்னா கடை மேட்டரு!' கொஞ்சம், அப்படி இப்படித்தான் இருக்கும். கண்டுக்கக் கூடாது. வேட்டி அவிழ்ந்தாலும் பரவாயில்லை, வெறுங்கையோடு திரும்பிப் போகக் கூடாது. 'புல், நைட்டு' கடைத்திறந்திருக்கும், அம்மாவே சொல்லிட்டாங்க!

''என்ன அநியாயம் இது!'' என்று குடிக்காமலேயே யாரும் உளறக் கூடாது! குடிப்பவர்களை அவமதித்ததாக, அத்தியாவசியப் பணியைச் செய்யவிடாமல் தடுத்ததாக 'டெஸ்மா' சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளிவிடுவார் அம்மா. 'மப்பு' ஏத்திக்கினு, 'ரவுசு' விட்டாலும் பரவாயில்லை. 'இவன் அரசு விசுவாசி, நம்மாளு' என்று அம்மா கண்டுக்காமல், விட்டுவிடுவார்!

அக்டோபர் 26-ந் தேதி, தமிழக சட்டமன்றம் இப்படித்தான் சாராய நெடியில் தள்ளாடியது! 'இனி, மதுக் கடைகளை தமிழக அரசே ஏற்று நடத்தும்' என்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டார், ஜெயலலிதா. அதற்கான அவசர ஆணையையும் உடனே வெளியிட்டார்.

தமிழகம் முழுக்க, 8,500 மதுக் கடைகளுக்கான உரிம விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன. ஆனால், அரசுக் கெடு தேதியான அக்டோபர் 22-ந்தேதி வரை 2000 விண்ணப்பங்களே அரசுக்கு வந்தன. ''சாராய வியாபாரிகள் கள்ளக்கூட்டு வைத்துக் கொண்டு அரசை ஏமாற்றுகிறார்கள். எனவே, அரசே சாராயக் கடைகளை நடத்தும். சாராய விற்பனையை டாஸ்மாக்கிடம் ஒப்படைத்து கூட்டுறவுத் துறை, நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வியாபாரம் செய்யும் என்றார். இதனால் 22 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், மேலும், சரக்கு சுத்தமாக இருக்கும், இரவு 12 மணி வரையில் அரசு சாராயக் கடைகள் திறந்திருக்கும்,' என்றார்.

தமது இரகசிய சிநேகிதரான கர்நாடக விஜய் மல்லய்யாவின் சாராய சாம்ராஜ்ஜியத்தை மற்றும் தனது பினாமிகளின் சாராயத் தொழிலைத் தமிழகத்தில் நிலைநாட்டுவதுதான் தற்போது தமிழக முதல்வரின் முக்கிய வேலை! ஜெயலலிதாவின் தரங்கெட்ட செயலை எதிர்த்து அறநெறியை போதிக்கும் எந்தக் கொம்பனும் தெருவில் இறங்கவில்லை. ''யாருக்கும் வெட்கமில்லை'' என்று மக்களிடம் கண்ணை உருட்டும் துக்ளக் சோ, முழுக் குடிக்காரன் மாதிரி ஈனம், மானம் இல்லாமல் தனது 12.11.2003 துக்ளக் கேள்வி - பதில் பகுதியில் கிண்டலடிப்பதைப் பாருங்கள்.

''கேள்வி: படித்தவர்களுக்கு மட்டுமே இனி மது உரிமை வழங்கப்படும். என்பது பற்றி?

பதில்: படித்தவன் பார் ஆளுவான் - என்பது பழங்கதை, படித்தவன் 'பார்' நடத்துவான் என்பது புதுக்கதை. கற்றார்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு - அந்தக் காலம். கற்றார்க்குச் சாராயக் கடையெல்லாம் சிறப்பு - இந்தக் காலம்'' என்று படித்தவர்கள் எல்லாம் மனு போட்டு சாராய வேலை கேட்டது மாதிரி சோ போதையில் உளறுகிறார். ஆனால், கடும் வேலையில்லாத் திண்டாட்டத்திலும் வறுமையிலும் உழன்றாலும் பல இடங்களில் சாராய வேலைக்குப் போதிய ஆட்கள் வரவில்லை என்பதுதான் உண்மை.

அதே துக்ளக், பூந்துறை என். கனகராஜ் என்பவர் கூறியதாக, 'அம்மா சாராயக்கடைக்கு வாருங்கள்! தெய்வ அருள் பெற்றுச் செல்லுங்கள்!' என்பது மாதிரி எழுதுகிறது. ''தனியார் மதுபானக் கடைகளில் அவர்கள் ஊற்றியதுதான் சரக்கு, சில நேரங்களில் இரண்டு குவார்ட்டர் அடித்தால் கூட போதை வருவதில்லை. மாறாக, தலைவலி, வயிறு எரிச்சல், கை-கால் குடைச்சல் போன்ற உபாதைகள்தான் ஏற்படுகிறது. போலி சரக்கு சில இடங்களில் விற்பதாகக் கூறுகிறார்கள். இனி, போலி சரக்குக்கு வாய்ப்பு இல்லை. டவுன்லே ஒரு ரேட், கிராமத்துல ஒருரேட், இனி கூட்டுறவுக் கடைகளில் ஒரே ரேட்டாத்தான் இருக்கும். அரசு கொண்டுவந்துள்ள இத்திட்டம் வரவேற்கக் கூடியது'' என்று போவோர், வருவோர் பின்னால் மறைந்து வாந்தியெடுக்கிறது, துக்ளக்.

ஆனால், ஜெயலலிதா மீது சாராய நெடி அடித்தாலும் அவர் 'ஸ்டடி'யாக இருப்பது தெரிகிறது. தமிழகத்தில் 10 சதவீதமாக இருக்கும் விஜய் மல்லய்யாவின் 'மெக்டோவல்ஸ் டிஸ்டில்லரீஸ்' விற்பனையை குறைந்தது 50 சதவீதமாக உயர்த்துவது, தற்போது இலக்கு. மன்னார்குடி பினாமி கும்பல்தான் அக்கம்பெனியின் வியாபார ஏஜென்ஸியை நடத்துகிறது; சொந்தமாகவும் சாராயத் தொழில் இக்கும்பலுக்கு உண்டு.

சாராயக் கடை நடத்துவதால் லாபம் அரசுக்கு அல்ல, ஜெயலலிதா கும்பலுக்கும் விஜய் மல்லய்யாவுக்கும் தான். சரக்கு விற்பதற்காக கூட்டுறவுத்துறைகளை இனி முழுவதுமாக அ.தி.மு.க. கைக்கூலிகள்

**அரசு வேலை என்றாலும் சரக்கு ஊற்றிக் கொடுக்கும் வேலை வேண்டாம்: சென்னை இந்திரா நகரில் மதுக்கடை விற்பனையாளர் பணிக்கு ஆட்கள் வராததால் வெறிச்சோடிக் கிடக்கும் நேர்முகத் தேர்வு மண்டபம்.**





படிப்பகம்

www.padippakam.com




சென்னை - கோடம்பாக்கம் அருகேயுள்ள புலியூர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு அருகே அமையவுள்ள அரசு மதுபானக் கடையைத் திறக்கக் கூடாது எனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தும் பகுதி மக்கள்.

கைப்பற்றுவார்கள். அதன் மூலம் பணம் இல்லாமலேயே சாராயக் கடைகளை நடத்தும் உரிமையைப் பெறுவார்கள். இதனால் அப்பகுதியின் கள்ளச் சாராயத்திற்கும் 'தாதா'வாகிவிடுவார்கள். அ.தி.மு.க. தலைமைக்குப் பணம், பல முனைகளிலிருந்தும் பாயும்!

இந்த மாபெரும் இழிவைக்கூட, சந்தைப் பத்திரிக்கைகள் சரக்காக்கி ஊற்றின. இந்த ஆண்டு தீபாவளி தித்திப்பாக, சரவெடிச் சிரிப்பாக பத்திரிக்கைகளுக்குப் பயன்பட்டது, இந்தச் செய்திதான்!

''தரமான சரக்கு கிடைக்குமா? ஒரு ஃபுல் ரிப்போர்ட்'', ''சியர்ஸ் யாருக்கு?'', ''சகலை சங்கதி தெரியுமா?'', ''ஒருகப் பீர், பப்ளிமாஸ் டான்ஸ்!'' -இப்படி வாசகனிடம் குடியின் மகிமைகளைக் குஷியோடு பங்கு போட்டன, பார்ப்பனப் பத்திரிக்கைகள்.

''சார்... சோடாவா?... கோக்கா?'' என்று கேட்கும், கடைச் சிப்பந்தி போல, பத்திரிக்கைகளின் பக்கங்களிலேயே மறைப்பை ஏற்படுத்தி 'பார்' நடத்துகிறது, பார்ப்பனக் கும்பல்.

அரசுக் கணக்குப்படி, ஆண்டுக்கு தமிழகத்தில் விற்கப்படும் மதுபானத்தின் மதிப்பு 3,000 கோடி ரூபாய்! ஆனால், உண்மை புள்ளிவிவரங்களோ வேறு. அரசுக்கு வரி கட்டாமல் இதைப் போல் இரண்டு மடங்கு சாராயக் கடைகளில் காலியாகிறது. அதற்கு இணையாகக் கள்ளச் சாராய வியாபாரமும் எகிறுகிறது. ஆக, ஆண்டுக்கு 10,000 கோடி ரூபாய் சாராயத்தில் பொங்கி வழிகிறது. இதே அளவு பணம் மணற் கொள்ளையிலும் மலையாய்க் குவிகிறது.

சட்டப்பூர்வமான எல்லா உதவிகளையும் சேர்த்தாலே தமிழக அரசின் ஆண்டு வரவு செலவு, பட்ஜெட் 25,000 கோடி ரூபாய்தான். போலீசு, சிறை, நீதிமன்றம், சட்டமன்றம் என்று தனது பதாதிகள் செலவு போக, 7 கோடி மக்களுக்கும் இதில் செலவு செய்வதாகச் சொல்கிறது, அரசு. ஆனால், கையளவான தனது கும்பலின் தேவைக்காக, மணல், சாராயம் என்று 2 அரசாணைகள் போட்டு 20,000 கோடி ரூபாய் தொழிலைத் தனக்குச் சட்டப்பூர்வமாக பட்டாப் போட்டுக் கொண்டது, பார்ப்பன பாசிசக் கும்பல்.

ஒருபுறம் இருக்கும் ரேஷன் கடைகளை இழுத்து மூடும் ஜெயலலிதா, மறுபுறம் புதிது புதிதாக தெருவுக்கு ஒரு சாராயக் கடைகளைத் திறக்கிறார். 3 ஆண்டுகளுக்கு முன் 4,000 ஆக இருந்தது; இப்போது 8,000 சாராயக் கடைகளாகியிருக்கிறது. இனி, வீட்டுக்கு ஒரு சாராயக் கேனும் கொடுப்பார்! சாராயம் குடிக்கும் குடும்பத்துக்குத்தான் இனி குடிநீர், மின் இணைப்பு என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில், கலந்தடிப்பதற்கு தண்ணீரும், இரவு வரை கண்விழித்துக் குடிப்பதற்கு 'கரண்ட்டும்' கண்டிப்பாகத் தேவை. இது, ஏதோ சிரிப்புக்கு சொல்லவில்லை. இப்படி நடந்தாலும் எதிர்ப்பதற்கு எவருக்கும் சொரணையில்லை என்பதில் ஜெயலலிதாவுக்கு சந்தேகமில்லை.

சாராய பாட்டிலைப் பார்த்தாலே போதை ஏறி 'ரவுசு'வுடும் வேலையெல்லாம் இனி நடக்காது! 'புல்'லா 12 மணிவரைக் குடிக்க வேண்டும். ஒரு'பெக்', இரண்டு'பெக்' என்று போக்குக்காட்டிவிட்டு வீட்டுக்குத் திரும்பினால், வீட்டுக்கு ஆட்டோ வரும். கூடவே, போலீசும் வரும். மோசடி வழக்கைச் சந்திக்க வேண்டி வரும். இந்த அசிங்கத்தை எல்லாம் இனி சகித்துக் கொள்ள வேண்டியதுதான்!

'சுதந்திரம்' கிடைத்து அரை நூற்றாண்டு ஆகியும் ஒட்டுக்கட்சி அரசுகள், குடிநீர் பஞ்சத்தைக்கூடத் தீர்க்கவில்லை. கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம் - இப்படி எதுவுமேயில்லாமல் நடைபிணங்களாக மக்கள் வாழ்கிறார்கள். ஆனால், சுத்தமான சரக்கு எந்நேரமும் கிடைக்கும் என்று சொரணையில்லாமல் சொல்கிறார், ஜெயலலிதா.

ஒருபுறம், கோயில்களில் அன்னதானம்! ஆறுகால் பூசை என்று பக்தி முற்றி ருத்ரதாண்டவம் ஆடும் ஜெயலலிதா, வரம் கேட்க வரும் பக்தர்களின் 'சைடு பாக்கெட்டில் புல் பாட்டி'லை செருகி மெய்சிலிர்க்க வைக்கிறார்! சங்கராச்சாரியிடம் ஆசிபெற்ற மனிதப் புனிதவதி -'மனு'வின் புதல்வி அல்லவா? வேறு எப்படி செயல்படுவார்?

மக்களின் அடிப்படைத் தேவைகளான போக்குவரத்து, குடிநீர், சாலை வசதி எல்லாம் தனியாருக்குத் தாரை வார்ப்பு; சாராய விற்பனைக்கு மட்டும் அரசே கடை திறப்பு! நெல் கொள்முதல் கைவிரிப்பு; சாராயக் கொள்முதலுக்கு பாதுகாப்பு!

அடுத்து, மூன்றுசீட்டு, மங்காத்தா, சொண்டச்சோறு, கால்வாரி, கஞ்சா, காபரே டான்ஸ், மற்றும் ஆந்திரா, கேரளா என்று 'பலான ஆயிட்டம்' எல்லாம் இங்கு கிடைக்கும் என்று சட்டமன்றத்திலேயே 'போர்டு' தொங்கும்!

ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், உலக நீதி, குறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், நீதிவெண்பா, அறநெறிச் சாரம் என்று ஓராயிம் ஆண்டுகளுக்கு முன்பே, வாழ்க்கை அறநெறிகளைப் போதித்த தமிழினப் பண்பாட்டை, ஒரே இரவில் சாராயம் மணக்கும் சாம்ராஜ்ஜியமாக மாற்றிவிட்டார், ஜெயலலிதா!

இரவு ஆனாலும் இருந்து குடி! போதை ஏறினாலும் பொறுத்து குடி! என்று மக்களுக்கும், சாராயக் கடையானால் என்ன? அரசாங்க வேலைதானே! என்று இளைஞர்களுக்கும் புதிய ஆத்திச்சூடி அருளிய, ஜெயலலிதா உண்மையிலேயே உயர்ந்த 'குடிமகள்'தான்!

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# வன்கொடுமைக்கு எதிராகக் கலகம் புரிவோம்!

## —புரட்சிகர அமைப்புகளின் அறைகூவல்

நம்ப முடியாத உண்மைச் சம்பவம், இது! 23 வயதான சின்ன தம்பி, சிவகங்கை வட்டம், சித்தனூர் கிராமத்தைச் சேர்ந்த, பட்டதாரி இளைஞர். இவர், சிவகங்கையிலிருந்து 7.11.2003 அன்று இரவு 10 மணியளவில் பேருந்தில் ஊர் திரும்பினார்.

திடீரென, ''டேய்...! சக்கிலிய வீட்டு ஆறுமுகம் மகனே! என்னமோ பேண்டு - சட்டையெல்லாம் போட்டு கிட்டு சிலுசிலுப்பாத் திரியரே! ஆபி சிலே வேலை பார்க்கிறியலோ'' என்று தம் சாதி திமிரை பேருந்தில் வழிய விட்டார், சேர்வை சாதியைச் சேர்ந்த 43 வயது மாரிமுத்து.

அதிர்ச்சியடைந்த சின்னதம்பி, அதை வெளிக்காட்டாமல், ''ஆபி சிலேதான் வேலை பார்க்கிறேன்'' என்றார். பதில் சொல்லியதையே அவ மானமாக கருதிய மாரிமுத்து, ''ஏன்டா சக்கிலியத் தேவடியாள் மகனே! உட்கார்ந்துக் கொண்டு திமி ராப் பதில் சொல்றே!... தோட்டி வேலைக்கு போக வேண்டியது தானடா... மவனே'' என்று கொலை வெறிபிடித்து சின்னதம்பியை கழுத்தை நெறித்து ரத்தம் வழிய அடித்தார். அப்படியே இழுத்துச் சென்று படிக்கட்டு வழியே ஓடும் பேருந்திலிருந்து கீழே தள்ளிவிட முயற்சித்தார். சக பயணிகள் பயந்து கூச்சலிட்டு வண்டியை நிறுத்தினர். சின்னதம்பி, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நடுவழியில் பேருந்திலிருந்து இறங்கிவிட்டார். இதற்காகப் பேருந்தி லிருந்த எவரும் சாதிவெறி பிடித்த மாரிமுத்துவைக் கண்டிக்கவில்லை.

பாதிக்கப்பட்ட சின்னதம்பி நடு இரவில் சிவகங்கையிலுள்ள நண்பர் வீட்டுக்குச் சென்று தங்கினார். மறுநாள் காலை நண்பரின் ஆலோசனைப்படி, சிவகங்கை மாவட்ட ம.க.இ.க. பொறுப்பாளரும், சிவகங்கை மாவட்ட வன்கொடுமைகள் தடுப்பு விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் உறுப் பினருமான எஸ்.சுந்தரபாண்டியன் என்ற தோழர் எழில் மாறனுடன் சிவ கங்கை நகர போலீசு நிலையம் சென்றார்.

அங்கு, போலீசு நிலைய எழுத்தர் மாசிலாமணி மட்டும் இருந்தார். அவர், சிகரெட் புகையை விட்டபடி, ''பி.சி.ஆர். அலுவலகத்தில் (வன் கொடுமை தடுப்பு) கொண்டுபோய்க் கொடு'' என்று மனுவை வாங்க மறுத்தார். 'நீங்கள் நடவடிக்கை எடுக் காவிட்டாலும், மனுவின் நகலையா வது' பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கொடுத்து விட்டு பிறகு பல போலீசு நிலையங்களுக்கும் அலைந்தார், சின்னதம்பி.

சிவகங்கை நகர போலீசு நிலையத் திற்கு திரும்பவும் மாலை 6 மணிக்கு சென்றார். அப்போது பணியி லிருந்த ஆய்வாளர் சச்சிதானந்தத்திடம் நடந்த விபரங்களை கூறினார். படபடப்பில் தன் கை விரல் களை மேசையில் ஊன்றியபடி, தனக்கு நேர்ந்த கொடுமையைக் கூறினார். ஆய்வாளரோ, ''கையை எடுடா நாயே! இன்ஸ்பெக்டர் மேஜையைத் தொடுறே...! கட்டுடா கையை! சொல் லுடா விசயத்தை!'' என்று கத்தினார்.

மிரண்டுபோன சின்னதம்பி நடுங்கிப் போனார். பயத்தில் பாதி விசயத்தைதான் சொன்னார். அதையும் ஏற்கமறுத்த ஆய்வாளர், தனக்குத் தேவையானபடி எழுதி வாங்கிக் கொண்டார். கடைசிவரையில் குற்ற வாளியைக் கைது செய்யவேயில்லை. கடைசியில், 'குற்றவாளியைத் தேட வேண்டும். நீயும் வாடா' என்று இரவு முழுக்க ஜீப்பில் வைத்து இழிவுபடுத் தினார்.

மேல்சாதி ஆதிக்கவெறிக்குத் தாளம் போட்ட போலீசைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டம். (உள்படம்) மேல்சாதி வெறியனால் தாக்கப்பட்ட சின்னதம்பி.



### ''மின்சாரத்திற்கு விலை சொன்னால், விளைபொருளுக்கு விலை சொல்வோம்!''

#### — வி.வி.மு. ஆர்ப்பாட்டம்

பாசிச ஜெயா அரசு இலவச மின்சாரத்தை ரத்து செய்ததற்கு எதிராக, நாகை மாவட்டம், சீர்காழி வட்டம் வி.வி.மு., 24.11.03 அன்று பேரணி ஒன்றையும், அதன் முடிவில் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியது.

''மின்சாரத்திற்கு நீ விலை சொன்னால், விளைபொருட்களுக்கு விலை சொல்லும் அதிகாரத்தை எங்களுக்குக் கொடு'' - என்ற முழக் கத்தின் கீழ் இப்பேரணியும், ஆர்ப்பாட் டமும் நடைபெற்றன.

தோழர் பன்னீர் செல்வம் தலை மையில் புறப்பட்ட பேரணி, நீதி மன்றச் சாலை வழியாக வட்டாச்சியர் அலுவலகம் சென்றடைந்தது. அங்கு நடந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் ரவி, அம்பிகாபதி, ஸ்டாலின் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

டான்சி வழக்கு 'வெற்றியை'க் கொண்டாடிய அ.தி.மு.க.வினருக்கு அஞ்சாமல், அவர்கள் ஊர்வலத்திற்கு பின்னே, உடனடியாக வி.வி.மு. தலைமையில் ஊர்வலமாக சென்று அம்பலப்படுத்தியது மக்கள் மத்தியில் பெரும் மதிப்பைப் பெற்றது. ●



படிப்பகம்

www.padippakam.com

இதனையடுத்து, சிவகங்கை ம.க.இ.க. மற்றும் பு.மா.இ.மு. அமைப்புகள், அதிகார கும்பலின் சாதி வெறிக்கு எதிராக தொடர் பிரச்சாரம் மற்றும் போராட்டத்தில் இறங்கின.

''குற்றவாளியை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்! ஆய்வாளர் சச்சிதானந்தின் மீது நடவடிக்கை எடு!'' என்று முழக்கங்களுடன் 17.11.03 அன்று கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அறைகூவல் விடுத்தன.

திட்டமிட்டப்படி கண்டன ஆர்ப்பாட்டம், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடந்தது. ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., மனித உரிமைப் பாதுகாப்பு கமிட்டி, பி.யு.சி.எல் மற்றும் மீனவர் நலக் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். உயர் சாதியும், அரசு அதிகார கும்பலும் ஒன்றோடு ஒன்று பிணைந்து சாதி வெறிகொண்டு அலைவதை அம்பலப் படுத்தினர். பாதிக்கப்பட்ட சின்ன தம்பியின் சொந்த மாமாவே போலீசு நிலையத்தில், ஆய்வாளரின் தனி எழுத்தராக இருந்தும் அவரும் பொய்ப் புகார் வாங்கி மிரட்டியதும் அம்பலப்படுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் பிரச்சார வீச்சால், போலீசு கும்பல் மிகப்பெரும் தலைகுனிவுக்கு ஆளானது. மக்கள் பெரும் உற்சாகத்தில் தொடர் ஆதரவு அளிக்கின்றனர்.

ஆதிக்க சாதியைச் சேர்ந்த மாரிமுத்துவின் சித்தலூர் கிராமத் தலைவரும், பெரியவர்களும் தோழர் எழில்மாறன் இல்லத்திற்கு வந்தனர். மாரிமுத்துவின் மன்னிக்க முடியாத குற்றத்திற்காக வருத்தம் தெரிவித்தனர். ''உங்கள் அமைப்பின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தி சமரசம் செய்து வையுங்கள்'' என்றனர்.

ஆக, இது, சிவகங்கையில் மட்டுமே நடந்த அதிர்ச்சியூட்டும் சம்பவமல்ல! சமீப காலமாக, பார்ப்பன பாசிச ஜெயலலிதாவின் ஆட்சியில் உயர்சாதி வெறியர்கள் எங்கும் குளிர் விட்டுத் திரிகின்றனர். போலீசு மற்றும் அதிகார கும்பல் உயர்சாதி வெறியர்களின் பற்களாகவும், நகங்களாகவும் செயல்பட்டு தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களைக் குதறுகின்றனர்.

இதற்கெதிராக, தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் கலகம் புரியும் போதுதான், பல்லுக்கு பல், நகத்திற்கு நகம் என்று பழிவாங்கும் போதுதான் அப்படி அத்துமீறும் போதுதான் சாதி வெறியர்களின் கொட்டம் அடங்கும்.

**— ம.க.இ.க., பு.மா.இ.மு., சிவகங்கை.**

## கிடா வெட்டுத் தடைச் சட்ட எதிர்ப்பு:

# பு.மா.இ.மு.விடம் மூக்கறுபட்ட அ.தி.மு.க. கும்பல்

ஈரோடு - சிவகிரி பு.மா.இ.மு தோழர்கள், கிடா வெட்டு தடைச் சட்டத்திற்கு எதிராக முழக்கங்கள் எழுதி, நகரின் மையப் பகுதியில் தட்டிவைத்தனர். சுமார் ஒருமாத காலம் அப்பகுதியில் தினமும் திரிந்துக் கொண்டிருந்த போலீசு, அதிகார கும்பல் அதைப் பற்றி எதுவும் சட்டை செய்யவில்லை.

12.10.03 அன்று தடாலடியாக பு.மா.இ.மு. செயலர் தோழர் புஷ்பராஜ் வீட்டில் இரவு நுழைந்து, அவரைக் கைது செய்தது, போலீசு. சசி, ஞானசம்மந்தம் என்ற இரு தோழர்களும் கூட அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

காரணம், சிவகிரி ஆதீனத்திற்கு வந்த ஒரு பார்ப்பனக் கும்பல் அத்தட்டியைப் பார்த்துவிட்டது. குடுமி விறைத்துக் கொண்டது. பக்கத்திலிருந்த இந்து அறநிலையத் துறை அமைச்சர், கறுப்பு பார்ப்பான் பி.சி. ராமசாமியை, 'பிலுபிலு' என்று பிடித்துக் கொண்டது. மந்திரி, 'உடனே எங்களை ஏவ, நாங்கள் வந்தோம்' என்றது போலீசு.

தோழர்கள் கைது செய்யப்பட்ட சில மணி நேரத்திலேயே, ஒரு தட்டி இருந்த இடத்தில் பல சுவரொட்டிகள் அதே கருத்தை வலியுறுத்தி ஒட்டப்பட்டன. கூடவே, மடாதிபதிகளின் அடியாளாகச் சேவை செய்யும் மந்திரியும் தோலுரிக்கப்பட்டார்.

கிராமம் முழுக்க பரவிய இப்பிரச்சாரத்தைக் கண்டு போலீசு 'கரண்டில்' கைவைத்த குரங்கு மாதிரி ஆடிப்போனது. வெறி கொண்டு கண்ணில் கண்ட தோழர்களையெல்லாம் மீண்டும் கைது செய்தது. ஆறு மாதத்திற்கு முன்பு அமைப்பு தோழர்களுக்கு சோறு போட்ட எஸ்.கே. சுப்பிரமணியன், புதிய தோழர்களான இளங்கோ, கோவிந்தசாமி ஆகியோர் மீது கொடுங் குற்றங்களைச் சுமத்திக் கைதுசெய்தது. 'அரசினைக் கவிழ்க்க சதி', 'இரு சமூகத்தினரை மோதலுக்குத் தூண்டியது' என்று பிணையில் வரமுடியாத பிரிவுகளின் கீழ் தோழர்களை சிறையில் அடைத்தது.

தட்டிவைத்ததற்கு இப்படியொரு தண்டனையா? என்று போலீசை எந்த 'நீதி'பதியும் கேள்வி கேட்கவில்லை. கைதுக்கு மத்தியில், புதிய தோழர்கள் உறுதியுடன் கிளர்ச்சிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். ''பெரியார் பிறந்த மண்ணில் பார்ப்பனியத்திற்கு பாடை கட்டுவோம்'' என்று விடுக்கப்பட்ட அறைகூவலைக் கண்டு, பார்ப்பன பத்திரிக்கை தினமலர் அலறியது. ''போலீஸ், போஸ்டர், தொடரும் சவால்'' என்று செய்தி பிரசுரித்தது.

பொய்வழக்கு, பிணை மறுப்பு என்று கடுமையான அடக்கு முறைக்கு உள்ளான சிறைத் தோழர்கள், கைவிலங்கு இடுவதற்கு எதிராகவும் சாதி, மதம் என்று பதிவு செய்வதற்கு எதிராகவும், 'காவல்'துறை, சிறைத்துறை, 'நீதி'த்துறை என்று சகல அரங்குகளிலும் பணிய மறுத்தனர்.

வெளியில் இருந்த தோழர்களோ, இரகசியமாக இயங்கி அடக்குமுறை அதிகார கும்பலுக்கு எதிரான பிரச்சாரத்தை வீச்சாக எடுத்துச் சென்றனர்.

இச்சூழலில், பு.மா.இ.மு.வை எப்படியும் அழித்துவிடுவது என்று அ.தி.மு.கவின் உள்ளூர் தலைவர்கள், போலீசுக்கு காட்டிக் கொடுக்கும் வேலை செய்தனர். தோழர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுத்தவர்களை போலீசு நிலையத்திற்கு அழைத்துவந்து மிரட்டினர்.

இக்கும்பல்களுக்கு வேட்டுவைக்கும் வகையில், 45 நாட்களுக்குப் பின், பிணையில் விடுதலையான தோழர்கள் அதிர் வேட்டுக்களுக்கு மத்தியில் வரவேற்கப்பட்டனர். ''அஞ்சமாட்டோம், அஞ்சமாட்டோம் அடக்கு முறைக்கு அஞ்சமாட்டோம்! நக்சல்பாரிவழியில் தொடர்ந்து போராடுவோம்! அ.தி.மு.க ரவுடிக் கும்பலை ஒழித்துக் கட்டுவோம்!'' என்ற முழக்கங்களுடன், விடுதலையான தோழர்கள் நகர்வீதிகளில் ஊர்வலம் வந்தனர்.

இது, பொதுமக்களிடம் அதிக நம்பிக்கையையும், அ.தி.மு.க கும்பலுக்கு கலக்கத்தையும் ஏற்படுத்தியது, போலீசு, ''உங்களுக்கும் எங்களுக்கும் பிரச்சினை இல்லை. எல்லாம் மந்திரி பி.சி.ஆர். பிரஷர்தான், எங்களைத் திட்டாதீர்கள்'' என்று சரணடைந்தனர்.

ஓட்டுப் பொறுக்கும் அரசியல் வாதிகளோ, போலீசு அடக்குமுறைகளோ புரட்சியாளர்களை என்றைக்குமே வெற்றி கொள்ள முடியாது என்பதை எடுப்பாக இப்போராட்டம் நிரூபித்தது.

— பு.மா.இ.மு., ஈரோடு



படிப்பகம்

www.padippakam.com

## ஊர்வலம் - பொதுக்கூட்டத் தடை:

# நீதிமன்ற பாசிசத்துக்கு ஒத்தூதும் 'மார்க்சிஸ்டுகள்'

கடந்த செப். 29-ம் தேதியன்று கொல்கத்தா நகரில் பழங்குடியினர் நடத்திய பேரணி காரணமாக போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதி அமிதவா லாலா, எரிச்சலடைந்து அடிப்படை ஜனநாயக உரிமையையே பறிக்கும் அதிரடி பாசிச உத்தரவைப் பிறப்பித்தார். இதன்படி, வார வேலை நாட்களில் கொல்கத்தா நகர வீதிகளில் ஊர்வலங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்களை நடத்தக் கூடாது; போலீசு அனுமதி பெற்று, காலை 8 மணிக்கு முன்னரும் இரவு 8 மணிக்குப் பின்னரும் மட்டுமே ஊர்வலங்களை நடத்தலாம்; அதுவும் நகரின் குறிப்பிட்ட சில வீதிகளில் மட்டுமே இந்த ஊர்வலங்கள் அனுமதிக்கப்படும்.

உயர் நீதிமன்ற நீதிபதி அமிதவா லாலாவின் இப்பாசிச உத்தரவை பல்வேறு கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஜனநாயக சக்திகளும் கடுமையாக எதிர்த்தன. ஆளும் 'இடது முன்னணி' அரசும் இந்த உத்தரவை எதிர்ப்பதாக அறிவித்தது. தனியொரு நீதிபதி தன்னிச்சையாக இப்படி உத்தரவிடுவது நீதியின்பாற்பட்டது அல்ல என்றும் உயர் நீதிமன்ற மூத்த நீதிபதிகளின் குழு இந்த திடீர் உத்தரவைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் கோரி 'இடது முன்னணி' அரசு மேல் முறையீடு செய்தது.

இதைத் தொடர்ந்து, இப்பாசிச உத்தரவுக்கு எதிராக கண்டன மாநாடு நடத்திய 'இடது முன்னணி'த் தலைவர்கள், இத்தடை உத்தரவை மீறி ஊர்வலங்களை நடத்துவோம் என்று வீரவசனம் பேசினர். வங்கத்து சிங்கம் என்று வர்ணிக்கப்படும் மே.வங்க முன்னாள் 'மார்க்சிஸ்டு' முதல்வரான ஜோதிபாசு, இத்தடை உத்தரவை எதிர்த்து ஊர்வலம் நடத்தி நான் சிறை செல்லவும் தயார் என்று கர்ஜித்தார். ஊர்வலங்கள் நடத்துவது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை; அதைப் பறிக்க ஒருபோதும் நாம் அனுமதிக்கக் கூடாது; அதேசமயம் பொது மக்களுக்கு எவ்விதப் பாதிப்புமின்றி, நகரின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத வகையில் ஊர்வலங்கள் அமைய வேண்டும் என்றும் உபதேசம் செய்தார். அரசியல் கட்சிகளும் பல்வேறு சமூக அமைப்புகளும் இணைந்து யாருக்கும் பாதிப்பு இல்லாமல் ஊர்வலங்கள் நடத்த பொருத்தமான வழிமுறையைக் கண்டறிய வேண்டும் என்று பின்பாட்டு பாடினர், பாசுவின் வாரிசு முதல்வரான புத்ததேவ் பட்டாச்சார்யா. பின்னர், இம்மாநாட்டில் அக். 13-ஆம் நாளிலிருந்து, தடையை மீறி தொடர்ச்சியாக ஊர்வலங்கள் நடத்துவதென முடிவாகியது.

அந்நாளில் நீதிபதி லாலாவின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழு, மாநில அரசு தனது நிலையை விளக்குமாறும், பொதுமக்களுக்கோ போக்குவரத்துக்கோ இடையூறு ஏற்படாமல் ஊர்வலங்கள் நடத்துவது பற்றி அரசின் பரிந்துரைகளை ஒரு மாதத்தில் அளிக்குமாறும் கோரியது. அதே நாளில் தடையை மீறுவதாகக் கூறி 'இடதுசாரி' கூட்டணிக் கட்சிகளின் மாணவர் - இளைஞர் அமைப்புகள் கண்டன ஊர்வலமும் நடத்தின. ஊர்வல முடிவில் நடந்த பொதுக்கூட்டத்தில், ''உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழு அளித்துள்ள இடைக்கால தடையாணையை வரவேற்கிறோம். நாங்கள் நீதித்துறைக்கு எதிரானவர்கள் அல்ல; தனிப்பட்ட ஒரு நீதிபதியின் தவறான உத்தரவைத்தான் எதிர்க்கிறோம். நீதிபதிகள் குழு கோரியபடி, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாமல் ஊர்வலம் நடத்துவதற்கான பரிந்துரைகளை இடது முன்னணி அரசு விரைவில் அளிக்கும்'' என்று பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் செய்யப் போகும் புரட்சிக்கு புது வியாக்கியானம் அளித்தார், மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர்.

''இடது முன்னணி அரசு சாலை மறியல், ரயில் மறியல், கெரோ போராட்டங்களுக்கு ஏற்கெனவே தடைவிதித்துள்ளது; நகரில் ஊர்வலம் நடத்த குறிப்பிட்ட சில சாலைகளை மட்டுமே அரசு ஒதுக்கியுள்ளது; இதையும் தாண்டி ஒட்டு மொத்தமாக ஊர்வலத்துக்கே தடைவிதிப்பது எப்படி நியாயமாகும்? இதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்'' என்று புலம்பிய சி.பி.எம். மாநிலச் செயலாளரான அனில் பிஸ்வாஸ், தமது அரசு போராட்டங்களுக்குத் தடை விதித்துள்ள ஜனநாயக விரோத அரசுதான் என்பதைப் போட்டுடைத்தார்.

நீதிபதியின் உத்தரவுக்கு எதிராக வீரவசனம் பேசிய இப்போலி கம்யூனிஸ்டுகள், இப்போது யாருக்கும் இடையூறு ஏற்படாமல் ஊர்வலம் நடத்துவதே மிகப் பெரிய புரட்சி என்பதாக தமது சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்தக் கிளம்பிவிட்டனர். மே. வங்க 'இடது முன்னணி'யின் தலைவரான பிமன்பாசு, ''சாலை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு ஊர்வலம் செல்லாதீர்கள்; பொது மக்களுக்கோ போக்குவரத்துக்கோ இடையூறு செய்யாதீர்கள்'' என்று இப்போது உபதேசம் செய்கிறார்.

மே. வங்கத்தில் 'இடது முன்னணி' ஆட்சியில் ஏற்கெனவே அடிப்படை ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டு, இதர மாநிலங்களைப் போலவே அங்கேயும் வரம்புக்குட்பட்ட ஜனநாயக உரிமைகள் பெயரளவில்தான் உள்ளன; பயங்கரவாத ''பொடா'' சட்டத்துக்குப் போட்டியாக மாநில அளவில் ''பொகா'' சட்டத்தைக் கொண்டு வர முயற்சித்தது. மோதல் என்ற பெயரில் கொலைகளை நடத்த போலீசு பயங்கரவாதிகளுக்குக் கொம்பு சீவிவிட்டது, கிளிண்டனை எதிர்த்து பிரசுரம் விநியோகித்த நக்சல்பாரி புரட்சியாளர்களைக் கைது செய்து வதைத்தது, மறியல் - கெரோ போராட்டங்களுக்குத் தடை விதித்திருப்பது, ஊர்வலம் - பொதுக் கூட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதித்திருப்பது, பேருந்து - மின்கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டங்களின் மீது தடியடி என்று மே.வங்க இடது முன்னணி ஆட்சியாளர்கள் பாசிச ஜெயா வழியில் பீடு நடைபோட்டு வருகின்றனர். இப்போது, யாருக்கும் இடையூறு இல்லாமல் ஊர்வலம் நடத்துவது பற்றி 'இடதுசாரி' அரசிடம் உயர் நீதிமன்றம் பரிந்துரைகளைக் கோரியதும் அதையும் விசுவாசமாக ஏற்றுச் செயல்படுத்தக் கிளம்பிவிட்டனர்.

அது ஒருபுறமிருக்கட்டும், யாருக்கும் எந்த வகையிலும் எவ்வித இடையூறும் ஏற்படாமல், இயல்பு வாழ்க்கை சிறிதும் பாதிக்கப்படாமல் ஊர்வலமோ, போராட்டமோ நடத்த முடியுமா? ஒருக்காலும் அது சாத்தியமே இல்லை. முதலாளித்துவவாதிகளும் அவர்களது கைக்கூலி பத்திரி



படிப்பகம்

www.padippakam.com



ஊர்வலத் தடை உத்தரவை எதிர்த்து, இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளின் இளைஞர் அமைப்புகள் கொல்கத்தா நகரில் நடத்திய கண்டன ஊர்வலம்: பாசிச எதிர்ப்பு பம்மாத்து.

கைகளும்தான் ஊர்வலம் - போராட்டங்களால் பொதுமக்களுக்கு இடையூறும் பாதிப்பும் ஏற்படுவதாகப் பெருங் கூச்சல் போடுகிறார்கள். இதற்கேற்ப நடுத்தர வர்க்கத்தினரின் உளவியலையும் மாற்றியமைக்க ஓயாமல் பிரச்சாரம் செய்கிறார்கள்.

ஆட்சியாளர்கள் பயங்கரவாத பீதியூட்டி, ரயில்களிலும் பேருந்துகளிலும் சோதனை என்ற பெயரில் பயணிகளை அச்சுறுத்துவதும் விசாரணை செய்வதும் இடையூறு இல்லையா? பிரதமர், முதல்வர் என்று முக்கிய பிரமுகர்கள் பூனைப் படைகளுடன் கார்களிலே பறக்கும் போது, போக்குவரத்தையே பல மணி நேரத்துக்கு முடக்கி வைப்பது இடையூறு இல்லையா? அவ்வளவு ஏன், காசுமீரில் இந்திய பயங்கரவாத இராணுவம் ஒரு வட்டாரத்தையே முற்றுகையிட்டு, தேடுதல் வேட்டை என்ற பெயரில் அட்டூழியம் செய்கிறதே, அது என்ன சமூக சேவையா? இந்திய இராணுவம் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்துவதும், தன்னிச்சையாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பதும், தொழில் - வர்த்தகம் - போக்குவரத்து உள்ளிட்டு அனைத்தையும் முடக்கி வைப்பதும் பொது மக்களுக்கு இடையூறு இல்லாத நடவடிக்கையா? இதனால் அப்பகுதியின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதில்லையா? இத்தகைய அட்டூழியங்களுக்கு எதிராக எந்த நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்? எதுவும் கிடையாது.

ஆளும் கும்பலும் ஆட்சியாளர்களும் தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள மக்களை வதைத்தாலும் அவையெல்லாம் நாட்டு நலனுக்கானது என்று கதைப்பதும், ஒடுக்கப்பட்ட மக்கள் ஊர்வலமோ - போராட்டமோ நடத்தினால், ''ஐயோ இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு!'' என்று ஒப்பாரி வைத்துத் தடைவிதிப்பதும் ஜனநாயகமா? இல்லை; இதுதான் பாசிசம்! ஒரு பிரிவு உழைக்கும் மக்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி ஊர்வலம் நடத்தும்போது, இதர பிரிவினருக்கு தற்காலிகமாக இடையூறு ஏற்பட்டாலும் ஊர்வலத்தின் நியாயத்தையும் அவசியத்தையும் ஏற்று அங்கீகரிப்பதுதான் பரஸ்பரம் ஜனநாயகமானது; சுதந்திரமானது. இதற்கு மக்களிடம் சமூக அக்கறையை ஊட்டுவதும் அதற்கான அரசியல் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி உணர்வூட்டுவதும் மிக அவசியமானது.

ஆனால், போலி கம்யூனிஸ்டுகளோ மக்களுக்கு அரசியல் உணர்வூட்டும் அரசியல் பிரச்சாரம், அரசியல் போராட்டங்களைப் புறக்கணித்துவிட்டு, குறுகிய பொருளாதாரவாதப் போராட்டங்களையே நடத்தி வருகின்றனர். இது மக்களிடம் நிலவும் பிழைப்புவாத - சுயநலப் போக்கை மேலும் வளர்ப்பதற்குத்தான் உதவியுள்ளது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு ஆளும் கும்பல் அடுக்கடுக்காக பாசிச சட்டங்களைத் திணிக்கிறது. நீதித்துறையும் அதற்கு ஒத்தூதிக் கொண்டு ஊர்வலம் நடத்தக் கூட தடை விதித்து உத்தரவிடுகிறது.

இவ்வாறுதான் 1997-இல் கேரள உயர் நீதிமன்றம் கடையடைப்புப் போராட்டத்துக்குத் தடைவிதித்தது; அதை உச்ச நீதிமன்றமும் அங்கீகரித்தது. தமிழகத்தில் 2000-வது ஆண்டில் போலீசார் 17 பேரை நரவேட்டையாடிய தாமிரபரணி படுகொலையைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட ஒற்றை நீதிபதி கமிசன், அரசியல் பேரணிகளுக்குத் தடைவிதித்தது. இவ்வாண்டு மே மாதத்தில், தமிழகம் முழுவதும் முக்கிய வீதிகளில் ஊர்வலம் - பொதுக் கூட்டம் நடத்த சிறப்பு நீதிமன்றம் நிரந்தரத் தடை விதித்தது. அதன் தொடர்ச்சியாகவே இப்போது 'இடதுகள்' ஆளும் மாநிலத்திலும் ஊர்வலங்களுக்குத் தடையும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுகிறது.

நீதித்துறையின் பாசிச உத்தரவுகளை அம்பலப்படுத்தி எதிர்த்துப் போராடுவதை விட்டு, நாங்கள் நீதித்துறைக்கு எதிரானவர்களல்ல என்று பக்கவாட்டில் ஒதுங்கிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகள், கொல்கத்தா உயர் நீதிமன்றம் பொது மக்களுக்கு இடையூறு இன்றி ஊர்வலம் நடத்துவதற்கான பரிந்துரைகளைக் கோரியதும் அதையும் விசுவாசமாக ஏற்று செயல்படுத்தக் கிளம்பி விட்டனர். கொல்கத்தா நகரில் இரண்டு மைதானங்களில் மட்டுமே பொதுக் கூட்டங்களை நடத்த அனுமதிப்பது, அந்த மைதானத்திற்குள்ளேயே ஊர்வலம் நடத்த (அதாவது, விழுப்புரம் தி.மு.க. மாநாட்டில் நடந்த ஊர்வலம் போல) அனுமதிப்பது, மற்ற இடங்களில் ஊர்வலம் - பொதுக்கூட்டம் நடத்த 144-வது பிரிவின் கீழ் தடையுத்தரவு பிறப்பிப்பது என்பதாக 'மார்க்சிஸ்டு' அரசின் பரிந்துரைகள் அமைய உள்ளன என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே செய்தியைக் கசிய விட்டுள்ளன.

போலி கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை, இதுதான் பொது மக்களுக்கு இடையூறு இல்லாத வகையிலான ஊர்வலங்கள் போலும். இப்படி ஒதுக்குப்புறமான இடத்தில் பொதுக் கூட்டமும் மைதானத்திற்குள்ளேயே ஊர்வலம் நடத்துவதும், நீதிபதி லாலாவின் உத்தரவை விட எந்த வகையில் மாறுபட்டது? பொது மக்களுக்கு இடையூறு என்று கூறி ஒட்டு மொத்தமாக ஊர்வலங்களுக்கே தடை விதிக்கத் துடிக்கிறது நீதித்துறை. பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் பெயரளவில் ஊர்வலம் நடத்திக் கொள்கிறோம் எனத் தாமே அப்பாசிச உத்தரவைச் செயல்படுத்துகிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள். வேட்டியை உருவிக் கொண்டு விரட்டியடிக்கிறது நீதித்துறை. தாமே வேட்டியை அவிழ்த்து தலைப்பாகை கட்டிக் கொண்டு கோவணத்துடன் வீர நடை போடுகிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள்!

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

## போலி முத்திரைத் தாள் ஊழல் :

# தெரியுது பார் தேசிய ஒருமைப்பாடு!

பத்தாண்டுகளுக்கு முன்பு நரசிம்ம ராவ் ஆட்சி காலத்தில் நடந்த பங்கு பத்திர ஊழலைத் தூக்கிச் சாப்பிட்டு விடும் அளவிற்கு போலி முத்திரைத் தாள் ஊழல் நடந்திருப்பது தற்பொழுது அம்பலமாகியுள்ளது. அரசாங்கத்தின் கணக்குப்படி, பங்கு பத்திர ஊழலின் மதிப்பு வெறும் ஐந்தாயிரம் கோடி ரூபாய்தான். அதேபொழுதில், இப்போலி முத்திரைத் தாள் ஊழலின் மதிப்பு 3,000 கோடி ரூபாய் முதல் 30,000 கோடி ரூபாய் வரை இருக்கக் கூடும் என அரசாங்கமே மதிப்பிட்டுள்ளது. அரசாங்கத்தின் கணக்குப்படி இந்த ஊழலின் மதிப்பு 30,000 கோடி ரூபாயைத் தொடும் என்றால், இதனின் உண்மையான மதிப்பு பல இலட்சம் கோடி ரூபாயைத் தொட்டுவிடும். ஏனென்றால், ஏறத்தாழ ஒரு இலட்சம் கோடி ரூபாய் வரை மோசடி நடந்த பங்கு பத்திர ஊழலை, ஐயாயிரம் கோடி ரூபாயாக சுருக்கிக் காட்டிய அதிசயத்தைப் பார்த்தவர்கள் நாம்.

பங்கு பத்திர ஊழலுக்கும், இப்போலி முத்திரைத் தாள் விற்பனை ஊழலுக்கும் அநேக ஒற்றுமைகள் உண்டு. பங்கு பத்திர ஊழலின் நாயகன் அர்சத் மேத்தா என்றால், இப்போலி முத்திரைத் தாள் மோசடியின் நாயகன் அப்துல் கரீம் தெல்கி. அர்சத் மேத்தா வங்கிப் பணத்தைச் சூறையாடுவதற்கு அமைச்சர்களும், அதிகாரிகளும் துணையாக இருந்ததைப் போலவே அப்துல் கரீம் தெல்கி போலி முத்திரைத் தாள் விற்பனையை நாடெங்கும் நடத்துவதற்கும் அவர்கள் பக்கபலமாக இருந்து வந்தனர். குறிப்பாக, உயர் போலீசு அதிகாரிகள் தெல்கியின் மோசடிக்குப் பாதுகாப்பு கொடுத்ததை, ஒரு புனிதக் கடமையாகவே செய்து வந்தார்கள்.

ஒரு சொத்து விற்கப்படும் பொழுது, அச்சொத்தின் மதிப்புக்கு ஏற்றாற் போன்ற முத்திரைத் தாள்களை வாங்கி, அம்முத்திரைத் தாள்களில் அச்சொத்து பற்றிய விவரங்களை எழுதிப் பதிவு செய்து கொள்வது நமது நாடெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிர்வாக நடைமுறை. சொத்துப் பதிவு மட்டுமின்றி, பல்வேறு விதமான வியாபார ஒப்பந்தங்களும்; கொடுக்கல் - வாங்கல்களும்; சான்று ஆவணங்களும் முத்திரைத் தாள்களில் எழுதிப் பதியப்படுகின்றன.

இம்முத்திரைத் தாள்கள் பணத்திற்கு இணையான மதிப்பு கொண்டவையாதலால், மைய அரசே மிகவும் பாதுகாப்பாக இம்முத்திரைத் தாள்களை அச்சிட்டு, மாநில அரசுகளுக்கு விநியோகித்து விடுகிறது. சமூக விரோதக் கும்பல்கள் கள்ளப் பணத்தை அச்சிட்டுப் புழக்கத்தில் விடுவதைப் போல, அப்துல் கரீம் தெல்கி முத்திரைத் தாள்களைக் கள்ளத்தனமாக அச்சிட்டு, விற்பனை செய்து வந்தான். கடந்த எட்டு ஆண்டுகளாக நடந்து வந்த இந்த விற்பனையின் முழுப் பரிமாணமும் - தெல்கி உருவாக்கியிருந்த விற்பனை வலைப் பின்னல்; தெல்கிக்கு உதவிய அதிகாரிகள்; எம்.எல்.ஏ.க்கள், அமைச்சர்கள்; சட்டத்தின் பிடியில் இருந்து அவனைக் காப்பாற்றிய போலீசு அதிகாரிகள் - தற்பொழுதுதான் அரைகுறையாக அம்பலமாகியிருக்கிறது.

இந்த ஊழலைப் பற்றிச் சுருக்கமாக, ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், முத்திரைத் தாள் விற்பனையில், அரசாங்கத்துக்கு இணையான ஒரு சாம்ராஜ்ஜியத்தை நிறுவி நடத்தி வந்திருக்கிறான், அப்துல் கரீம் தெல்கி. முத்திரைத் தாள்களை அச்சடிக்க அரசாங்கம் எந்த அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி வந்ததோ, அதே அச்சு இயந்திரமும், ''டைகளும்'' தெல்கியிடமும் இருந்தன. முத்திரைத் தாள்களை அச்சிடுவதற்கு அரசாங்கம் இறக்குமதி செய்யும் காகிதமும், மூலப்பொருட்களும் தெல்கிக்கு எவ்விதத் தடையுமின்றி கிடைத்து

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படும் போலி முத்திரைத் தாள் ஊழல் நாயகன் அப்துல் கரீம் தெல்கி; சிறைச்சாலை என்ன செய்யும்?





படிப்பகம்

www.padippakam.com

வந்தது. மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு உள்ளிட்ட பத்து மாநிலங்களில், 70-க்கும் மேற்பட்ட நகரங்களில், தெல்கி ஒரு விற்பனை வலைப் பின்னலையே உருவாக்கி இருந்தான்.

சாதாரண பொதுமக்கள் மட்டுமின்றி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், ஆயுள் காப்பீட்டு நிறுவனம் போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் கூட, தெல்கியின் நிரந்தர வாடிக்கையாளராக இருந்தன. மும்பய் நகரில் மட்டும் தெல்கியின் போலி முத்திரைத் தாள் விற்பனை மாதமொன்றுக்கு 100 கோடி ரூபாயைத் தொட்டிருக்கிறது. 1994-இல் கர்நாடகா மாநிலத்தில் இருந்து மும்பய் நகருக்கு வேலை தேடி வந்த அப்துல் கரீம் தெல்கி, இன்று 17,000 கோடி ரூபாய் பெறுமான சொத்துக்களுக்கு அதிபதி.

### தெல்கியும் கருப்பு ஆடுகளும்

சமாஜ்வாதி ஜனதா கட்சி தலைவர்களுள் ஒருவரும், மும்பய் நகரிலுள்ள துலே சட்டமன்ற உறுப்பினருமான அனில் கோதேதான், வேலைதேடி மும்பய்க்கு வந்த தெல்கிக்கு, தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, முத்திரைத் தாள் விற்கும் உரிமம் வாங்கித் தந்தார். உரிமம் கிடைத்த சில மாதங்களுக்குள்ளாகவே, போலி முத்திரைத் தாள் விற்ற குற்றத்திற்காக தெல்கி கைது செய்யப்பட்டதோடு, தெல்கியின் உரிமமும் ரத்து செய்யப் பட்டது. எனினும் தெல்கி தனது அரசியல் தொடர்புகளைப் பயன்படுத்தி, மீண்டும் உரிமம் பெற்றான். காங்கிரசு கட்சியைச் சேர்ந்த மகாராஷ்டிராவின் முன்னாள் முதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக் மற்றும் மகாராஷ்டிரா மாநில அமைச்சர் அசோக் சவான் இவ்விருவருக்கும் தெல்கிக்கு உரிமம் கொடுத்ததில் பங்கிருப்பதாகக் கூறப்படுகிறது.

போலி முத்திரைத் தாள்களை வாங்கி விற்று வந்த தெல்கி, ரத்து செய்யப்பட்ட உரிமத்தை மீண்டும் பெற்ற பின், போலி முத்திரைத் தாள்களைத் தயாரிக்கும் அதிபராக மாறினான். சட்டமன்ற உறுப்பினர் அனில் கோதே மீண்டும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, நாசிக் நகரில் உள்ள மைய அரசுக்குச் சொந்தமான முத்திரைத் தாள்கள் அச்சடிக்கப்படும் அச்சகத்தில் இருந்து, அச்சு இயந்திரமொன்றை தெல்கிக்கு வாங்கிக் கொடுத்தார். இதற்காகவே முத்திரைத் தாள்களை அச்சடிக்கப் பயன்படுத்தப் பட்ட ஓர் அச்சு இயந்திரம், பயனற்றது எனக் கழித்துக் கட்டப்பட்டது. அந்த அரசு அச்சகத்தில் கழித்துக் கட்டப்படும் இயந்திரங்களை அக்கு வேறு ஆணி வேறாகக் கழட்டி விற்பதுதான் வழமையான நடைமுறை. ஆனால் இதற்கு மாறாக, முத்திரைத் தாள்களை அச்சடிக்கப் பயன்படுத்தப்பட்ட அச்சு இயந்திரம் பிரிக்கப்படாமல், ஏலத்தின் மூலம் தெல்கிக்கு விற்கப்பட்டது.



பெங்களூரில் கைப்பற்றப்பட்ட 170 கோடி ரூபாய் பெறுமான போலி நீதிமன்ற முத்திரை வில்லைகள்.

அச்சு இயந்திரத்தை தந்திரமான முறையில் ஏலத்தில் எடுத்துவிட்ட தெல்கி, அதன் பின் நாசிக் அரசு அச்சகத்தின் முன்னாள் ஊழியர் மாதவ் திக்காராம் கல்தே; முத்திரைத் தாள்களை அச்சடிக்கப் பயன்படுத்தப்படும் ''டை''களைத் தயாரிக்கும் பிரிவில் எழுத்தராகப் பணியாற்றி வந்த ராமசந்திர ரெட்டி; அச்சகத்திற்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை வாங்கும் பிரிவில் பணியாற்றி வந்த சிவராஜ் சர்மா என்ற அதிகாரி ஆகியோரையும் விலை பேசி தொழில் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொண் டான்.

''முத்திரைத் தாள்களை எப்படி நேர்த்தியாக அச்சடிக்க வேண்டும்? முத்திரைத் தாளின் அளவு எவ்வளவு இருக்க வேண்டும்? முத்திரைத் தாள்களை அச்சடிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்களை யாரிடம் வாங்க வேண்டும்?'' ஆகிய விவரங்களை தெல்கியின் தொழில் கூட்டாளி மாதவ் திக்காராம் கல்தே விரல் நுனியில் வைத்திருந்தான். மேலும், இந்திய அரசு அச்சகத்தின் ''டைகள்'' தயாரிக்கும் பிரிவிற்கு, தெல்கியின் ஆட்கள் சர்வசாதாரணமாகப் போய் வந்து தொழில் நுணுக்கங்களைக் கடத்தி வந்தனர்; அங்கு அச்சடிக்கப்படும் முத்திரைத் தாள்களுக்கு என்ன வரிசை எண் கொடுக்கப்படுகிறது என்பதைக் கூட மோப்பம் பிடித்து விடும் அளவிற்கு, தெல்கியின் செல்வாக்கு நாசிக்கின் அரசு அச்சகத்தில் கொடி கட்டிப் பறந்தது. 1998-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் இருந்து 300 அச்சு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப் பட்ட பொழுது, சில அச்சு இயந்திரங்கள் காணாமல் போய்விட்டதாகவும்; அப்படி காணாமல் போன அச்சு இயந்திரங்கள் கனகச்சிதமாக தெல்கியின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்ததாகவும் கூறப்படுகிறது.

போலி முத்திரைத் தாள்களை அச்சடிப்பதில் மட்டுமல்ல, அதை விற்பதிலும் கூட, நாசிக்கின் அரசு அச்சகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், வருவாய்த் துறை அதிகாரிகளும் தெல்கிக்கு பலவிதங்களில் உதவியிருக்கிறார்கள். தெல்கி தயாரித்த போலி முத்திரைத் தாள் விற்பனை அமோகமாக நடைபெற வேண்டும் என்பதற்காகவே, அரசு வினியோகம் செய்யும் முத்திரைத் தாளில் செயற்கையான தட்டுப்பாட்டை அதிகாரிகள் உருவாக்கினார்கள். இப்படி திடீர் தட்டுப்பாடு உருவாக்கப்படும் நேரங்களில், மும்பய் நகரில் அரசு முத்திரைத் தாள்கள் விநியோகிக்கப்படும் அலுவலக வாசலிலேயே, தெல்கியின் ஆட்கள் போலி முத்திரைத் தாள்களை எவ்விதச் சிக்கலுமின்றி விற்பனை செய்திருக்கிறார்கள்.

அரசு உரிமம் பெற்ற விற்பனையாளர்கள் மூலமும் போலி முத்திரைத் தாள்களை விற்றுவந்த தெல்கி, இன்னொருபுறம் இந்த விற்பனையை இரகசியமாக நடத்துவதற்கு பல பெயர்ப் பலகை நிறுவனங்களையும் நடத்தி வந்தான். தமிழகத்தில் போலி முத்திரைத் தாள் விற்பனையை நடத்துவதற்கு தெல்கி நான்கு பெயர்ப் பலகை நிறுவனங்களை நடத்தி வந்த போதிலும், அவன் மீது தமிழகத்தில் ஒப்புக்காக ஒரேயொரு வழக்குதான் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்கியின் நிறுவனங்களில் கிட்டதட்ட 600 பேர் விற்பனைப் பிரதிநிதிகளாக வேலை பார்த்து வந்தனர். இவர்களுள் பலர் வர்த்தக மேலாண்மை பாடத்தில் பட்ட மேற்படிப்பு (M.B.A.) படித்தவர்கள். இவர்களின் வேலையே பொதுத்துறை நிறுவனங்களையும் தனியார் நிதி நிறுவனங்களையும்



படிப்பகம்

www.padippakam.com

தெல்கியின் வாடிக்கையாளர்களாக மாற்றுவதுதான். பொதுத்துறை நிறுவனங்கள் முத்திரைத் தாள்கள் வாங்கும் பொழுது, முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் அந்நிறுவன அதிகாரிகளுக்கு, முத்திரைத் தாள் மதிப்பில் 2.5 சதவீதத்தை இலஞ்சமாகத் தள்ளிவிடுவது 'இயல்பான' வழக்கம். தெல்கி, இந்த இலஞ்சத்தை 5 சதவீதமாக உயர்த்திப் பொதுத்துறை நிறுவனங்களைத் தனது வலையில் வீழ்த்தினான்.

பொதுவாக, போலி பொருட்கள் அதன் அசலைவிட விலை மலிவாக விற்கப்படும். ஆனால், தெல்கியின் வியாபாரத்தில் இது நேருக்கு மாறாக நடந்தது. முத்திரைத் தாள்களை அச்சடிக்க அரசு எந்த அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தியதோ, எந்த ''டைகளையும்'', காகிதத்தையும் பயன்படுத்தியதோ, அவற்றையே தெல்கியும் பயன்படுத்தியதால்; அரசாங்கம் முத்திரைத் தாள்களுக்கு வழங்கிய அதே வரிசை எண்களை, தெல்கி போலி முத்திரைத் தாள்களுக்கும் வழங்கியதால், அசலையும், போலியையும் வேறுபடுத்திப் பார்க்க இயலாமல் போனது.

### ''வேலியே பயிரை மேய்ந்த கதை''

அப்துல் கரீம் தெல்கி, 1995-ஆம் ஆண்டு தொடங்கி நடத்தி வரும் இந்தச் சட்ட விரோத போலி முத்திரைத் தாள் விற்பனை, உயர் போலீசு அதிகாரிகளுக்கு, குறிப்பாக, மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களைச் சேர்ந்த போலீசு அதிகாரிகளின் ''கண் முன்னாலும்''. அவர்களின் ஒத்துழைப்போடும் தான் நடந்து வந்தது. போலி முத்திரைத் தாள்களை அச்சடிக்க, தெல்கி மும்பய் நகரின் தங்கச் சாலை பகுதியில் அமைத்திருந்த அச்சகத்திற்கு முன்வரிசையில் தான் மும்பய் நகரின் ஒரு போலீசு நிலையம் அமைந்திருக்கிறது. தெல்கியிடமிருந்து இலஞ்சப் பணத்தைக் கறப்பதற்காகவே, மும்பய் போலீசார் தெல்கியின் அச்சகத்தில் பலமுறை சோதனையும் நடத்தியிருக்கிறார்கள்.

மும்பய் போலீசார் 1995-ஆம் ஆண்டே தெல்கி மீது 11 கிரிமினல் வழக்குகளைத் தொடுத்திருந்தனர். இந்த வழக்குகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து விசாரித்த மும்பய் உயர் நீதிமன்றம் தெல்கிக்குப் பிணை வழங்க மறுத்துவிட்டது. எனினும், மும்பய் போலீசு அதிகாரிகள் தெல்கியைக் கைது செய்ய எந்த முனைப்பும் காட்டாமல் தப்பவிட்டனர். 1999-ஆம் ஆண்டு மும்பய் நகருக்கு அருகிலுள்ள மீரா ரோடு எனுமிடத்தில் தெல்கியின் ஏஜெண்ட் ஒருவனிடமிருந்து 84 இலட்சம் மதிப்புள்ள போலி முத்திரைத் தாள்களைக் கைப்பற்றிய போலீசார், தெல்கியின் மீது வழக்குகூடப் பதியவில்லை.

ஆந்திராவில் போலி முத்திரைத் தாள் விற்பனை செய்த கும்பலொன்றை, ஆந்திர போலீசார் 1999-ஆம் ஆண்டே கூண்டோடு பிடித்தனர். இது தொடர்பாக, அப்பொழுதே, ஆந்திர போலீசாரால் தெல்கி விசாரிக்கப்பட்டாலும், தெல்கி கைது செய்யப்படாமல் விடுவிக்கப்பட்டான். இந்த வழக்கு தொடர்பாக ஆந்திர போலீசாரால் விசாரிக்கப்பட்டவர்களுள், தெல்கியின் தொழில் கூட்டாளியும், தெலுங்கு தேச சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ண யாதவின் கைத்தடிகளும் இருந்தனர்.

ஆந்திரக் குற்றவியல் போலீ

# மகாராஷ்டிரா போலீசின் மறுபக்கம்

அப்துல் கரீம் தெல்கி, தன்னைக் கைது செய்து, விசாரணை செய்த கர்நாடகா மாநிலத்தின் முன்னாள் போலீசு இயக்குநர் சங்கிலியானாவிடம், தன்னைக் கைது செய்யாமல், தனது தொழிலுக்கு உதவிய ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களைச் சேர்ந்த பல உயர் போலீசு அதிகாரிகளின் பெயர்களைக் கக்கியிருக்கிறான். அவர்களுள், மகாராஷ்டிரா போலீசின் சமூக விரோத கிரிமினல் முகம் மட்டும் தற்பொழுது சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணையில் அம்பலமாகியிருக்கிறது.

★ பிவாண்டி எனுமிடத்தில் தெல்கிக்குச் சொந்தமான ஒரு கிடங்கை மும்பய் போலீசார், சனவரி 2003-இல் சோதனையிட்ட பொழுது 850 கோடி ரூபாய் பெறுமான போலி முத்திரைத் தாள்களைக் கைப்பற்றினர். அந்த சமயத்தில் குற்றவியல் பிரிவின் இணை கமிசனராக இருந்த சிறீதர் வாகய், அந்த வழக்கில் தெல்கியின் பெயரைச் சேர்க்காமல் விடுவதற்காக, தெல்கியிடமிருந்து 90 இலட்ச ரூபாய் இலஞ்சமாகப் பெற்றுள்ளார். இந்தத் திரைமறைவு சதி தொடர்பாக சிறீதர் வாகய்க்கும், தெல்கிக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடல், வாகய்க்கு எதிரான ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளது. தெல்கி, பெங்களூர் சிறையில் 'அடைபட்டு'க் கிடந்த சமயத்தில்தான் இந்த இலஞ்சப் பணம் கைமாறியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

★ குற்றவியல் பிரிவில் உயர் ஆய்வாளராக இருந்த வசிஷ்ட் அந்தாலே, மே 2002-இல் (தெல்கி பெங்களூர் சிறையில் இருந்த சமயம்) மும்பய் நகரின் துறைமுகப் பகுதியிலும், அந்தேரியிலும் தெல்கிக்குச் சொந்தமாக இருந்த சில அலுவலகங்களைச் சோதனையிட்டு, பல இலட்சம் ரூபாய் பெறுமான போலி முத்திரைத் தாள்களைக் கைப்பற்றினார். இந்த வழக்கில் தெல்கியின் பெயரைச் சேர்க்காமல் இருப்பதற்காக இலஞ்சம் வாங்கிக் கொண்ட அந்தாலே, கைப்பற்றிய போலி முத்திரைத் தாள்களை தெல்கியின் ஆட்கள் மூலமாகவே விற்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். தெல்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட இலஞ்சப் பணத்தை ஆய்வாளர் அந்தாலேயும், குற்றவியல் பிரிவின் துணை கமிசனர் கோகுல் பாட்டிலும் பங்கு போட்டுக் கொண்டனர்.

தெல்கியிடமிருந்து 90 இலட்ச ரூபாய் இலஞ்சம் பெற்றதற்காகக் கைது செய்யப்பட்டுள்ள போலீசு இணைகமிசனர் சிறீதர் வாகய்.



★ மீரா ரோடு போலீசு நிலையத்தில் 1999-ஆம் ஆண்டு தெல்கியின் மீது கிரிமினல் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது. தெல்கியிடமிருந்து இலஞ்சம் வாங்கிக் கொண்டு, இந்த வழக்கைப் பலவீனப்படுத்தியதற்காக, துணை ஆய்வாளர் பிரதாப் காக்டே கைது செய்யப்பட்டுள்ளார்.

★ தெல்கியின் கார் ஓட்டுநர் கொலை செய்யப்பட்ட வழக்கில், தெல்கி முதல் குற்றவாளியாகக் காட்டப்பட்டுள்ளார். இந்தக் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக, நவம்பர் 2002-இல் பெங்களூர் சிறையில் இருந்து மும்பய்க்குக் கொண்டு வரப்பட்ட தெல்கி, சிறையில் அடைக்கப்பட்டு விசாரிக்கப் படவில்லை, மாறாக, தாராவி போலீசு நிலையத்தில் குற்றப்பிரிவு அதிகாரிக



படிப்பகம்

www.padippakam.com

சாரால் விசாரிக்கப்பட்டு வந்த இந்த வழக்கு, 1999-ஆம் ஆண்டிலேயே புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில் ஆந்திரப் புலனாய்வுப் போலீசு இந்த வழக்கு தொடர்பாக ஒருவரையும் கைது செய்யவில்லை; குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யவில்லை. இந்த முக்கியமான வழக்கை கிடப்பில் போட்டதற்கு புலனாய்வுப் பிரிவின் துணை கமிசனர்தான் காரணம் என குற்றவியல் போலீசார் வெளிப்படையாகவே குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

அப்துல் கரீம் தெல்கி 2001-ஆம் ஆண்டு ஆஜ்மீர் நகரில், கர்நாடகா போலீசாரால் கைது செய்யப்பட்டு, பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டான். எனினும், இதனால் அவனது தொழிலுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் எவ்விதப் பின்னடைவும் ஏற்படவில்லை. தெல்கி கர்நாடகா மாநில சிறையில் இருந்தபடியே, தொலைபேசி மூலம் தனது தொழில் கூட்டாளிகளைத் தொடர்பு கொண்டு, பத்து மாநிலங்களிலும் போலி முத்திரைத்தாள் விற்பனையைத் தொடர்ந்து நடத்தி வந்தான். இது பற்றி தெல்கி, தனது வக்கீலிடம், "எனது அலவலகத்தை மும்பயில் இருந்து பெங்களூருக்கு மாற்றிக் கொண்டு விட்டதாக" நக்கலாகக் கூறியிருக்கிறான்.

மகாராஷ்டிராவைச் சேர்ந்த அன்னா ஹஸாரே என்ற காந்தியவாதி, இப்போலி முத்திரைத் தாள் வழக்குகள் தொடர்பாக மும்பய் உயர்நீதி மன்றத்தில் ஒரு பொது நல வழக்கைத் தொடுத்த பிறகுதான் இந்த மோசடியை இனியும் முழுதாக மூடி மறைத்துவிட முடியாது என்ற நிர்ப்பந்தம் உருவானது. மும்பய் உயர் நீதிமன்றம் உத்தரவின் பின் அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு தனது விசாரணையைத் தொடங்கியவுடனேயே அமைச்சர்கள் - அதிகாரிகள் துணையோடு போலி முத்திரைத் தாள் விற்பனையில், தெல்கி ஒரு சாம்ராஜ்ஜியத்தை நடத்தி வந்த விவகாரம் மெல்ல மெல்ல அம்பலமாகத் தொடங்கியது.

தற்பொழுது இந்த ஊழல் மோசடி தொடர்பாக, துலே சட்டமன்ற உறுப்பினரான அனில் கோதே; தெலுங்கு தேசக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண யாதவ்; இந்திய அரசு அச்சகத்தின் முன்னாள் ஊழியர் மாதவ் கல்தே; மகாராஷ்டிரா மாநில போலீசு இயக்குநர் சிரீதர் வாகல்; மகாராஷ்டிரா போலீசு துறையின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த துணை கமிஷனர் கோகுல் பாட்டில்; குற்றவியல் போலீசு ஆய்வாளர் வசிஷ்ட் அந்தாலே; துணை ஆய்வாளர் பிரபாகர் காக்டே ஆகியோர் பொடாவுக்கு இணையான, மகாராஷ்டிரா மா..ஃபியா நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர, தெல்கியின் தொழில் கூட்டாளிகள் 50 பேர் பல்வேறு கிரிமினல் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**ஓட்டுக்கட்சிகள்:**
**தேள் கொட்டிய திருடர்கள்**

மகாராஷ்டிராவைத் தவிர, பிற மாநிலங்களில் இன்னும் இந்த ஊழல் பற்றிய விசாரணை உருப்படியாகத் தொடங்கவேயில்லை. மகாராஷ்டிராவில் விசாரணை நடத்தி வரும் சிறப்புப் புலனாய்வுக் குழுவும், இன்னும் விசாரிக்க வேண்டிய அதிகாரிகள், ஓட்டுக்கட்சி தலைவர்கள்

ளாக இருந்த திலீப் காமத்தும், தத்தாத்ரே தல்லும், தெல்கியை குர்லாவில் உள்ள அப்சரா என்ற விடுதியில் குளிரூட்டப்பட்ட அறையில் தங்க வைத்து ராஜ உபசாரம் செய்தனர். குற்றப்பிரிவு இணை கமிசனர் சிரீதர் வாகயின் மேற்பார்வையில்தான், தெல்கி முப்பது நாட்களுக்கு மும்பய் போலீசின் விருந்தாளியாகத் தங்க வைக்கப்பட்டான்.

இது மட்டுமின்றி, துணை ஆய்வாளர் காமத், தெல்கியை உல்லாச சுற்றுலாப் பயணமாக கோவாவுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். இந்த மூன்று நாள் சுற்றுலாப் பயணத்திற்காக தெல்கியிடமிருந்து காமத் பல இலட்சங்களை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டார். மேலும், 1995-ஆம் ஆண்டு தொடங்கியே தெல்கிக்கும், குற்றப்பிரிவு போலீசு அதிகாரி காமத்துக்கும் இடையே தொடர்பு இருந்து வந்ததும் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

மற்றொரு போலீசு அதிகாரி பிரகாஷ் தேஷ்மு க்கும் தெல்கியின் குடும்பத்தினர் அனைவரையும் வழக்கில் மாட்டி விடுவோம் என மிரட்டியே தெல்கியிடமிருந்து மூன்று கோடி ரூபாய் இலஞ்சத்தைக் கறந்துள்ளனர். மற்றொரு உதவி கமிசனராக இருந்த முஷ்ரி..ஃப், போலீசாரின் இந்த மா..ஃபியா நடவடிக்கையை சர்மாவிடம் கூறிய பொழுது, சர்மா, "இதைப் பெரிதுபடுத்த வேண்டாம்" என முஷ்ரி..ஃபுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பெங்களூரில் இருந்து மும்பய்க்கு விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட தெல்கியை, குற்றப்பிரிவு போலீசார் கைதியைப் போல் நடத்தாமல், விருந்தாளியைப் போல் நடத்தியதும்; தெல்கியை கோவாவுக்கு அழைத்துச் சென்று உல்லாசமாகத் தங்கவைத்ததும் சர்மாவிற்கு தெரிந்தேதான் நடந்தது என சிறப்புப் புலனாய்வுக் குழு சர்மா மீது குற்றஞ் சுமத்தியுள்ளது. ஆர்.எஸ்.சர்மா, தெல்கி தொடர்பான வழக்குகளில் ஒன்பது முறை தெல்கிக்குச் சாதகமாக நடந்து கொண்டார் என்றும் சிறப்புப் புலனாய்வுக் குழு அம்பலப்படுத்தியிருக்கிறது.

★ சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணைக்குப் பிறகு விடுப்பில் சென்றுவிட்ட மும்பய் நகர போலீசு கமிசனர் ஆர்.எஸ் சர்மா, 1995-ஆம் ஆண்டு தொடங்கியே தெல்கி சம்பந்தப்பட்ட கிரிமினல் மோசடி விவகாரங்களைப் பெரிதாகக் கண்டு கொள்ளாமல் நடந்து வந்தார் என்பது போலீசு துறை முழுவதுக்கும் தெரிந்த இரகசியம். இவரின் நடத்தைப் பற்றி 2002-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட துறை சார்ந்த விசாரணையில், தெல்கி தொடர்பான வழக்குகளில் சர்மா கடமை தவறி நடந்து கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

சர்மா, 2002-ஆம் ஆண்டு புனா நகர போலீசு கமிசனராக இருந்த பொழுது, பல கோடி ரூபாய் பெறுமான போலி முத்திரைத் தாள்கள் கைப்பற்றப்பட்டன. சர்மாவின் கீழ் பணியில் இருந்த உதவி கமிசனர் முலானியும்,

தெல்கிக்குச் சாதகமாக நடந்து கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டுள்ள மும்பய் நகர போலீசு கமிசனர் ஆர்.எஸ். சர்மா.



இந்த ஊழல் - மோசடி விவகாரத்தில் அடுத்தடுத்து ஐ.பி.எஸ். போலீசு அதிகாரிகள் சிக்குவதைக் கண்டு, "மகாராஷ்டிரா மாநில போலீசு துறை முழுவதையுமே மாற்றி அமைக்க வேண்டும்" என ரிபைரோ போன்ற முன்னாள் போலீசு அதிகாரிகளே மூக்கைச் சிந்த வேண்டிய நிலை உருவாகிவிட்டது. "ஓட்டுக்கட்சித் தலைவர்கள்தான் ஊழல் பேர்வழிகள்; ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் அனைவரும் சொக்கத் தங்கம்" என "சோ" போன்ற பேர்வழிகள் திரும்ப திரும்பக் கூறுவது அப்பட்டமான பித்தலாட்டம் என்பதை போலி முத்திரைத் தாள் ஊழல் விவகாரம் மீண்டுமொரு முறை எடுத்துக் காட்டிவிட்டது. ●



படிப்பகம்

www.padippakam.com




பற்றிய நீண்ட தொரு பட்டியலைக் கையில் வைத்துக் கொண்டுள்ளது.

இந்த ஊழல் தொடர்பாக இதுவரை அம்பலமாகியுள்ள விவரங்கள் அனைத்தும் கடுகளவானதுதான். சிறப்புப் புலனாய்வுக் குழு மலை முழுங்கி மகாதேவன்களை இன்னும் நெருங்கவேயில்லை. மகாராஷ்டிரா மாநில உள்துறை அமைச்சர் புஜ்பால், புகழ்பெற்ற வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி போன்ற பெருந்தலைகளின் பெயர்களும் இந்த ஊழல் விவகாரத்தில் அடிபடுகிறது. தெல்கி, தனது நாட்குறிப்பேட்டில் தனக்கு 19 அமைச்சர்களுடன் தொடர்பிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளான்.

மகாராஷ்டிராவை ஆளும் காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணி ஆட்சியை, பா.ஜ.க.வும், சிவசேனாவும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு கவிழ்க்க முயன்ற பொழுது, ஆளுங் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பெங்களூர் நகரில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டனர். இந்தப் பாதுகாப்புக்கு ஆன செலவு 20 கோடி ரூபாயையும், தெல்கிதான் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. ஒரு அரசாங்கத்தின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஒரு கிரிமினலிடம் ஒப்படைக்கப்படுகிறது என்றால், இந்திய அரசியல் அமைப்பும், ஓட்டுக்கட்சிகளும் கிரிமினல்மயமாவதில், அதன் எல்லைக்கே சென்றுவிட்டன என்றுதான் கூறவேண்டும்.

இந்திய அரசியல் அரங்கை உலுக்கிய போஃபார்ஸ் பீரங்கி பேர ஊழல், பங்குப் பத்திர ஊழல் - இவ்விரண்டையும் தூக்கிச் சாப்பிட்டுவிடும் அளவிற்கு இந்த ஊழல் நடந்திருந்த பொழுதும், இதனை அம்பலப்படுத்துவதில் ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் அடக்கியே வாசிக்கின்றன. காங்கிரசு ஆளும் மகாராஷ்டிரா மாநிலம், இந்த ஊழலின் மையமாக இருந்த போதிலும் அம்மாநில எதிர்க்கட்சியான பா.ஜ.க கூட இந்த ஊழலை மையப் புலனாய்வுத்துறை விசாரிக்க வேண்டும் என்று அறிக்கை விடுவதற்கு மேல் வாயைத் திறக்க மறுக்கிறது.

பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி மகாராஷ்டிராவை ஆண்ட பொழுதுதான், தெல்கியின் திருவிளையாடலே தொடங்கியது. மேலும், பா.ஜ.க., ஆளும் குஜராத்திலும், பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சிகள் ஆளும் ஆந்திராவிலும், அரியானாவிலும் இந்த ஊழல் நடந்திருக்கிறது. பத்து மாநிலங்களில் இந்த ஊழல் நடந்திருப்பதால், தேசிய கட்சிகள் அனைத்திற்கும் இந்த ஊழலோடு தொடர்புண்டு என்று அடித்துக் கூறலாம். அதனால்தான், இந்த ஊழல் அம்பலமானதில் இருந்தே, ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் தேள் கொட்டிய திருடனைப் போல் முழிக்கின்றன.

பிற ஓட்டுக்கட்சிகளின் இந்த மௌனத்திற்கு கைமாறாக, கர்நாடகா காங்கிரசு அரசாங்கம் தன் கைவசமுள்ள, தெல்கிக்கும், பல்வேறு ஓட்டுக் கட்சித் தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே நடந்த பதிவு செய்யப்பட்ட உரையாடலை அமுக்கிவிட முயன்று வருகிறது. 1500 மணி நேரம் ஓடும் இந்தப் பதிவு செய்யப்பட்ட உரையாடலை, மும்பய் உயர்நீதி மன்றம் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைக்கக் கூறிய பொழுது, கர்நாடகா மாநில காங்கிரசு அரசாங்கம் தேவைப்படும் பகுதிகளை மட்டும் தருகிறோம் எனப் பேரம் நடத்தியது. மும்பய் உயர்நீதிமன்றம் உரையாடல் முழுவதையும் தர வேண்டும் என உத்தரவிட்டுள்ளதையடுத்து, இந்த உரையாடலை மொழி பெயர்க்க ஒரு வருட அவகாசம் தேவை என வாய்தா கேட்டுள்ளது.

இன்னொருபுறம், உள்துறை அமைச்சர் அத்வானி, இந்த ஊழலின் பின்னே பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. யின் சதி இருப்பதாக ஒரு அபாண்டமான குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். இந்த ஊழலின் நாயகன் அப்துல் கரீம் தெல்கி முசுலீம் மதத்தைச் சேர்ந்தவன் என்பது தவிர, அத்வானியின் இந்த இந்து மதவெறி பிடித்த குற்றச்சாட்டுக்கு வேறு ஆதாரம் எதுவும் இருக்க முடியாது.

அத்வானி கூறுகிறபடி இந்த ஊழல் ஐ.எஸ்.ஐ.-இன் சதி என்றால், அப்துல் கரீம் தெல்கி மட்டும் தானா பாக். உளவாளியாகச் செயல்பட்டிருக்கிறான்? இந்த ஊழலில் மாட்டிக் கொண்டுள்ள கிருஷ்ண யாதவ், அனில் கோதே, ஆர்.எஸ்.சர்மா உள்ளிட்ட 'இந்துக்கள்' அனைவரும் ஒன்றும் தெரியாத அப்பாவிகளா? அத்வானி சொல்வது உண்மையென்றால், 'தேசியம்' பேசும் ஓட்டுக்கட்சித் தலைவர்களும், அதிகாரவர்க்கமும் ஐ.எஸ்.ஐ. உளவாளிகளாக, ஐந்தாம் படைகளாக மாறிவிட்டார்கள் என்ற முடிவுக்குதான் வர வேண்டும்.

இந்த ஊழல், நாடு எத்தகைய கிரிமினல் கும்பலிடம் சிக்கிக் கொண்டுள்ளது என்பதை மீண்டுமொருமுறை எடுத்துக் காட்டிவிட்டது. இந்த கிரிமினல் கும்பலை சி.பி.ஐ. விசாரணையோ, நீதிமன்றமோ தண்டித்துவிடாது. இதற்கு போஃபார்ஸ் பீரங்கி பேர ஊழல், பங்குப் பத்திர ஊழல் எனப் பல ஊழல் வழக்குகளை உதாரணங்களாகக் காட்ட முடியும். நக்சல்பாரி புரட்சியாளர்கள் கூறும் மக்கள் நீதிமன்றங்களை அமைப்பதன் மூலம் தான் இந்தக் கிரிமனல் கும்பலைத் தண்டிக்க முடியும்; இந்தக் கும்பலின் பிடியில் இருந்து நாட்டை மீட்கவும் முடியும்.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com



## 19 பேர் உயிரோடு எரிப்பு: தொழிற்சங்க சுல்தானின் கொட்டத்துக்குப் பதிலடி

தாரகேஷ்வர் லோஹர் - சி.பி.எம். கட்சியின் தலைமையிலான சி.ஐ.டி.யு. சங்கத்தின் முக்கிய பிரமுகர். மேற்கு வங்கத்தின் வடக்கே ஜல்பைகுரி மாவட்டத்திலுள்ள தல்கோன் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் சங்கமான சபகன் மஸ்தூர் யூனியனின் தலைவர். இந்த வட்டாரத்தில் இவன் வைத்ததுதான் சட்டம் எனுமளவுக்கு கொட்டமடித்து வந்த தொழிற்சங்க சுல்தான். தேயிலையை ஏலம் விடுவது, ஒப்பந்தப் புள்ளிகளைத் தீர்மானிப்பது, புதிதாக வேலைக்கு ஆளெடுப்பது உட்பட அனைத்தையும் தீர்மானிக்கும் அதிகாரம் கொண்ட முடிசூடா மன்னனாக இவன் வலம் வந்து கொண்டிருந்தான். சி.பி.எம். கட்சியால் பயிற்றுவித்து வளர்க்கப்பட்ட இத்தொழிற்சங்கத் தரகனுக்கு சி.ஐ.டி.யு. சங்கம் மாதம் ரூ.2000 ஊதியமாக அளித்து வந்ததாகக் கூறுகிறது. ஆனால், அவனோ தல்கோனில் நீருற்று கொண்ட முகப்பு வாசலும் மலர்த் தோட்டங்களும் கொண்ட மாளிகை கட்டிக் கொண்டு, மாருதி காரில் உல்லாசமாகப் பவனிவந்து தொழிற்சங்க 'புரட்சி'ப் பணியாற்றி வந்தான்.

கடந்த ஆகஸ்ட்டில் தேயிலைத் தோட்ட நிர்வாகம் 3 எழுத்தர் வேலை காலியாக உள்ளதாக அறிவித்தது. அதற்கு ஆட்களை நியமிக்கும் புரோக்கர் வேலையை வழக்கம் போலவே சி.ஐ.டி.யு சங்கம் எடுத்துக் கொண்டது. இதற்கான போட்டாபோட்டியில் தொழிற்சங்கமே இரு பிரிவாகி மோதிக் கொண்டது. தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் தமது வாரிசுகள் - உறவினர்களுக்கே அப்பணியிடங்களை ஒதுக்க வேண்டும் என்றும், லோஹர் தலைமையிலான கும்பல் அப்பணியிடங்களை வெளியாட்களுக்கு விற்றுச் சங்கத்துக்கு நிதி திரட்ட வேண்டும் என்றும் நாய்ச் சண்டையில் இறங்கினர். கடந்த அக்டோபரில், லோஹரின் பணபலம் - அடியாள் பலத்தால் அப்பணியிடங்கள் வெளியாட்களுக்கே இறுதியில் தரப்பட்டன. இதன் காரணமாகத் தொழிலாளர்களிடையே அதிருப்தியும் ஆத்திரமும் நிலவியதால், சி.ஐ.டி.யு. சங்கம் லோஹரைத் தற்காலிகமாகப் பொறுப்பிலிருந்து நீக்குவதாகக் கூறி, சங்கத்தைத் தக்கவைத்துக் கொள்ள சமரச நாடகமாடியது. ஆனால், லோஹரின் குண்டர் பலம் - அச்சுறுத்தலினால் அது செல்லுபடியாகவில்லை.

இந்நிலையில், கடந்த நவம்பர் 6-ஆம் நாளன்று காலை லோஹர் மாளிகைமுன் ஏறத்தாழ 70 தொழிலாளர்கள் திரண்டு, அவனது அடாவடித்தனங்களுக்கு எதிராகக் காரசார மாக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அது கைகலப்பாக முற்றியதும் ஆத்திரமடைந்த லோஹர் தனது கைத்துப்பாக்கியை எடுத்து கண்டபடி சுட்டான் இதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து விழுந்தார். இக்கொலை வெறியாட்டத்தை அறிந்து வெகுண்டெழுந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தமது குடும்பத்தோடு ஏறத்தாழ 700 பேருக்கு மேல் திரண்டு லோஹர் மாளிகையை முற்றுகையிட்டுத் தாக்குதல் நடத்தித் தீ வைத்துக் கொளுத்தினர். தொழிலாளர்கள் திரண்டு வருவதை அறிந்த லோஹர் தப்பியோடிவிட்டான். ஆனால், மாளிகையிலிருந்த அவனது குடும்பத்தாரும் உறவினர்களுமாக 19-பேர் தீயில் சிக்கி உயிரோடு எரிந்து மாண்டு போயுள்ளனர். இக்கொடுஞ் செயலை ஒட்டி, பெண்கள் உள்ளிட்டு 109 பேரை போலீசார் கைது செய்துள்ளனர். "லோஹர் ஒரு கொடுங்கோலன்; அவனது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தி 19 பேரைக் கொன்றதற்காக நான் வருந்தவில்லை; எனவேதான் நான் தப்பியோடித் தலைமறைவாகவில்லை" என்று ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி வழக்கு மன்றத்தில் வாக்குமூலம் அளிக்குமளவுக்கு சி.ஐ.டி.யு.வின் தொழிற்சங்கத் தலைவன் வெறுக்கத்தக்க விரோதியாக இருந்துள்ளான்.

இத்தனை காலமும் லோஹரின் தொழிற்சங்க "தாதா" தனத்தை அங்கீகரித்து ஆதரித்து வந்த சி.ஐ.டி.யு. சங்கம், அவனை ஏற்கனவே பொறுப்பிலிருந்து நீக்கி விட்டதாக மாய்மாலம் செய்கிறது. "சி.பி.எம். கட்சியின் கௌரவத்தை லோஹர் நாசமாக்கிவிட்டான். அதன் தொழிலாளர்களைச் சுரண்டும் கொள்ளைக்காரனாக இருந்துள்ளான்" என்று மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர் இப்போது புலம்புகிறார். சி.ஐ.டி.யு. தொழிற்சங்க சுல்தான்கள் அம்பலப்படாதவரை அவர்களை ஆதரித்து அரவணைத்துக் கொள்வதும், மக்கள் முன் அம்பலப்பட்டதும் தமக்கும் அத்தகைய கழிசடைகளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று தப்பித்துக் கொள்வதும் போலி கம்யூனிஸ்டுகளின் கைவந்த கலை. ஆனால், போலி கம்யூனிச சுல்தான்களின் கொட்டம் ஏதோ விதிவிலக்காக அல்லாமல் இப்போது விதியாகவே மாறி விட்டது.

கடந்த நவம்பர் 12-ஆம் தேதியன்று 24 பர்கானா மாவட்டத்திலுள்ள கன்ச்ரப்பா எனும் கிராமத்தில், மீன் ஏலம் -

**உயிரோடு எரிக்கப்பட்ட சி.ஐ.டி.யு. தலைவனின் குடும்பத்தினர்: தொழிற்சங்க ரவுடித்தனத்தின் எதிர்விளைவு.**





படிப்பகம்

www.padippakam.com



வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் ஆதிக்கப் போட்டா போட்டியில் சி.பி.எம். தாதாக்கள் இரு பிரிவாக நின்று மோதிக் கொண்டனர். இதில் கட்சி ஊழியர் நிரஞ்சன் சர்க்கார் கொல்லப்பட்டார்; பலர் படுகாயமடைந்தனர். 5 வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. - இதுதான் போலி கம்யூனிஸ்டுகளின் யோக்கியதை!

## "தொழிலாளர்கள் போராடக் கூடாது; போராடினாலும் உற்பத்தி பாதிப்படையக் கூடாது" — போலி கம்யூனிஸ்டு தலைவர்களின் உபதேசம்

"தொழிற்சங்கங்கள் தமது போராட்ட உத்தியை மாற்றிக் கொள்ள வேண்டும்; தொழிலாளர்கள் அடிக்கடி போராட்டம் நடத்தக் கூடாது; தமது கோரிக்கைகளுக்காகப் போராடினாலும் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்குமாறு போராடவேண்டும்." - இப்படி உபதேசம் செய்வது காங்கிரசு - பா.ஜ.க. கட்சித் தலைவர்களோ அல்லது கருங்காலி தொழிற்சங்கத் தலைவர்களோ அல்ல. "வங்கத்து சிங்கம்", "தொழிலாளி வர்க்கத்தின் நம்பிக்கை நட்சத்திரம்" என்றெல்லாம் வருணிக்கப்படும் சி.பி.எம். கட்சித் தலைவர்களுள் ஒருவரும் மே.வங்க முன்னாள் முதல்வருமான ஜோதிபாசுதான் இப்படி தொழிலாளி வர்க்கத்துக்கு உபதேசம் செய்துள்ளார்.

"தாராளமயம் - உலகமயக் கொள்கைகளின் மூலம் மைய அரசு தொழிலாளி வர்க்கத்தின் மீது புதிய வடிவில் தாக்குதல் நடத்துவதால், தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் புதிய வடிவில் போராட்டங்களை நடத்த வேண்டும்" என்று கர்ஜித்த ஜோதிபாசு, தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் வேலையில்லா இளைஞர்களும் ஓரணியில் திரண்டு போர்க்குணமிக்க போராட்டங்களைப் புதிய வடிவில் நடத்த அறைகூவல் விடுக்கவில்லை. "உலகமயமாக்கலால் உள்நாட்டுத் தொழில்கள் நெருக்கடியில் சிக்கி, ஏகபோக நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டிய நிலையில் உள்ளது; தொழிலாளர்கள் போராடினால் உற்பத்தி பாதிக்கப்பட்டு ஆலையை மூடும் அபாயம் நேரிடும்; அதனால் தொழிலாளிகளுக்குத்தான் பாதிப்பாகும். எனவே, உற்பத்திக்கு பாதிப்பு ஏற்படாமல், தொழிலாளிகள் நிலைமையை உணர்ந்து போராட வேண்டும்" என்று எச்சரிக்கையுடன் கூடிய உபதேசத்தை ஜோதிபாசு வழங்கியுள்ளார். குருவை விஞ்சும் சீடனாகிய மே.வங்க தொழிற்துறை அமைச்சர் நிருபம் சென், "தொழிற்சங்கங்களின் போர்க்குணமிக்க போராட்டங்களையோ, திடீர் வேலை நிறுத்தங்களையோ இடதுசாரி அரசு ஒருபோதும் அனுமதிக்காது" என்று பகிரங்கமாகவே மிரட்டியுள்ளார்.

இவையெல்லாம் பத்திரிகைகளுக்கு அளிக்கும் பேட்டியில் இத்தலைவர்கள் போகிறபோக்கில் உளறியவை அல்ல. கடந்த நவம்பர் 20-22 தேதிகளில் நடந்த மே.வங்க மாநில சி.ஐ.டி.யு. மாநாட்டில்தான் இத்தலைவர்கள் பேசியுள்ளனர். இருப்பினும், இத்துரோகத்தனத்தை எதிர்த்து முணுமுணுக்கக்கூட முன்வராமல் சி.ஐ.டி.யு.தலைவர்கள் மாநாட்டில் வாலைச்சுருட்டிக் கொண்டு முடங்கிக் கிடந்தனர். இம்மாநாட்டில், மாநிலத்தில் கனரக ஆலைகளைத் தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இடதுசாரி அரசு முயற்சிக்க வேண்டும் என்று சி.ஐ.டி.யு. கோரியது. ஆனால், இடதுசாரி ஆட்சியாளர்களோ, இத்தகைய ஆலைகள் தொடங்கினால் தொழிலாளர் பிரச்சினைகளும் போராட்டங்களும் அதிகரித்துவிடும்; அதன் காரணமாக அந்நிய முதலீடுகள் குறைந்துவிடும் என்று கூறி, அதிகம் தொல்லை தராத தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், சேவைத்துறை நிறுவனங்கள், ஏற்றுமதி அடிப்படையிலான சிறுதொழிற்கூடங்கள் முதலானவற்றுக்கே முன்னுரிமை தரப்படும் என்று சி.ஐ.டி.யு.வின் கோரிக்கையைப் புறக்கணித்து தமது ஏகாதிபத்திய கைக்கூலித்தனத்தை வெளிப்படையாகவே அறிவித்தனர். மாநிலத்தைத் தொழில்மயமாக்கத் தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் ஒத்துழைத்து தியாகம் செய்ய வேண்டும் என்று அருள்வாக்கு அளித்தனர்.

மே.வங்க சி.ஐ.டி.யு. மாநாட்டில், நேற்றுவரை சி.ஐ.டி.யு. செயலாளராக இருந்த சிட்டப்பிரதா மசும்தார் கழித்துக் கட்டப்பட்டு காளிகோஷ் புதிய செயலாளர் ஆக்கப்பட்டுள்ளார். ஏனெனில் மே.வங்க முதல்வராக புத்ததேவ் பட்டாச்சார்யா பதவியேற்றதும், "தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டால் கடுமையாக ஒடுக்குவோம்!" என்று எச்சரித்ததைக் கண்டித்து, "சி.பி.எம். கட்சியில் முதலாளித்துவ எடுபிடிகள் வளர்ந்து விட்டார்கள்" என்று சாடியவர்தான் இவர். எனவேதான், இவருக்கு சி.ஐ.டி.யு. அகில இந்திய மாநாட்டில் தேசியப் பதவி அறிப்பதாகக் கூறி, ஓரங்கட்டி முடக்கி வைத்துள்ளனர்.

## குஜராத்: 'இந்துக்களை' அச்சுறுத்தும் இந்துவெறி பயங்கரவாதிகள்

கோத்ரா சம்பவத்தைச் சாக்கிட்டு ஆயிரக்கணக்கான முஸ்லீம்களைப் படுகொலை செய்து இந்து வெறி பாசிச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட குஜராத்தின் மோடி ராஜ்ஜியத்தில், இப்போது 'இந்துக்களே' இந்துவெறி பயங்கரவாதிகளுக்கு எதிராகக் கலகக் குரலெழுப்பத் தொடங்கியுள்ளனர். கோத்ரா ரயில் விபத்தில் 59 பேர் தீயில் சிக்கி மாண்டதற்கு முஸ்லீம்களின் சதிதான் காரணம் என்ற இந்து வெறியர்களின் கோயபல்சு புளுகை இப்போது இந்துக்களே நம்பத் தயாராக இல்லை. பயங்கரவாத மோடி கும்பலிடமிருந்தும் விசுவ இந்து பரிசத் குண்டர்களிடமிருந்தும் தமக்குப் பாதுகாப்பு கோரி போலீசு ஆணையரிடம் மனு கொடுக்குமளவுக்கு இந்துக்களிடமிருந்தே இந்து வெறியர்கள் தனிமைப்பட்டுப் போயுள்ளனர்.

டாக்டர் கிரிஷ்சந்திர ராவல் என்பவர், ராமோல் வட்டாரத்தைச் சேர்ந்த அறுவை சிகிச்சை மருத்துவர். டாக்டர் ராவலின் மனைவியும் இப்பகுதியிலுள்ள சிலரும் கோத்ரா ரயில் விபத்தில் சிக்கி மாண்டு போயுள்ளனர். கோத்ரா விபத்தில் சிக்கி மாண்ட 59 பேரில் 11 பேர் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள். மாண்டு போனவர்களின் உறவினர்கள் மட்டுமின்றி, டாக்டர் ராவலும், இது முஸ்லீம்களின் கொலை வெறியாட்டம் என்று இந்து வெறியர்கள் அவிழ்த்து விட்ட அண்டப் புளுகையே உண்மை என்று நம்பினர்.

ஆனால், கோத்ரா விபத்தைக் காட்டி இந்துவெறியர்கள் நடத்திய பயங்கரவாத வெறியாட்டமும், அரசியல் ஆதாயத்துக்காக அவர்கள் நடத்திய கௌரவ யாத்திரைகளும், மாண்டுபோனவர்களின் உறவினர்களுக்கு விடுக்கும் எச்சரிக்கைகளும் மிரட்டல்களும் படிப்படியாக அவர்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com



இந்து வெறியர்களின் உண்மைச் சொரூபத்தைக் காட்டி விட்டது. கோத்ராவில் நடந்தது விபத்தா, அல்லது முஸ்லீம்களின் சதியா என்ற உண்மை அறியும் நேர்மையான விசாரணை கூட நடத்த விடாமல் இந்து வெறியர்கள் சதி செய்கிறார்கள் என்று டாக்டர் ராவலும் இப்பகுதியைச் சேர்ந்தோரும் குற்றம் சாட்டுகின்றனர். ''எங்களை பா.ஜ.க.வினரும் விசுவ இந்து பரிசத் குண்டர்களும் தமது கண்காணிப்பு - கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அச்சுறுத்துகின்றனர். தமது விருப்பத்துக்கு - நோக்கத்துக்கேற்ப நாங்கள் சாட்சியமளிக்க வேண்டுமென்று மிரட்டுகின்றனர். கோத்ரா துயரத்தை வைத்து பா.ஜ.க.வும் வி.இ.ப.வும் யாத்திரைகள் நடத்தி அரசியல் ஆதாயம் தேடுவதிலேயே குறியாக உள்ளது என்று டாக்டர் ராவல் வெளிப்படையாகவே சாடுகிறார்.

இந்துவெறியர்களின் சூழ்ச்சிகள் - சதிகளை உணர்ந்துள்ள டாக்டர் ராவல், உச்ச நீதிமன்றத்துக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், கோத்ரா ரயில் விபத்து உள்ளிட்டு அனைத்து முக்கியமான வழக்குகளையும் குஜராத்துக்கு வெளியே வைத்து விசாரணை செய்து உண்மையைக் கண்டறிந்து குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். ராமோல் வட்டாரத்தினரும் இவருக்கு ஆதரவாக உள்ளனர். இதைக் கண்டு ஆத்திரமடைந் இந்து வெறியர்கள் அவரை ''இந்து துரோகி'' என்று முத்திரைக் குத்திப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். குறிப்பாக, விசுவ இந்து பரிசத்தின் பயங்கரவாத செயலாளராகிய பிரவீண் தொகாடியா, தான் செல்லுமிடமெல்லாம் டாக்டர் ராவலுக்கும் ராமோல் வட்டாரத்தினருக்கும் எதிராக வெறியூட்டும் பிரச்சாரத்தைச் செய்து வருகிறான். ''கோத்ரா விபத்தில் மாண்டு போனவர்களின் உறவினர்களை விசுவ இந்து பரிசத் தனது முழு பாதுகாப்பில் வைத்துக் கொண்டு அச்சுறுத்தி வருகிறது. இவர்கள் வி.இ.பரிசத்தால் பின்னப்பட்ட சதி வலையில் சிக்கித் தவிக்கின்றனர். இவர்களது எந்தபொரு நடவடிக்கையும் இச்சதிகாரர்களுக்குச் சாதகமாக அமையும் அபாயம் உள்ளது. எனது உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து சூழ்ந்துள்ளது'' என டாக்டர் ராவல் இப்போது போலீசு ஆணையருக்குக் கடிதம் எழுதி பாதுகாப்பு கோரியுள்ளார்.

# பொது மயானத்திற்கான போராட்டம்: சந்தி சிரித்தது சி.பி.எம்.இன் யோக்கியதை

இராசபாளையம் 41 வது வார்டில் உள்ள தெற்கு வெங்கா நல்லூர் பஞ்சாயத்தை சேர்ந்த தோழர் லீலாவதி நகர், இ.எஸ்.ஐ. நெசவாளர் குடியிருப்பு, வெங்கடேஸ்வரா நகர் மற்றும் இ.எஸ்.ஐ. நெசவாளர் குடியிருப்பு முன்புறம் பகுதிகளில் 3000 குடும்பங்கள் 30 ஆண்டுகாலமாக வாழ்கிறார்கள்; ஆனால், இறந்தவர்களைப் புதைப்பதற்கு இப்பகுதியில் மயானம் கூட இல்லை.

இப்பகுதிவாழ் மக்களின் தொடர்ச்சியான பல போராட்டங்களுக்குப் பிறகு, அருகிலுள்ள புறம்போக்கு நிலத்தை மயானமாகப் பயன்படுத்தலாம் என்று ஊராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பஞ்சாயத்து துணைத் தலைவர் கிரேசியின் கணவரும் புரோக்கருமான ஆப்ரகாம், இத்தீர்மானத்தால் ஆடிப்போனார். அவசரமாக, ஒரு கும்பலை சேர்த்துக் கொண்டு, அவ்விடத்தை 'பிளாட்' போட்டு விற்கும் முயற்சியில் இறங்கினார். அப்பகுதியில் இயங்கும் பு.ஜ.தொ.மு. ஆலோசனையின் பேரில் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஊர் மக்களைக் கொண்டு சுடுகாடு பாதுகாப்பு கமிட்டி கட்டப்பட்டது. கமிட்டியின் முடிவுப்படி, அவ்விடத்தில் ''பொது மயானம்'' என்று பெயர்ப் பலகை வைக்கப்பட்டது. இச்செய்தி மனு மூலம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கெல்லாம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வளவு நாளும் பிணமாக இருந்த அதிகார வர்க்கம், உயிர்த்தெழுந்து ஓடிவந்தது! தாசில்தார் சங்கரநாராயணன், பெயர்ப் பலகையை எடுக்கும்படி நேரடியாக மக்களை மிரட்டினார். அதன்பிறகு, மர்மமான முறையில் பெயர்ப் பலகை காணாமல் போனது. இதைத் திருடியது ஆப்ரகாம் கும்பல்தான் என்பது மக்களுக்கு தெரிந்து போனது. பிரச்சினை பெரிதானது.

சாயம் போன நரியாக இப்போராட்டத்தில் மக்களிடம் மாட்டிக் கொண்டது 'மார்க்சிஸ்ட்' கட்சி. நிலபுரோக்கர்களுக்கு ஆதரவாக நின்ற அக்கட்சியின் இராசபாளையம் நகரச் செயலர் கணேசனின் கருங்காலித்தனத்தை, இப்பகுதிவாழ் மக்கள் துண்டு பிரசுரம் போட்டு நாறடித்தனர்.

ஒருபுறம், மயானத்திற்காக தர்ணா, பாடை ஊர்வலம் நடத்திக் கொண்டே, மறுபுறம் மயான்த்திற்கு புரோக்கரிடம் பேரம் பேசிய கணேசனைக் கண்டித்து, பு.ஜ.தொ.மு. பலமுனைகளில் போராடியது. ''சி.பி.எம் - நிலபுரோக்கர் கூட்டணியின் கூட்டுச் சதியை முறியடிப்போம்!'', ''மக்கள் விரோதி கணேசனுக்கு வக்காலத்து வாங்கும் இராசை சி.பி.எம். நகர் குழுவே பதில் சொல்!'' என்று துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு பிரச்சாரத்தை எடுத்துச் சென்றது.

மயானப் பிரச்சினை சம்பந்தமாக, ஊர் மக்கள் கூட்டிய கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் அதைச் சீர்குலைத்த சி.பி.எம்., தாசில்தார் கூட்டிய கூட்டத்தில் முதல் இருக்கையில் அமர்ந்துக் கொண்டது. ''மயானத்தை வேறு இடத்தில் வைத்துக் கொள்ளலாம்; அந்தக் குறிப்பிட்ட இடம் வேண்டாம்'' என்று பச்சையாக, புரோக்கர்கள் பின்னால் ஒளிந்து கொண்டது.

'ஒரணியில் மக்கள் திரண்டு விடுவார்களோ' என்று பீதியுற்ற அதிகாரிகளின் வயிற்றில் இது பால்வார்த்த கதையானது. இப்போது, மயானப் பிரச்சினையை மண்ணோடு குழி தோண்டி புதைக்கப் பார்க்கிறது, அதிகார கும்பல். பு.ஜ.தொ.மு. இதைப் பரவலாக அம்பலப்படுத்திப் பிரச்சாரம் செய்தது.

இதனால், ஆட்டம் கண்ட சி.பி.எம். ரௌடிகள், முருகன் என்ற பு.ஜ.தொ.மு. தோழரைக் கொடூரமாக, பேடித்தனமாகத் தாக்கினர். போலீசு நிலையத்தில் பொய்ப் புகாரும் கொடுத்தனர்.


தாக்கப்பட்ட தோழர், சில மாதங்களுக்கு முன்னர்தான் சி.பி.எம். கட்சியிலிருந்து வெளியேறி பு.ஜ.தொ.மு.வில் இணைந்தவர். மேலும், மயான பிரச்சினையில், பு.ஜ.தொ.மு. பற்றி சி.பி.எம். போட்ட, அவதூறு துண்டு பிரசுரத்தையும் மக்கள் மதிக்கவேயில்லை. போராடும் அமைப்பு, பு.ஜ.தொ.மு. தான் என்று மக்கள் தம் வீடுகளில் செய்யும் பிரச்சாரமே இதற்கு சான்று!

— பு.ஜ.தொ.மு., இராசபாளையம்.



படிப்பகம்

www.padippakam.com



## குற்றவியல் சட்டத் திருத்தப் பரிந்துரை:

# “ஒரு பொடா சட்டம் போதாது!”

மாசானமுத்து - மதுரை மாவட்ட செல்லம்பட்டியைச் சேர்ந்த கூலி விவசாயி. மதுரை மாநகரிலுள்ள தனது உறவினர் வீட்டுக்கு வந்துவிட்டு ஊர் திரும்ப முயன்ற அவர் கடைசிப் பேருந்தைத் தவறவிட்டு, அன்றிரவு பேருந்து நிலையத்திலேயே படுத்து உறங்கினார். பின்னிரவில் அங்கு ரோந்து சுற்றிய போலீசார் அவரைத் தட்டி எழுப்பி போலீசு நிலையத்துக்கு அடித்து இழுத்துச் சென்றனர். அங்கே கும்பலாக போலீசார் சூழ்ந்து கொண்டு அவரை மிருகத்தனமாக வதைத்தனர். ''நான் எந்தத் தப்பும் செய்யலீங்க ஐயா!'' என்று அவர் கதறிய போதும் போலீசார் அவரை விடவில்லை. ''கூட்டாளிகளுடன் சேர்ந்து கொண்டு திருடியதாக ஒப்புக் கொள்!'' என்று அவரை அடித்து நொறுக்கிக் கொட்டடியில் அடைத்தனர்.

அண்மையில் மதுரையில் நடந்த ஒரு திருட்டு வழக்கில் அவரைச் சேர்த்த போலீசார், மறுநாள் வழக்கு மன்றத்துக்குக் கொண்டு சென்று சிறையில் அடைத்தனர். எந்தக் குற்றமும் செய்யாத அவர் 15 நாட்கள் சிறையில் அடைபட்டுப் பரிதவித்த நிலையில் மீண்டும் 15 நாட்களுக்கு காவல் நீட்டிக்கப்பட்டது. இப்படியே பல 15 நாட்கள் மாறிமாறி தொடர்ந்தது. 3 மாதத்திற்குள் போலீசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து விடுவார்கள்; அதன் பிறகு பிணையில் வெளியே வந்துவிடலாம் எனச் சிறையிலுள்ள சக விசாரணைக் கைதிகள் அவருக்கு ஆறுதல் கூறினர். ஆனால், மூன்று மாதங்களுக்கு மேலாகியும் போலீசார் எந்தக் குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யவில்லை. விசாரணையும் நடக்கவில்லை. மாசானமுத்துவுக்குப் பிணையும் கிடைக்கவில்லை. கடந்த ஈராண்டு காலமாக அவர் விசாரணைக் கைதியாகச் சிறையிலே வாடுகிறார்.

மாசானமுத்து மட்டுமல்ல; அவரைப் போன்ற கூலி - ஏழைகளும் அப்பாவிகளும் ஏறத்தாழ 2.7 லட்சம் பேர் விசாரணைக் கைதிகளாக ஆண்டுக்கணக்கில் இந்தியச் சிறைகளிலே வாடுகின்றனர். தற்போதுள்ள இந்தியக் குற்றவியல் நீதித்துறை அமைப்பு இப்படி கேடுகெட்ட நிலையில் உள்ளபோது, அதைச் சீர்திருத்தி மாற்றியமைக்கப் போவதாகக் கூறிக் கொண்டு மைய அரசு மூன்றாண்டுகளுக்கு முன்பு ஒரு குழுவை அமைத்துப் பரிந்துரைகளைக் கோரியது.

கொடுமை, கொடுமை என்று கோயிலுக்குப் போனால், அங்கே ஒரு கொடுமை எதிரிலே நின்றதாம் என்ற கதையாக, குற்றவியல் நீதித் துறை அமைப்பைச் சீர்திருத்தக் கிளம்பிய இக்குழு, சட்டங்கள் கடுமையாக இருந்தால் குற்றங்களை ஒடுக்கிவிடலாம் என்ற பீடிகையுடன் கொடிய பாசிச சட்டங்களைப் பரிந்துரைத்துள்ளது.

இதன்படி, தற்போது குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு விசாரணைக் கைதியாகச் சிறையிலடைக்கப் பட்டுள்ள ஒருவரது காவல் நீடிப்பு 15 நாட்களுக்கு ஒருமுறை என்ற நடைமுறை மாற்றப்பட்டு, இனி 30 நாட்களுக்கு ஒருமுறை என்பதாக நடைமுறைப்படுத்தப்படும். 90 நாட்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்கலாம் என்று தற்போதுள்ள நடைமுறை மாற்றப்பட்டு, 180 நாட்களுக்குப் பின்னரே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து பிணை வழங்கப்படும். அவசியமானால், குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்ய போலீசார் கால நீட்டிப்பு செய்து கொள்ளவும் முடியும். அதாவது, மாசானமுத்து போன்ற அப்பாவிகள், 6 மாத காலத்துக்கு சிறையில் அடைபட்டுப் பிணையில் கூட வெளியில் வர முடியாமல் பரிதவிப்பார்கள்.

இப்படி பல கொடிய பாசிசப் பரிந்துரைகளையே மைய அரசு நியமித்த வி.எஸ். மாலிமத் என்பவரது தலைமையிலான குழு அறிக்கையாகச் சமர்ப்பித்துள்ளது. கேரள, கர்நாடக உயர் நீதிமன்றங்களில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய மாலிமத் உள்ளிட்டு ஆறுபேர் இக்குழுவில் அங்கம் வகித்தனர். ஏறத்தாழ ஈராண்டு காலம் குற்றவியல் நீதிமன்ற நடைமுறைகள், செயல்பாடுகள் பற்றி ஆராய்ந்தும், பல வல்லுநர்களிடம் கருத்துக்களைக் கேட்டும் பரிந்துரைகளைத் தயாரித்துள்ளதாகக் கூறும் இக்குழு, கடந்த ஏப்ரலில் உள்துறை அமைச்சகப் பொறுப்பிலுள்ள துணைப் பிரதமர் அத்வானியிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இந்தப் பரிந்துரை அறிக்கை பற்றி மைய அரசு மௌனம் சாதித்து வந்தது.

இந்நிலையில், குஜராத் பெஸ்ட் பேக்கரி எரிப்பு வழக்கு தொடர்பாக மனித உரிமை ஆணையத்தின் மனு டெல்லி உச்ச நீதிமன்றத்துக்கு வந்த போது, சாட்சிகளைப் பாதுகாக்க மாலிமத் குழு அளித்துள்ள பரிந்துரைகள் என்ன என்றும், இதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பது பற்றியும் மைய அரசிடம் உச்ச நீதிமன்றம் விளக்கம் கேட்டது. அதன் பிறகே மைய அரசு மாலிமத் குழு அறிக்கை பற்றி வாய் திறந்தது. இக்குழு அளித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்ய உள்ளதாகவும், இது பற்றி ஒரு வரைவைத் தயாரித்திருப்பதாகவும் அறிவித்தது. ஆக, மாலிமத் குழுவின் பரிந்துரைகள் விரைவில் சட்டமாக்கப் பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தப் படும் என்பது நிச்சயமாகிவிட்டது.

தற்போது இந்தியக் குற்றவியல் நீதித்துறை அமைப்பானது, குற்றம் சாட்டும் அரசு தரப்பு - குற்றத்தை மறுக்கும் எதிர்த் தரப்பு ஆகிய இரண்டையும் நடுநிலையான நீதிபதியின் முன்வைத்து, அவரது தீர்ப்பைக் கோரும் எதிரெதிர் நிலை அமைப்பாக (adversarial system) உள்ளது. இது பிரிட்டிஷ் குற்றவியல் நீதித்துறை அமைப்பின் வழியில் அமைந்துள்ளது. இவ்வமைப்பை ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ளது போன்ற உண்மையைத் தேடும் ஆய்வுத் தன்மை கொண்ட அமைப்பாக (Inqusitorial system) மாற்ற



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும் என்று மாலிமத் குழு பரிந்துரைத்துள்ளது. இம்மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அது இந்திய போலீசுத் துறைக்கு மேலும் வரம்பற்ற அதிகாரத்தை அளித்துவிடும். ஏட்டில் உள்ள மனித உரிமை பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் கிழிக்கப்பட்டு, கேள்விமுறையற்ற போலீசு அடக்குமுறையும் சித்திரவதையும் சட்டபூர்வமாகிவிடும்.

தற்போதைய குற்றவியல் சட்ட அமைப்பானது, குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை ஏதுமறியாத அப்பாவியாகவே வழக்கில் எடுத்துக் கொள்கிறது. எனவே, அவரைக் குற்றவாளி என்று நிரூபிக்கும் பொறுப்பு அரசின் - போலீசுத் துறையின் கடமையாக விடப்படுகிறது. இதன்படி குற்றத்தை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்தால்தான் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று கருதப்படுவார். இல்லையெனில், சந்தேகத்தின் பலனைக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்து, அவர் நிரபராதியென விடுதலை செய்யப்படுவார்.

இத்தகைய நடைமுறை சரியில்லை என்கிறது மாலிமத் குழு. இத்தகைய நடைமுறையால் சட்டத்தின் பலவீனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு குற்றவாளிகள் தப்பிவிடுகிறார்கள் என்றும்; இக்குற்றவாளிகள் எவ்விதத் தடயமும் இல்லாமல் குற்றங்களைச் செய்யும் நுட்பத்தில் மேம்பட்டவர்களாக உள்ளனர் என்றும்; பிரபல வழக்குரைஞர்களைக் கொண்டு வழக்கிலிருந்து விடுதலையாகி விடுகின்றனர் என்றும் மாலிமத் குழு அடுக்குகிறது. எனவே, குற்றவியல் அமைப்பு முறையை மாற்றி, இந்தியத் தண்டனைச் சட்டம், சாட்சியங்கள் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஆகியவற்றில் அவசியமான திருத்தங்களைக் கொண்டு வரவும் இக்குழு பரிந்துரைக்கிறது.

சட்டத்தின் பலவீனத்தைக் கொண்டு தப்பிவிடும் குற்றவாளிகள் யார், பிரபல வழக்குரைஞர்களின் உதவியுடன் விடுதலையாகிவிடும் குற்றவாளிகள் எவ்வளவு பேர் என்பதற்கு எந்த ஆதாரத்தையும் இந்தக் குழு காட்டவில்லை. இத்தகையோர் அரசியல் பலமும் போலீசு - நீதித்துறை ஆதரவும் பணபலமும் கொண்ட ஓட்டுக்கட்சிப் பிரமுகர்களும் ஒரு சில கிரிமினல் பேர்வழிகளும் தான்.



**“சிறப்புச் சட்டமாக உள்ள பயங்கரவாத பொடா சட்டத்தையே நிரந்தரமாக்கி, பொடா ராஜ்ஜியம், போலீசு ராஜ்ஜியமாக்கும் வகையில்தான் மாலிமத் குழுவின் பரிந்துரைகள் உள்ளன.”**

நாடெங்கும் உள்ள சிறைகளில் அடைபட்டுள்ள கைதிகளில் 70% பேர் விசாரணைக் கைதிகளாவர். இவர்களில் பெரும்பான்மையினர் அடித்தட்டு உழைக்கும் வர்க்கத்தினர். மாலிமத் குழு கூறுவது உண்மையாக இருக்குமானால், இவர்கள் அனைவரும் பிரபல வழக்குரைஞர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டு விடுதலையாகியிருக்க வேண்டும். ஆனால், சாதாரண வழக்குரைஞரை அமர்த்திக் கொள்ளக் கூட இவர்களால் இயலாது. அரசாங்கத்தின் இலவச சட்ட உதவி கூட இவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஏனெனில், பல மாநிலங்களில் இலவச சட்ட உதவிக்குத் தரப்படும் தொகை மிக அற்பமானது. இதைப் பெற்றுக் கொண்டு ஆஜராக எந்த வழக்குரைஞரும் முன்வருவதுமில்லை.

இப்படி எவ்வித அடிப்படையுமற்ற வாதங்களுடன், பெருகிவிட்ட குற்றங்களைப் பற்றிப் பீதியூட்டி, குற்றங்களைத் தடுக்கக் கடுமையான சட்டங்கள் வேண்டும் என்கிறது மாலிமத் குழு. கொசுக்கள் பெருகிவிட்டால் வீரிய கொசுவர்த்திச் சுருளைக் கொளுத்த வேண்டும் என்பதுதான் இக்குழுவின் வாதம். மாறாக, கொசுக்கள் பெருகுவதற்குக் காரணமான சாக்கடையைச் சுத்தம் செய்வது பற்றி இக்குழு வாய் திறப்பதில்லை.

திருட்டு, கொள்ளை முதல் ஓட்டுக் கட்சிகளின் ஊழல், மோசடி, அதிகார வர்க்கத்தின் சூறையாடல் வரை குற்றச் செயல்கள் பெருகுவதற்கு இன்றைய சமுதாய நிலைமைகள்தான் காரணம். வறுமையும் வேலையின்மையும் அடக்குமுறையும் நிலவும் இன்றைய சமுதாய அமைப்பைத் தகர்த்து, புதிய ஜனநாயக சமுதாய அமைப்பை நிறுவாதவரை பெருகிவரும் குற்றச் செயல்களைத் தடுத்துவிட முடியாது. ஆனால், சட்டங்களைக் கடுமையாக்கினால் குற்றங்களைக் குறைத்து விடலாம் என்று அடிமுட்டாள்தனமாக வாதிடுகிறது, மாலிமத் குழு. அதனடிப்படையில் கொடிய பாசிச அடக்குமுறைகளையே சட்டமாகப் பரிந்துரைந்துள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தாமாகக் குற்றத்தில் சிக்கிக் கொள்ளாதிருக்க மௌனம் சாதிக்க உள்ள உரிமையை (பிரிவு 20(3) ரத்து செய்யும் வகையில், குற்றவியல் நடைமுறைச்சட்டப் பிரிவு 313-ஐ மாற்றியமைக்க வேண்டும் என்கிறது மாலிமத் குழு. அதாவது ஒருவர் குற்றத்தை மறுக்காமல் மௌனமாக இருந்தாலே, அவரைக் குற்றவாளி என்று தீர்மானிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்தக் கோருகிறது.

இந்திய சாட்சியங்கள் சட்டப் பிரிவு 25-ஐ திருத்தி, பயங்கரவாத பொடா சட்டத்தின் பிரிவு 32-ன் வழியில் மாற்றியமைக்க வேண்டும் என்கிறது, மாலிமத் குழு. அதாவது, குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் ஒரு போலீசு அதிகாரியிடம் அளிக்கும் வாக்குமூலம் செல்லும் என்று சட்டத்தை மாற்றக் கோருகிறது. தற்போது போலீசார் அப்பாவி ஒருவரைப் பிடித்து வதைத்து பொய் வழக்கு போடும் நிலையில், போலீசாரிடம் அளித்த வாக்குமூலமும் செல்லுபடியாகும் என்றால் போலீசாரின் அடக்குமுறைக்கு எல்லையே இருக்காது.

இது மட்டுமின்றி, இந்திய சாட்சியங்கள் சட்டப் பிரிவு 54-ஐயும் மாற்றியமைக்க வேண்டும் என்கிறது மாலிமத் குழு. அதாவது, குற்றம் சாட்டப்பட்டவரின் முந்தைய நடத்தையை, தற்போது சுமத்தப்பட்டுள்ள குற்றத்திற்குத் தொடர்புடையதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றுள்ளதை மாற்றி, தொடர்புள்ளதாக்க வேண்டும் என்கிறது. இதன்படி ஒருவர் ஆடம்பர மோகம் கொண்டவராக, ஊதாரித்தனமாகச் செலவு செய்பவராக இருந்தால், அவரது இந்த நடத்தையைக் காரணமாகக் காட்டி, எனவே இவர்தான் திருடினார் என்று குற்றத்துக்கு ஆதாரம் காட்ட முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

பயங்கரவாத பொடா சட்டப்பிரிவு 27-ன் வழியில் சிறைக் கைதிகள் அடையாள சட்டத்தையும் மாற்ற வேண்டும் என்று மாலிமத் குழு பரிந்துரைத்துள்ளது. இதன்படி குற்றம் சாட்டப்பட்டவரின் கைரேகை, கால்தடம், புகைப்படம், இரத்தம், தலைமுடி, உமிழ் நீர் ஆகியவை அடையாளத்திற்காக போலீசாரால் எடுக்கப்படும். இவற்றுக்கு உடன்பட மறுத்தால், குற்றத்துக்கு ஆதாரமாக இவை காட்டப்படும். போலீசார் மிருகத்தனமாக வதைத்துச் சித்திரவதை செய்து இந்த அடையாள மாதிரிகளை பெறுவது சட்டபூர்வமாக்கப் பட்டு விடும். மொத்தத்தில், சிறப்புச் சட்டமாக உள்ள பயங்கரவாத பொடா சட்டத்தையே நிரந்தரமாக்கி, பொடா ராஜ்ஜியம், போலீசு ராஜ்ஜியமாக்கும் வகையில்தான் மாலிமத் குழுவின் பரிந்துரைகள் உள்ளன.

இப்பரிந்துரைகள் கூட சட்ட வல்லுநர்கள், மூத்த நீதிபதிகள், வழக்குரைஞர்கள், மனித உரிமை - ஜனநாயக உரிமை அமைப்பினர், அரசியல் கட்சியினர் - என சமூகத்தின் பலதரப்பட்டவர்களிடம் கருத்துக்கள், ஆலோசனைகளைக் கேட்டு ஜனநாயக ரீதியில் முடிவு செய்யப்பட்டவை அல்ல. இப்பரிந்துரைகளுக்கு 3,164 பேரிடம் வினாத்தாள்களைக் கொடுத்து கருத்துக் கேட்டதாகவும், இதில் 284 பேர் மட்டுமே பதிலளித்ததாகவும், அதனடிப்படையிலேயே இப்பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டதாகவும் மாலிமத் குழு ஒப்புக் கொள்கிறது. இதிலே, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியான ஏ.எம். அஹமதி, தான் தெரிவித்த எந்தவொரு பரிந்துரையுமே பரிசீலிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று இக்குழுவின் யோக்கியதையை அம்பலப்படுத்திச் சாடியுள்ளார். ''போலீசு ராஜ்ஜியத்தை நிறுவும் முயற்சியே, குழுவின் பரிந்துரைகள்'' என்றும் குற்றம் சாட்டியுள்ளார்

மாலிமத் குழு தனது பரிந்துரைகளைத் தயாரிக்க பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட 16 ஆய்வுத் தாள்களில் 4 ஆய்வுத் தாள்கள் உயர் போலீசு அதிகாரிகளால் தரப்பட்டவையாகும். பஞ்சாப் அரசு பயங்கரவாதியும், பஞ்சாப் முன்னாள் போலீசுத் துறை தலைவருமான கே.பி.எஸ். கில் அளித்த ஆய்வுத் தாள் இதில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆக, நீதித்துறை அறிஞர்களின் கருத்துக்களை விட, போலீசு பயங்கரவாதிகள் அளித்த கருத்தே மாலிமத் குழுவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.



**“நாட்டையே திறந்தவெளி சிறைச் சாலையாக்கி, குடிமக்கள் அனைவரையுமே குற்றவாளிகளாக்கி போலீசு ராஜ்ஜியத்தை நிறுவும் சட்டபூர்வ பாசிச நடவடிக்கையின் ஓர் அங்கம்தான் மாலிமத் குழுவின் பரிந்துரைகள்.”**

மேலும், மாலிமத் குழுவின் அணுகும் முறையும் வியாக்கியானமும் இந்துவெறி பாசிச பயங்கரவாத பார்வையிலேயே அமைந்துள்ளது. இந்திய அரசு காசுமீரில் எதிர்கொண்டிருப்பது அத்தேசிய இன மக்களின் உரிமைப் போராட்டம் அல்லவாம்; அது பாகிஸ்தானால் தூண்டிவிடப்படும் பதலிப் போராம்! இந்தியாவை அச்சுறுத்திக் கொண்டிருப்பது இந்து வெறி பாசிச பயங்கரவாதம் அல்லவாம்; மாறாக, இசுலாமிய அடிப்படைவாதமும் பயங்கரவாதமும் தானாம்! இப்படி இந்துவெறி - குறுகிய தேசிய வெறியைச் சித்தாந்தமாகக் கொண்ட ஆளும் வர்க்கத்தின் குரலையே மாலிமத் குழுவின் பரிந்துரைகள் எதிரொலிக்கின்றன.

பெருகிவரும் குற்றங்களைத் தடுக்க தண்டனைச் சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என்ற பீடிகையுடன் மாலிமத் குழுவின் பாசிசப் பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டுள்ள போதிலும், இன்னுமொரு முக்கியமான காரணத்துக்காகவும் நோக்கத்துக்காவும் இப்பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தை அப்படியே வைத்துக் கொண்டு அரசும் ஆளும் வர்க்கங்களும் செயல்படுத்தி வரும் தனியார்மய - தாராளமயக் கொள்கையை மேலும் தீவிரமாக்குவது எளிதாக இல்லை. பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்குப் பொருத்தமாக அரசியலமைப்புச் சட்டத்தையே மறுவார்ப்பு செய்வது அவர்களுக்கு அவசியமாக உள்ளது. இத்தேவைகளின் அடிப்படையில் சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்கள், தண்டனைச் சட்டங்கள், கம்பெனி சட்டங்கள் மற்றும் தொழிற்சங்க சட்டங்களையும் கூட மாற்றியமைப்பது ஆட்சியாளர்களுக்கு அவசியமாக உள்ளது.

இவற்றின் அடிப்படையில் ஏற்கெனவே உரிமையியல் (சிவில்) சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு, நீதித்துறையின் கட்டுமானம் முழுவதும் மாற்றியமைக்கப்பட்டு விட்டது. தொழிற்சங்க சட்டத்திருத்தம் உள்ளிட்டு வேலை நிறுத்தத் தடைச் சட்டம், எஸ்மா, டெஸ்மா முதலான கருப்புச் சட்டங்களும் பாசிச பயங்கரவாத பொடா சட்டமும் ஏவிவிடப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாகவே இப்போது குற்றவியல் சட்டத் திருத்தத்துக்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு, சட்டமாக்கப்படும் சதிகள் நடந்து வருகின்றன.

நாட்டையே திறந்தவெளி சிறைச் சாலையாக்கி, குடிமக்கள் அனைவரையுமே குற்றவாளிகளாக்கி போலீசு ராஜ்ஜியத்தை நிறுவும் சட்டபூர்வ பாசிச நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே மாலிமத் குழுவின் பரிந்துரைகள் உள்ளன. இவை சட்டமாக்கப்பட்டால், இந்துவெறி பாசிசத்தையும் மறுகாலனியாதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளும் குறிப்பாக, சிறுபான்மையினரும் தாழ்த்தப்பட்டோரும் குற்றவாளிகள் - பயங்கரவாதிகளாக்கப்பட்டு, கொடிய தண்டனைகளுடன் சிறையில் அடைக்கப்படுவர். மனித உரிமை - ஜனநாயக உரிமைகளும் நீதித்துறையின் பெயரளவிலான நடுநிலையும் கிழித்தெறியப்பட்டு பாசிச அடக்குமுறை சட்டபூர்வமாக்கப்பட்டுவிடும். பாசிச இருள் ஓங்கிவிட்ட இன்றைய நிலையில் குற்றவியல் சட்டத் திருத்தங்கள் உள்ளிட்டு அனைத்து பாசிச கருப்புச் சட்டங்களுக்கு எதிராகவும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகவும் ஐக்கியப்பட்டுப் போராடுவதே புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் இன்றைய அவசர, அவசியக் கடமையாக உள்ளது.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தாராளமயத்திற்குப் பலியாகும் விசைத்தறி தொழில்

உள்நாட்டுத் தேவையைப் புறக்கணித்துவிட்டு, பஞ்சும், நூலும் வரைமுறையின்றி ஏற்றுமதி செய்யப்படுவதால், கடந்த இரண்டே மாதங்களுக்குள் 50 கிலோ நூலின் விலை நூறிலிருந்து 140 ரூபாய் வரை மீண்டும் உயர்ந்துவிட்டது. இதனால், ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோவில் பகுதியில் இயங்கிவந்த 25,000 விசைத்தறிகளில், 15,000 விசைத் தறிகள் நிறுத்தப்பட்டு விட்டன. சென்னிமலை பகுதியில் இயங்கிவந்த தறிக்கூடங்கள் அனைத்தும் நவம்பர் மாத துவக்கத்தில் ஒரு வார காலம் கதவடைக்கப்பட்டன. வெள்ளக் கோவில் பகுதியில் மட்டும் 10,000 விசைத்தறி தொழிலாளர்களின் வேலை பறிபோய்விட்டது.

## போராடுவது கிரிமினல் குற்றமா?

பழனியில் உள்ள அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பல்கலைக்கழக மானியக் குழுவி டமிருந்து ஐந்து நட்சத்திர தகுதியைப் பெறுவதற்காக, அக்கல்லூரி மாணவிகள் சிலரை மிரட்டி, மானியக் குழு உறுப்பினர்களோடு அனுப்பி வைத்தது. கல்லூரி நிர்வா கத்தின் இந்தக் கீழ்த்தரமான நடவடிக்கையை எதிர்த்து, அக்கல்லூரி மாணவிகள் கடந்த சனவரி மாதம் பெரும் போராட்டத்தை நடத்தினர். இதையடுத்து, கல்லூரி நிர்வாகம் போராட்டத்தை முன்னின்று நடத்திய ஏழு மாணவிகளின் மாற்றுச் சான்றிதழில், அவர்களின் நடத்தையைப் பற்றித் தவ றாகக் குறிப்பிட்டு, அவர்களின் மேல்படிப்புக்கு வேட்டு வைத்து விட்டது. இந்தப் பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கில், நீதிமன்றம் அம்மாணவி களிடம், ''தங்களின் கல்லூரியின் பெயரைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட மாட்டோம்'' என எழுதி வாங்கிக் கொண்டு, அதன் பின்னரே மாற்றுச் சான்றிதழைத் திருத்தித் தர உத்தரவிட்டது.

## மத மாற்றத்தைத் தடுக்கப் புதிய உத்தி!

கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்த பிறகும், 'இந்து மதத்தில்' இருந்து வேறு மதத்திற்குத் தப்பி யோடுபவர்களின் எண்ணிக்கைக் குறையவில்லை. இதனால் தாமாக முன்வந்து மதம் மாறுபவர்களின் எண்ணிக் கையைக் குறைக்க வேறொரு மட்டரகமான நடவடிக்கையில் இறங்கி யுள்ளது தமிழக அரசு. மதம் மாறுபவர்கள், எழுது பொருள் அச்சுத்துறையில் விண்ணப்பங்களை வாங்கி, பூர்த்தி செய்து கொடுத்து, கெசட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பது விதி. இந்த மதம் மாறும் விண்ணப்பங்களை இனி வழங்க வேண்டாம் என வாய்மொழியாக உத்தர விட்டுள்ளது தமிழக அரசு. சீப்பை ஒளித்து வைத்தால், கல்யாணம் நின்று விடுமா?

## இலவசம் பாதி; கட்டணம் பாதி

சென்னையில் உள்ள புகழ்பெற்ற அரசு பொது மருத்து வமனையை நவீனமயப்படுத்துவதற்காக, புதிய கட்டிடங் களைக் கட்டி வருகிறது தமிழக அரசு. ஆனால், இந்த நவீன மயமாக்கலின் பின்னே அரசின் இலாப நோக்கம் ஒளிந்து கொண்டுள்ளது. புதிதாகக் கட்டப்படும் மருத்துவமனையில் 1700 படுக்கைகள் இருக்கும். இதில் 700 படுக்கைகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்படும். இரணியா அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள 3,000 ரூபாய்; இயற்கையாக குழந்தை பெறுவதற்கு 750 ரூபாய்; ''சிசேரியன்'' அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பெற 1,500 ரூபாய் எனப் பணம் கட்டி மருத் துவம் பார்த்துக் கொள்ளும் முறைகளையும் புகுத்தியுள்ளது தமிழக அரசு. ஒட்டகம் கூடாரத்தினுள் மூக்கை நுழைத்த கதையல்லவா, இது?


## விபச்சாரத்தில் தள்ளப்படும் இளஞ்சிறுமிகள்

மும்பையில் உள்ள சிவப்பு விளக்குப் பகுதிகளில் எடுக் கப்பட்ட புள்ளிவிவரத்தின் படி, அங்கு விலைமாதர்களாக இருக்கும் 70,000 பெண்களுள், 45 சதவீதம் பேர் இளஞ் சிறுமிகள் என்ற அதிர்ச்சிகரமான உண்மை அம்பலமாகியுள் ளது. இந்த இளஞ்சிறுமிகள் அனைவரும் 15 வயதில் இருந்து 17 வயதுக்கு இடைப்பட்டவர்கள். இந்த இளஞ்சிறு மிகள் தவிர்த்த, 28 சதவீத விலைமாதர்களின் வயது 18 அல்லது 19-க்குள் தான் இருக்கக் கூடும் எனக் குறிப்பிடுகி றது அப்புள்ளிவிவரம். இது தவிர, மும்பயில் உள்ள மது பான விடுதிகளில், மதுபானத்தை ஊற்றிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பெண்களில், 45 சதவீதம் பேர் இளஞ்சிறுமிகள்தானாம்!

## மோடி அரசின் பேயாட்டம்

குஜராத்தின் முன்னாள் உள்துறை அமைச்சர் ஹரேன் பாண்டியா மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட் டதை சாக்காக வைத்துக் கொண்டு, அகமதாபாத் நகர முசு லீம்கள் மீது கேள்வி முறையற்ற போலீசு ஒடுக்குமுறை கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மார்ச் தொடங்கிமே மாதத்திற்குள் 300 முசுலீம்கள் போலீ சாரால் சட்ட விரோதமாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். தற்பொழுது அவர்களுள் 150 பேரின் மீது ஐ.எஸ்.ஐ உளவாளி என்ற குற்றம் சுமத்தப்பட்டு, ''பொடா'' சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுவிட்டனர். இந்த முசுலீம் 'கைதிகளை', அவர்களின் நெருங்கிய உற வினர்கள் கூடச் சந்திக்க முடியாதபடி போலீசு கெடு பிடி தாண்டவமாடுகிறது.

**நூல் விலையேற்றத்தைக் கண்டித்தும், நூல் ஏற்றுமதியை நிறுத்தக் கோரியும் திருப்பூர் நகரில் நடந்த கடையடைப்புப் போராட்டம்.**



Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.
படிப்பகம்

www.padippakam.com




# இதுதான் இன்றைய இந்தியா

இந்தப் படத்தில் சென்னை - சென்ட்ரல் தொடர்வண்டி நிலையத்தில் உள்ள சிறப்பு பெருநகர நீதிமன்றத்தின் முன் நிற்கும் இந்த இளைஞர்கள் அனைவரும் பிறவியிலேயே கண்பார்வை இழந்தவர்கள். அப்பெருநகர நீதிமன்ற நீதிபதி கொஞ்சம் கருணை காட்டியதால், இவர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே நிற்கிறார்கள்; இல்லையென்றால், இந்நேரம் சிறைச்சாலைக்குள் இருந்திருப்பார்கள்.

கண்பார்வை இல்லாத படித்த பட்டதாரிகளான இவர்கள் அப்படியென்ன குற்றம் செய்துவிட்டார்கள் என்று கேட்கிறீர்களா? சென்னையில் ஓடும் புறநகர் மின்சாரத் தொடர்வண்டியில் கைக்குட்டை, பிளாஸ்டிக் கவர் போன்ற பொருட்களை விற்பனை செய்ததுதான், இவர்கள் செய்த குற்றம்!

இது குற்றமென்றால், இவர்களை இந்தக் குற்றத்தைச் செய்யத் தூண்டியது யார்? அரசாங்கம் தான்; தமிழக அரசு இவர்களுக்கு ஏற்ற வேலையை உருவாக்கித் தர மறுக்கிறது. அதனால், இவர்கள் தங்களின் வாழ்க்கையை நடத்த இந்த சுயதொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

பார்வை உள்ளவனே வாழ்க்கையை ஓட்டத் தட்டுத் தடுமாறும் பொழுது, பார்வை இழந்த நிலையிலும் மின்சார ரயில்களில் ஏறி, இறங்கி, பொருட்களை விற்று, சுயமாக உழைத்து, வாழ்க்கையை நடத்தும் இவர்களின் தன்னம்பிக்கையை அரசாங்கம் தட்டிக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அரசாங்கமோ அற்பத்தனமான விதியைக் காட்டி, இவர்களைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகிறது. இதனால் இவர்கள், மின்சாரத் தொடர் வண்டிகளில் பொருட்களை விற்கத் தங்களுக்கு உரிமம் வழங்க வேண்டும் என பார்வையற்றோர் சங்கம் மூலமாக கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

இவர்களின் கோரிக்கையைப் படித்துப் பார்க்கவாவது நமது அமைச்சர்களுக்கு நேரம் இருக்கிறதா? இதோ, இந்தப் படத்தைப் பாருங்கள். அமைச்சர்கள் ராமசாமியும், வைத்தியலிங்கமும், ஜெயா போட்ட உத்தரவுப்படி முதுமலை காட்டில் ஓய்வெடுக்கத் தங்க வைக்கப்பட்டிருக்கும் சங்கர மடத்து யானைக்குக் கரும்பைக் கொடுத்து, அதனைக் குஷி படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஊரே பற்றியெரிந்த பொழுது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதை தான் தற்பொழுது தமிழகத்தில் நடக்கிறது.



உழைக்கும் மக்கள் ஓய்வில்லாமல் உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்து போகிறார்கள். அவர்களின் எதிர்காலம் பற்றியோ, உடல்நலன் பற்றியோ அக்கறை கொள்ளாத ஜெயா, கோவில் யானைகளின் உடல் நலம் பற்றிக் கண்ணீர் சிந்துகிறார். யானைகள் ஓய்வெடுக்க அரசு செலவில் திட்டம் போடுகிறார். உழைக்கும் மக்கள் அடுத்த வேளை சோற்றுக்குப் போராடும் பொழுது, ஜெயாவோ கோவில்களில் ஒரு வேளை பூஜை நடக்க வேண்டியது பற்றிக் கவலை கொள்கிறார். அதற்காக அரசு நிதியை ஒதுக்குகிறார். வறுமை, வேலையின்மை போன்ற சாபக்கேடுகளில் இருந்து மக்களை மீட்டுக்க அக்கறைப்படாத ஜெயா, அழிந்து கொண்டிருக்கும் பார்ப்பன சனாதன தர்மத்தை மீட்டுக்க முனைப்பு காட்டுகிறார்.

அடுத்த வேளை சோற்றுக்காகத் தினம் தினம் போராடும் உழைக்கும் மக்கள் ஒருபுறம்; மறுபுறமோ, பாதி நேரம் உலக வங்கியின் உத்தரவையும், மீதி நேரம் கோவில்களையும், கோவில் குருக்கள்களையும், கோவில் யானைகளையும் பற்றி மட்டுமே அக்கறை காட்டும் பார்ப்பன ஜெயா ஆட்சி. ஜனநாயகம் என்ற பெயரில் நடக்கும் இம்மக்கள் விரோத அரசை இன்னும் எத்தனை நாள் சகித்துக் கொள்வது?